1306

Regd. No. 2569

22 JUN 1931

ஹிபாஜத்துல் இஸ்லாம்

HIFAZATH-UL-ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 2. | ஹிஜ்ரி 1350 முஹர்ரம்மீ 1931 ஜூன் மீ | இதழ் 6

உள்ளடக்கம் — பக்கம்

1.	ஸூரத்துல் ஆதியாத் ...	241
2.	நாயக வாக்கியம் ...	243
3.	நம் எதிர்காலவாழ்க்கை ...	245
4.	ஈமானின்சக்தி ...	248
5.	சென்னை மாகாண முஸ்லிம் 2-வது மகாநாடு ...	251
6.	முஸ்லிம் சமுதாயக் கொடும்பிணிகள் ...	255
7.	ஹதீதுகளை ஒழுங்குசெய்த முறை ...	258
8.	பெண்மையும், பர்தாவும் ...	262
9.	ஷஹாதத் ...	265
10.	இமாம் ஹுஸைன் (ரலி.) ஷஹாதத்தும், கர்பலாப்போரின் அகோரமும் ...	268
11.	பரிசுத்த முஹர்ரமும் ஆகாக் கருமங்களும்	271
12.	அறிவும், மதமும் அவசியமே ...	274
13.	டில்லி மாநகர் புராதனச் சிறப்புகள் ...	276
14.	உலக முஸ்லிம்களும், 'யவ்முந்நபீ' விழாவும் ...	280
15.	"யவ்முந்நபீ" கொண்டாட்டம் ...	284
16.	சுகாதாரம்—தலைநோய் ...	285
17.	விஞ்ஞான விகசிதங்கள் ...	286
18.	ஆசிரியர்குறிப்புகள் ...	288

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	... ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	... ,,	4 0 0
தனிப் பிரதி	... ,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الاسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 2	ஹிஜ்ரி 1350 முஹர்ரம் மீ 1931ௗ ஜூன் மீ	இதழ் 6

ஸூரத்துல் ஆதியாத்

நிகரற்ற அருளாளனும் அளவற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (நான் இதனை ஆரம்பிக்கின்றேன்).

(1) வயிற்றிலிருந்து சத்தம் வெளியான தாக ஒடுகின்றவற்றின்மீது பிரமாணமாக,

(1) பிறகு (மலைகள், கற்பாறைகளில் குளம்பை) அடித்து நெருப்புப் பறக்கச் செய் கின்றவற்றின் மீது, (பிரமாணமாக)

(3) பிறகு அதிகாலையில் தாக்கக் கூடிய வற்றின்மீது, (பிரமாணமாக)

(4) பிறகு (அதிகாலையில்) புழுதியைக் கிளப்புகின்ற வற்றின் மீது, (பிரமாணமாக)

(5) பிறகு (விரோதிகளது) கூட்டத்தில் நுழைந்து செல்லுகின்ற வற்றின்மீது, (பிர மாணமாக)

(6) நிச்சயமாக மானிடன் தன் நாயக னது நன்றி மறந்தவனா யிருக்கின்றான்.

(7) மேலும் நிச்சயமாக அவனே அதன் மீது சாக்ஷியாக யிருக்கின்றான்.

(8) மேலும் அவன் நிச்சயமாக பொரு ளாசையில் அழுத்தமானவனாக யிருக்கின் றான்.

(9) மேலும் புதை குழிகளிலுள்ளவைகள் எந்நேரத்தில் வெளியிலெடுக்கப்படுமென்பதை அவன் அறியவில்லையா ?

(10) நெஞ்சுகளி லுள்ளவைக ளடங்க கலும் வெளியாக்கப்படும். (என்பதை அறிய வில்லையா ?)

(11) நிச்சயமாக அந்நாளையில் அவர்களது நாயன் அவர்களை நன்கு அறிந்தவனாவன்.

[அஃதாவது, யுத்தம் புரியுங்கால் விரைந்து ஓடுவது கொண்டு வயிற்றினின்று சத்தம் உண்டாகும் குதிரைகளின் மீது சத்தியமாக, இன்னும் தம் குளம்புகளினால் கற்பாறை மலை இவைகளில் அடித்து தீப்பொறியைக் கிளப்பு கின்ற குதிரைகளின் மீது சத்தியமாக, இன் னும் இராக்காலங்களில் ஓடி அதிகாலையில் எதிரிகள் அயர்ந்து தூங்குங்கால் அவர்கள் மீது சென்று அவர்களது முதல் சாமான்கள் இவைகள் மீது தாக்கும் குதிரைகளின் மீது சத்தியமாக, மானிடன் தன் ஆண்டகையால் அருளப் பெற்ற காருண்யங்களுக்கு நன்றி

செலுத்தாமல் மாறுசெய்து கொண்டிருக்கின்றான். இவ்வாறு நன்றி செலுத்தாமலிருப்பதற்கு அவனே தனக்கு சாட்சியாகவுமிருக்கின்றான், இன்னும் அவன் தன் மனதில் ஐஸ்வரியத்தின் அளவற்ற பிரீதி குடிகொண்டிருப்பதால், அவ் ஐஸ்வரியங்களை அவனுக் களித்த கொடையாளியினது எண்ணத்தைதன் மனத்துட் கொண்டுவர இடமில்லாமலிருக்கின்றான். புதைகுழிகளிலுள்ளவைகளையும் பூமிக்குத்தாழ்மறைந்து கிடப்பவைகளையும் எப்போது வெளியில் எடுக்கப் படுமென்பதை மானிடன் அறியவில்லையா? அந்நாளையில் நெஞ்சுகளில் மறைந்து கிடக்கும் நிர்ணயம் முதலியன வெளியாவதால் ஒருவர் மற்றவரின் மனதில் மறைந்திருக்கும் இரகசியங்கள் யாவையும் தெரிந்துகொள்ள ஹேது வுண்டாகும். இவர்களின் எல்லா விஷயங்களையும் அந்நாளையில் அவர்களது நாயன் தெரிந்து கொள்வான் என்பதே.]

இவ் அத்தியாயம் இறக்கப் பெற்றதன் காரணமாவது:—உலக தயாளர் நபிகட் பெருமானார் (ஸல்.) அவர்கள் வாகனக்காரர்களினின்றும் ஓர் கூட்டத்தினரை முன்திறுப்னு அம்ர அன்ஸாரீ (ரலி.) அவர்கள்பால் ஒப்பித்து, குப்ரின் பேரிலேயே பிடிவாதமாயிருந்த ‘பனூகினனைக்' கூட்டத்தினரைக் குறித்து “இன்ன நாளில் அதிகாலையில் அக்குப்பார்களை எதிர்த்து அவர்களுக்கு தக்க தண்டனை புரிந்துவிட்டு இன்ன நாளைக்குள் இவ்விடம்திரும்பி வந்துவிட வேண்டு''மெனக் கட்டளை யிட்டிருந்தார்கள். அவ்வாறு அக்கூட்டத்தினர் விடைபெற்றுச் செல்லுங்கால் பாதையில் ஒரு நதி குறிக்கிட்டது. அந்நதியில் தண்ணீர் பிரவாகமா யிருந்தமையால் அதனைக் கடந்து செல்ல வசதி யில்லாதிருந்தது. என் செய்வதெனத் தோன்றாது அன்றையத்தினம் அங்கேயே தங்கிவிட்டனர். மறுநாள் தண்ணீர் வற்றியவுடன், அப்பட்டாளம் இரங்கிச்சென்று திருக்கட்டளைப் பிரகாரம் அதிகாலையிலேயே எதிரிகளைத் தாக்கி தண்டனை யளித்துவிட்டு, அவர்களது ஐஸ்வரியங்களை எடுத்துக்கொண்டு எவ்வித சேதமுமின்றி எல்லோரும் திரும்பி வந்துவிட்டனர். எனினும் நதியைக் கடக்க ஒரு நாள் தங்கிவிட்டபடியால் பெருமானார் (ஸல்.) அவர்கள் குறிப்பிட்டுள்ள பிரகாரம் வந்துசேர தாமதம் ஏற்பட்டுவிட்டது. இதனால் முனாபிக், (உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித் திரிவோர்) கள் “சென்ற பட்டாளங்களெல்லாம் சேதமடைந்துவிட்டன என்றறிவிப்பதற்குங்கூட எவருமில்லாது அழிந்துபோய் விட்டனர்'' என்ற வதந்திகளைக் கிளப்பினார்கள். முஸ்லிம்கட்கு இதனால் மாபெருந்துக்கம் ஜனித்தது. எனவே ஆண்டவன் இவ்வத்தியாயத்தை இறக்கிவைத்து அவர்களது குதிரைகளின் சமாசாரங்களையும், அவர்களது விரோதிகளின் கூட்டத்தில் அக்குதிரைகள் நுழைந்து அவர்களை சின்னபின்னமாக்கிச் சென்ற விபரத்தையும் முஸ்லிம்கட்கு ஆறுதலுண்டாகும் பொருட்டு அதில் விளக்கிக் காட்டியிருப்பது காண்க! சிலர் இஃது ‘மதீனா'வில் வெளியான தென்றபிப்பிராயப் படுகின்றனர். எனினும் இதன் விஷயப் போக்கை ஊன்றிக் கவனிக்கில் இஃது ‘மக்கா' வில் வெளியானதென்பது நன்கு புலனாகின்றது.

இதன் ஆறாம் வசனத்தில் திட்டமாக மானிடன் தன்னுடைய றப்பினால் அளிக்கப்பெற்ற காருண்யங்கட்கு நன்றி புரியாது மாறு செய்துகொண்டிருக்கின்றான் எனக் குறிப்பிடப் பெற்றிருக்கின்றது இவ்வாறு மாறு செய்தல் பல விதமா யிருக்கின்றன. முதலாவது அப்பாக்கியங்களை அளித்தவன் பக்கல் அவைகளைச் சேர்த்து இறைவனால் அப்பாக்கியங்கள் அளிக்கிப்பெற்றதெனக் கருதாமல் வேறொருவரால் கிடைக்கப்பெற்ற தென்றெண்ணுதல். உதாஹரணமாக, இற்றைய காலத்தில் பெரும்பாலோரிடையே செறிந்து கிடக்கும் துர்ப்பழக்கங்களை நாம் நோட்டமிட்டுப் பார்ப்போமாயின், அஃது நன்கு புலனாகும். எவ்வாறெனின், இன்ன ‘பீரா'னவர் எங்களுக்கு சந்ததிப் பாக்கியம் அளித்தார். இன்ன பெரியார் எங்கள் துக்கத்தை நீக்கினார் என்று கூறுதல். இரண்டாவது மானிடன் தனக்களிக்கப்பெற்ற பாக்கியங்களிலேயே அல்லும் பகலும் பராக்காகி அப்பாக்கியங்களை யளித்த கருணாகர நிதியை மறந்து அப்பாக்கியங்களின் பிரீதியே இவன்றன் னுள்ளத்தில் மிகைத்துப்போய் சதா அதிலேயே மூழ்கி ஆண்டவனை மறந்துவிடுதல். இத்தன்மைப்போலவே அநேகருக்கு இவ்வுலகின் பிரீதி அதிகரித்து இராப்பகல் அதிலேயே மூழ்கி இறைவன்றன் திருக் கட்டளைகளை மறந்திருப்பதைக் காண்கிறோம்.

இதன் ஏழாம்வசனத்தில் மானிடன் நன்றி மறந்திருப்பவனாயிருப்பதற்கு அவனுக்கு அவனே சாட்சியாயிருக்கின்றான் எனக் கூறப்பெற்றுள்ளது. அதன் கருத்தாவது மானிடன் மற்றவனை நோக்கி அவனுக்களிக்கப்பெற்ற பாக்கியங்களுக்கு நன்றிசெலுத்தற் கிடையாதென்று குறை கூறுகின்றான். தானும் தனக்களிக்கப் பெற்ற பாக்கியங்களுக்கு நன்றி செலுத்துவது கிடையாது. எனவே இவன் பிறரைக் குறை கூறல் தன்னைத் தானே குறை கூறுவதற் கொப்பாகின்றது. இவ்வாறு பிறரைக் குறை கூறி தான் செய்த தவறுக்கு தானே சாட்சியாக இருக்கின்றான்.

இவ்வசனத்தில் கூறப்பெற்றுள்ள ''லகூனூத்'' என்னும் அரபிப் பதத்தின் பொருள் யாதென''பெருமானார் (ஸல்.) அவர்கள்பால் வினவப்பட்டமைக்கு ''எவன்தான் தனியாக தின்று தன் சந்ததிகளையும் அடிமையாட்களையும் பசியாயிருக்கும்படிச் செய்கிறானோ அவன்'' என விடை பகர்ந்தார்கள். வல்லாஹு அஃலம்.

நாயக வாக்கியம்

'' எவன் ஒரு சமுகத்தினரின் ஊழியம் புரிகின்றானோ அவனே அன்னோரது தலைவனாகும் ''

அஃதாவது 'பொதுஜன சேவைபுரிந்து மக்களின் பிரீதியை யுண்டுபண்ணிக் கொள்பவனே அவர்களது உண்மைத் தலைவனாவன்' என்னும் இரகசியம் இவ்விரண்டு வாக்கியங்களிற் பொதிந்திருப்பது நன்கு புலனாகும். பொதுவாக யார் மாந்தர்களுக் குதவி செய்கின்றனரோ அன்னவருக்கு மக்கள் சங்கை மரியாதை செய்து, அவருடைய 'நா' விலிருந்து ஏதேனும் கட்டளை பிறக்குமா? என்பதை எதிர்பார்த்தவண்ணமிருந்து ஏதேனும் கட்டளை பிறந்தால் அதற்கு மாறுசெய்யாது அதனை சிரமேற்றாங்கி நிறைவேற்றி அன்னோரின் வியர்வை விழுமிடத்தில், இவர்களின் இரத்தங்களைச் சிந்திவிட ஆயத்தமாகிவிடுவர். முடிவாக முழுமனதோடு அவர்மீது அன்பு பூண்டு, அவரின்மீதுள்ள பிரீதி இன்னோரது மனத்துள் என்றும் நிலவிவிடுகின்றது.

இவ்வாறு அவர்கள்மீது பிரீதி ஏற்படுவதெல்லாம் அவர்கள்பால் காணக்கிடக்கும் ஐஸ்வரியம், தலைமைத்தனம், அதிகாரம், உத்தியோகம் முதலியவைகளைக் கொண்டன்று. இவைகளால் ஏற்பட்டிருப்பின் வெளிக்குமட்டும் சங்கை ஏற்படுவதுபோன்ற பாவனை ஏற்பட்டு அவர்களின் மனதில் இவர்கள்மீது அளவற்ற வெறுப்பு உண்டாகும். எனவே இவைகள் உண்மையான பிரீதியை உண்டாக்கிக் கொள்பவைகளாக ஆய்விடமாட்டா. எதுபொழுது மாந்தர்களுடன் கலந்துறவாடி அவர்களுடைய சுக துக்கங்களில் கலந்து அவர்களுடைய நலவை சதா நாடிக்கொண்டிருக்கின்றானோ அப்பொழுதுதான் மானிடர்களின் உண்மையான பிரீதி, இவன்மீது ஏற்படும்.

முடிவாக சமூகத்தின் ஊழியமானது மானிடனை அச்சமுகத்தினரின் எஜமானனாக ஆக்கிவிடுகின்றது. ஈதன்றி ஆண்டவனிடத்திலும் அதற்குண்டான நற் கூலியைப் பெற்றுக் கொள்கிறான். எனவே, சமூகத்திற்கு ஊழியம் புரிவதினின்று மானிடன் இருவகைப் பிரயோஜனங்க ளடைகின்றான்.

நம்முஸ்லிம் சமூகத்தினர் இம்மை மறுமையிலுண்டாய இவ்விருவகைப் பாக்கியங்களைப் பெற்று ஜெயசீலராய்த் திகழ மானிடர்களின் ஊழியம் புரிய முயல்வார்களாக!

'' நடுத்தரமான வேலையே மேலானதாகும் ''

மானிடர்கள் தம் வாழ்நாட்களில் புரியும் சகல வேலைகளிலும் நடுத்தரமானவைகளையே தெரிந்தெடுத்து அனுஷ்டித்துவரவேண்டுமென்பதை மேலே கூறப்பெற்றுள்ள நாயகக் கட்டளை தெளிவாய் விளக்கிக் காட்டுவது காண்க! அஃதாவது ஒவ்வொரு வேலையிலும் நடுத்தரமானதையே அனுஷ்டிக்கவேண்டும். அதனாற்றான் மானிடனுக்கு அனந்த சௌகரியங்கள் ஏற்படுகின்றன. கெடுதியோ, நஷ்டமோ வேறெத்தகைய தீமையோ உண்டாக

ஹேதுவில்லாமற் போகின்றது. அதற்கு மாற்றமாய் மிதமிஞ்சி செய்வதில் அபரிமித மான நஷ்டமேற்படுகின்றது.

இவ்வாறு நடுநிலைமையை அனுஷ்டித்து நடத்தலென்பது இலௌகிக காரியங்கட்கு மட்டுமன்று. மறுமை சம்பந்தமானவை களிலும் நடுத்தரமானதையே கடைப்பிடித் தொழுகல் இன்றியமையாததாகும். உதாஹ ரணமாக தான தருமஞ் செய்வதில் நடுத்தர மானதைத் தெரிந்தெடுத்து தான் ஏழை யாகப் போய் விடாதபடிக்குள் முறையி லும், லுத்தத் தனத்தை அனுஷ்டிக்காத விதத்திலும் நடந்துகொள்ளவேண்டும். அவ் வாறே வணக்கம் புரிவதிலும் நடுநிலைமையைத் தெரிந்தெடுத்து (பர்லு) கடமைகளை விட்டு விடாமலும், தன்சக்திக்கதிகமாக சின்னட்கள் வரை விதிக்கப்பெற்ற கடமைகளுக்கதிகமாக நிறைவேற்றி பிறகு யாவற்றையும் ஒழித்து அக் கடைமைகளைக்கூட நிறை வேற்றுதிருக் காமலும் நடுத்தரமாக நடந்துகொள்ளவேண் டும். முடிவாக நடுத்தரத்தையே தெரிந்து அதன்படி அனுஷ்டித்தல் இருபதியிலும் ஜெயம் பெறுவதற்கு காரணமாயுள்ளது.

ஒருநாள் நபிகள் திலகம்(ஸல்.) அவர்கள் தங்கள் சூழால் வீற்றிருந்த ஸஹாபாக்களை நோக்கி ஆறு காரியங்களை ஒழுங்காக நிறை வேற்றுவதாய் நீங்கள் வாக்குறுதி செய்வீர் களாயின், நான் உங்களுக்கு ஸுவர்க்கத்தை வாங்கிக் கொடுக்கப் பிணை ஏற்றுக் கொள்கி றேன்'' எனக்கூறவே, ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி.) அவர்களெழுந்து "யாறசூலல்லாஹ் அவ் ஆறு காரியங்கள் யாதாயிருக்கும்'' என வினவினர்கள். அதற்குப் பெருமானர் (ஸல்.) அவர்கள் "1-வது தொழுகை, 2-வது ஜகாத் 3-வது அமானிதம், 4-வது மர்மஸ்தா னம், 5-வது வயிறு, 6-வது நாவு இவைகளே'' என அருளினர்கள். எனவே எவன் தொழு கையை நிறைவேற்றியும், ஜகாத் கொடுத்தும் அமானிதமாக வைக்கப்பெற்ற பொருட்களை திருப்பித் தந்தும், வெட்கஸ்தானத்தை ஹரா மான (பாபமான) கிரியைகளிற் செல்லாமற் காப்பாற்றியும், ஹராமான சம்பாத்தியத் தைக் கொண்டு வயிற்றை நிரப்பிக் கொள்ளா மலும், நாவினல் பொய், புறம், படுதூர் பேசாமல் வாய் மூடியும் இருக்கின்றனே அன்னவன் ஸுவர்க்கவாதியாவன் என்பதே இதன் கருத்தென்றுணர்க.

மூன்று வகையினர் ஆண்டவன்பால் கேட் கும் (துஆ) பிரார்த்தனை ஒப்புக்கொள்ளப் படாமலிருப்பதில்லை.

1-வது நோன்பு திறக்கும் நேரத்தில் நோன் பாளி கேட்கும் துஆ, 2-வது ஒழுங்கான முறையில் நீதி பரிபாலனஞ்செய்யும் அதிகாரி யின் துஆ, 3-வது அனியாயஞ் செய்யப் பட்டவன் கேட்கும் துஆ. இப்பிரார்த்தனை களை ஆண்டவன் தன்னிடம் உயர்த்தி, "ஏ அநீதம் செய்யப்பட்டவனே! எனது கீர்த்தி சங்கை, மரியாதை இவைகள் மீது சத்தியமாக நான் உமக்கு அவசியம் உதவிசெய்வேன், சில காலஞ் சென்றபின்னேனும்'' எனக் கூறு கின்றான்.

இன்னும் மூன்றுவிதமான பிரார்த்தனை கள் (துஆ) ஏற்கப்படுவதில் எத்தகைய சந் தேகமுமில்லை.

1-வது தாய் தந்தையர் தம் மக்கட்காக துஆச்செய்தல்; 2-வது முஸாபிர் (பிரயாணி) கேட்கும் துஆ 3-வது அநீதம் செய்யப்பட்ட வனின் துஆ.

அஃதாவது, நோன்பாளியின் துஆ ஒப் புக்கொள்ளக் காரணம் நோன்பாளி உண் ணல், பருகல், இன்னும் தன் ஏனைய அபிலா ஷைகளடங்கலையும் ஆண்டவனின் சந்தோ ஷத்திற்காக விட்டுவிடு கின்றான். நோன்பு திறக்கும் நேரம் அவனுக்கு கூலி கொடுக்கப் படும் நேரமாக யிருப்பதால் அந்நேரத்தில் தன் எஜமானனிடம் எதைக்கேட்கின்றானே அதை அவசியம் ஆண்டவன் தன் கிருபை யால் சன்மான மளிக்கின்றான்.

ஒழுங்கான முறையில் நீதி செலுத்தும் நீதிமான் குடிகளிடையே சமாதானத்தை உண்டாக்கிவைக்கக் காரணமாயிருக்கின்றான். எனவே அவன் புரியும் நீதியின் காரணமாக ஆண்டவன் அவனது பிரார்த்தனையை ஒப்புக் கொள்கின்றான்.

மக்கட்காகப் பெற்றோர் கேட்கும் துஆ அவசியம் ஒப்புக்கொள்ளப் படுகின்றது. அவர்கள் நலவைக் கேட்டாலும் சரியே! கெடுதியைக் கேட்டாலும் சரியே! இதற்கா கத்தான் தாய் தந்தையர்கட்கு வழிப்பட்டு நடப்பது மிகமிக அவசியமெனக் கட்டளை யிடப்பெற்றுள்ளது. இக்காலத்தில் இவைக ளைப் பேணி நடப்போர் மிக சொற்பமாகவே காணப்படுகின்றனர்.

حفاظة الاسلام مدراس

நம் எதிர்கால வாழ்க்கை.

இக்காலை இந்தியா முழுவதும் வெவ்வேறு தலைவர்களால் மிக ஊக்கத்துடன் விவாதிக்கப்பட்டு வரும் விஷயம், வருங்காலத்திய சுயராஜ்ய திட்டத்தில் முஸ்லிம்கள் வகிக்கப்போகும் நிலைமையைப் பற்றியதாகும். முஸ்லிம்கள் தம் பாஷை, சமுகம் ஆசாரம் முதலியவைகளை எவ்வாறு பாதுகாக்கப்போகின்றார்கள்? உலகத்தில் பொருளாதார நிலையை யொட்டிய கவலைகளும், போட்டிகளும், சண்டைகளும் எத்துணையிருப்பினும் நம் முஸ்லிம்கள் தம் மதம், பாஷை, ஆசாரம் முதலியவைகளையே வாழ்க்கையின் முன்னணியில் நிறுத்திவைக்க வேண்டிய அவசியத்தை நாம் அதிகமாக எடுத்துக்கூற வேண்டுவதில்லையென நம்புகின்றோம். மேல் நாட்டாரையும் மற்றுஞ்சிலரையும் போலல்லாமல், முஸ்லிம்கள் தம் மதத்தையே பிரதானமாகவும், திரவிய அபிவிருத்தி, ஜீவனோபாயம் முதலிய சாதனங்களை இரண்டாவதாகவும் கருதவேண்டும். ஆகவே, நம் மதத்தின் பாதுகாப்பே நமது முக்கிய கவலையாகின்றது. முஸ்லிம் நாடுகளில் மதத்தின் அபாயத்தைப்பற்றிய கவலையில்லாமையால், அவர்கள் வாழ்க்கையின் மற்ற அம்சங்களில் தம் கவனத்தைச் செலுத்தக்கூடும். ஆனால் இந்தியாவில் முஸ்லிம்கள் சிறு பான்மையினராயிருப்பதால், நம் மதத்தின் பாதுகாப்பே நமது முதற் கவலையாகின்றது.

இந்தியாவின் அரசாட்சியைப்பற்றிய சகல அதிகாரங்களும் இந்தியர் கையில் கிடைத்துவிடுமென்று நாம் எதிர்பார்க்கும் வருங்காலத்தில், நம் மதம், பாஷை, ஆசாரம் முதலியவைகளின் பாதுகாப்பு எவ்வாறு நிறைவேறப்போகின்றது? நம் மதத்தை யனுசரித்தும், நம் பாஷையைப் பயின்றும், நம் ஆசாரங்களைப் பின்பற்றியும், நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டும், இந்தியாவின் அரசாங்கச்சபையில் ஆஜராகும் நம் பிரதிநிதிகள் மூலமாகவா? அல்லது இந்தியாவிலுள்ள பல மதஸ்தர்களுங் கூடும் பொதுச்சபையின் மூலமாகவா? மேலே கூறிய பிரதிநிதிகள் நமது வகுப்பைச்சார்ந்த சகல விஷயங்களிலும், சதா காலத்திலும் சிரத்தையுடன் உழைப்பார்கள். ஆனால் பல வகுப்பாரும் கூடிய பொதுச்சபையார், பிரத்தியேகமாக நம் வகுப்பைப்பற்றிய விஷயங்களில் அத்துணை சிரத்தைகாட்ட முடியாது. நமது நியாயமான உரிமைகளையும், அதைக்காப்பதற்கு நமக்குள்ள பலத்தையும் தாங்கிநிற்கும் நஞ் சொந்த பிரதிநிதிகளை விட்டு விட்டு, பிறரது நல்லெண்ணத்தில் நம்பிக்கைவைத்து வாழ்வது நலமாமோ? பிறரது நல்லெண்ணத்தைப்பற்றி நாம் இழிவாகக்கூற முன்வரவில்லையாயினும், அது எக்காலத்திலும் ஒன்றுபோலவே யிருக்குமென்று நம்புதற்கிடமில்லை. ஆதலால் நம் உயிரினும் சிரேஷ்டமாகக் கருதும் நம் மதம், பாஷை, ஆசாரம் முதலியவைகளைப் பாதுகாக்க, நம்மால் தேர்ந்தெடுக்கப்படும் சொந்தப் பிரதிநிதிகள் தேவை என்பது தெளிவாய் விளங்கக்கிடக்கின்றது.

வருங்காலத்திய சுயராச்சிய திட்டத்தில் முஸ்லிம்களது சகல உரிமைகளையும் பாது

காக்க, முஸ்லிம்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் தேவை. இதனை ஆட்சேபிக்கின்றவர்கள் அதிகமாக இல்லை. கூட்டுத்தொகுதியும், வாக்காளர்களின் இஷ்டப்படி ஜாதி, மத வித்தியாசம் பாராட்டாமல் எவரையும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கும் திட்டமே மேலானதென்று கூறுகின்றவர்கள் ஒரு சிலரேயுளர். அவர்களைப்பற்றி நாம் கவனிக்கவேண்டுவதில்லை. ஏனெனின், முஸ்லிம்களின் உரிமைகளை எதிர்த்துப்போராடுகிறவர்களுங்கூட, பிரத்தியேகமான முஸ்லிம் பிரதிநிதிகள் தேவையென்பதை ஒப்புக்கொள்ளுகின்றார்கள். ஆனால் அவர்களை எம்முறையில் தேர்ந்தெடுப்பதென்பதும், எத்தனை பிரதிநிதிகள் யிருக்கவேண்டுமென்பதுமே இப்போது ஏற்பட்டிருக்கும் விவாதத்தின் காரணமாகும்.

இது விஷயமாய் முக்கியமாக நான்கு விதக் கொள்கைகள் வாதிக்கப் படுகின்றன. அவை யாவன:—1. கூட்டுத் தொகுதி. 2. கூட்டுத் தொகுதியில் ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தல். 3. ஜனத்தொகையின் வீதப்படி ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தல். 4. தனித் தொகுதியில் சிறுபான்மையோருக்கு அதிகப் பிரதிநிதித்துவம் அளித்தல்.

மேலே கூறிய நான்குவகைக் கொள்கைகளில் முதலாவதாகிய ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படாத கூட்டுத்தொகுதியின் பலாபலன்களைப்பற்றி மேலே போதுமான அளவு விவரித்தாகிவிட்டது. ஆதலால் அது விஷயமாய் ஓரிரண்டு வார்த்தைகள் மட்டும் கூறுவாம். ஸ்தானங்கள் ஒதுக்கப்படாத கூட்டுத்தொகுதி, தேசீயத்திற்கழகானது என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், அத்தகைய தேசீயம் இந்தியாவில் உதிப்பதற்கு இன்னும் வெகுகாலஞ் செல்லவேண்டுமென்பது வெளிப்படை. இப்போதிருக்கும் வகுப்புத் துவேஷமும், அவநம்பிக்கையும் எப்போது தீரும்? இந்துக்களுக்கு முஸ்லிம்கள்மீது நம்பிக்கையில்லை. அவ்வாறே முஸ்லிம்களுக்கும் இந்துக்கள் மீதும் நம்பிக்கையில்லை. பிராமணரல்லாதாருக்கு பிராமணர் மீது நம்பிக்கையில்லை. ஆதிதிராவிடர்களுக்கு அவ்விருவர் மீதும் நம்பிக்கையில்லை. இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமையில் தேசீயத்தைப்பற்றிப்பேசவே நமக்கு உரிமையில்லை. இப்போதுள்ள துவேஷமும், அவநம்பிக்கையுந் துலைந்து, எவ்வகுப்பாருக்கும் தம் மதம், ஆசாரம், சமூகப் பதவி, பொருளாதார நிலைமை முதலியவைகளைப் பற்றியுள்ள கவலையும், பயமும் இல்லாமல் நாட்டில் உண்மையான தேசீய உணர்ச்சி தழைக்கவேண்டுமென்பதே நமது கோரிக்கை.

ஆனால் அக்காலம் வருமளவும் நாம் நமது நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யாமலிருக்க முடியாது. ஆதலால் நாம் கூறுவதென்னவெனின் இப்போதிருக்கும் நிலைமையில் முஸ்லிம்களது பிரத்தியேக உரிமைகளைப் பாதுகாக்க, பிரத்தியேகமான முஸ்லிம் பிரதிநிதிகளே தேவை. ஆதலால், இச் சமயத்தில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படாத கூட்டுத் தொகுதி நமக்கேற்றதாகாது.

இரண்டாவதாகக் கூறிய கூட்டுத்தொகுதியில் சிறுபான்மையோருக்காகக் குறிப்பிட்ட ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கும் திட்டத்தை கவனிப்பாம். இவ் வேற்பாட்டில் இந்துப் பிரதிநிதிகள் முஸ்லிம் வாக்காளர்களிடமும், முஸ்லிம் பிரதிநிதிகள் இந்து வாக்காளர்களிடமும் வோட்டுகள் கேட்கும் சந்தர்ப்பம் உண்டாகின்றது. இதனால் இவ்விரு வகுப்பாருக்கும் பரஸ்பர அன்னியோன்னியம் ஏற்படுமென்று சிலர் நினைப்பது பெருந்தவறு. இதன் உண்மையான பலன் சிறுபான்மையோரது பிரதிநிதிகள் பெரும்பான்மையோராய வாக்காளர்களின் தாட்சண்யத்தில் கட்டுப்

பட்டு நிற்கவேண்டியதைத் தவிர வேறன்று. பெரும்பான்மையோராய வாக்காளர்களின் உதவியால் தம் ஸ்தானங்களைப்பெற்ற சிறுபான்மையோரின் பிரதிநிதிகள் சமயம் வரும்போது, அவர்களுக்கெதிராக எவ்வசனமும் பேசத் துணியமாட்டார்கள். அவர்கள் பேருக்கு மாத்திரமே சிறுபான்மையோரது பிரதிநிதிகளாயிருப்பார்களேயன்றி மற்றெல்லாக் காரியங்களிலும் அவர்கள் பெரும்பான்மையோரது பிரதிநிதிகள் போகும்வழியிலேயே செல்லவேண்டியிருக்கும். இதனுல் சிறுபான்மையோர் தம் உரிமைகள் சரிவர பாது காக்கப்படாமற் போனுல், அதைப்பற்றிக் குறைகூறவும் இடமில்லாமற் போகின்றது. சிறுபான்மையோர் விரும்பாத சட்ட திட்டங்களும் அவர்களுடைய பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்பவர்களின் சம்மதத்துடன் நிறைவேறி விடவும் இவ் வேற்பாட்டில் இடமுண்டாகின்றது. இதைப்பார்க்கினும் சிறு பான்மையோருக்கு பிரதிநிதிகள் இல்லாமற்செய்து விடுவதே மேலானதாகும்.

மூன்ருவதாகக் கூறிய ஜனத்தொகைவீதப்படி ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தலும் ஒரு விதத்தில் நியாயமானதென்றே சொல்லவேண்டும். அதன்படி சிறு பான்மையோர் என்று கூறப்படுபவர், ஒவ்வொரு மாகாணத்திலும், அவரவர்களுடைய ஜனத்தொகைக்கேற்றவாறு பிரதிநிதிகளைப் பெறுதல் சிந்து பிரதேசத்தை பம்பாய் மாகாணத்திலிருந்து பிரித்து தனியாக்கிவிட்டால், இவ் வேற்பாட்டின்படி இந்தியாவில் ஐந்து மாகாணங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராயிருப்பர்

அவையாவன;—ஸிந்து, பலுச்சிஸ்தான், எல்லைப்புற மாகாணம், பஞ்சாப், கிழக்கு வங்காளம். மற்றைய ஒன்பது மாகாணங்களில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராகவும், இந்துக்களேபெரும்பான்மையினாரகவுமிருப்பார்கள். இவ் வேற்பாட்டிலும் சில கஷ்டங்கள் உண்டாகின்றன. அவை, இந்தியாவில் ஐந்து மாகாணங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராயிருப்பதால், அங்கு அவர்களுடைய உரிமைகளைப்பற்றிச் சிறிதும் பயமில்லை. ஐக்கிய மாகாணம், பம்பாய் இவ்விரண்டு பிரதேசங்களிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராயிருந்தபோதிலும், அவர்கள் அங்கு போதுமான ஜனத்தொகையையுடைத்தா யிருப்பதால், அம் மாகாணங்களின் சட்ட சபைகளில் தமக்குள்ள பிரதிநிதிகளைக் கொண்டே ஒருவாறு தம் உரிமைகளைப் பாதுகாப்பதில் சமாளித்துக் கொள்ளவியலும் என்றே வைத்துக்கொள்வோம். ஆனுல் முஸ்லிம்கள்; கேவலம்! நூற்றில் ஐந்து அல்லது ஆறுவீதமேயுள்ள சென்னை மாகாணத்திலும், நூற்றில் நாலுவீதமேயுள்ள மத்திய மாகாணத்திலும் அவர்கள் உரிமைகளை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளக் கூடும் ?

வருங்காலத்தில் இந்தியாவில் ஏற்படப் போகும் அரசியல் அமைப்பும் முஸ்லிம்களுக்கு விசேஷமான சாதக பாதகங்களை விளைவிக்கக் கூடியனவா யிருப்பதால், அவற்றைக்குறித்து நாம் கவனிக்கவேண்டியது அவசியமாகும். முக்கியமாக இரண்டுவகை அரசியல் அமைப்புகள் இப்போது வாதிக்கப்படுகின்றன. ஒன்று மாகாணங்களின் சுய ஆட்சி பெற்ற இந்தியாவின் ஐக்கிய ஆட்சி. இரண்டாவது மத்திய ஆட்சி. முதலாவது ஏற்பாட்டில்,ஒவ்வொரு மாகாணமும் அதனதன் உள் விஷயங்கள் சம்பந்தப்பட்டவரையில் பூர்ணமான சுய ஆட்சி யுடையதாயிருக்கும். இந்தியா முழுவதையும் பாதிக்கக்கூடிய பொது விஷயங்களில் மத்திய அரசாங்கத்தார் அதிகாரம் வகிப்பார்கள். ஆனுல், இரண்டாவதாகக் கூறிய மத்திய ஆட்சியில் மாகாணங்களைப் பொறுத்த சகல விஷயங்களும் மத்திய சட்ட சபையிலேயே தீர்மான

மாகும். இவ்வேற்பாட்டில் நமது உரிமைகள் சரிவரப் பாதுகாக்கப்படமாட்டா. ஏனெனின் மத்தியசபையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராகவே யிருந்து தீரவேண்டும் சில மாகாணங்களில் அவர்கள் பெரும்பான்மையினரா யிருந்தபோதிலும், அம்மாகாண சபைகளுக்கு அதிகமான அதிகாரம் இல்லாமலும் அவைகளைப்பற்றிய முக்கியப் பிரச்னைகள் யாவும் மத்திய சபையிலேயே தீர்மானமாகுமாதலாலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையிரா யிருக்குமிடங்களிலும், அதன் பிரயோசனத்தைப் பெற முடியாதவர்களாகி விடுவார்கள். ஆனால் இவ்வாறுள்ள சந்தேகங்களுக் கிடமுண்டாகாமல் இப்போது காங்கிரஸ்காரர்கள் மாகாண சுய ஆட்சி பொருந்திய ஐக்கிய அரசியல் திட்டத்தை ஒப்புக்கொண்டிருப்பது நன்மையே.

ஆதலின் நாம் முடிவு செய்யக்கூடிய விஷயங்களாவன:—முஸ்லிம்களுக்குத் தனித்தொகுதியே இன்றியமையாதது. அதன்பயனாக அவர்கள் இந்தியாவில் குறைந்தது ஐந்து மாகாணங்களில் பெரும்பான்மையினராயிருக்க வேண்டும். அவர்கள் சிறுபான்மையினராயிருக்கும் மற்ற மாகாணங்களிலும் அவர்களுக்கு நஷ்டமேற்படாதபடி, அவர்கள் விருப்பம் சட்டசபைகளில் ஏற்றுக்கொள்ளப்படும் பொருட்டு, போதுமான விகிதம் பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டும். ஈதன்றி முஸ்லிம்களுடைய மதம், பாஷை, ஆசாரம் முதலியவைகளுக்கு எக்காலத்திலும் எத்தகைய கேடு விளையாதவாறு சுயராச்சியத் திட்டத்திலேயே ஒரு நிபந்தனை அமைக்கப்படல்வேண்டும். அதை பெரும்பான்மையராயிருப்பவர் எச் சட்ட சபையிலும், எக்காலத்தும் மாற்றக்கூடாவண்ணம் ஓர் பாதுகாப்புச் சட்டமும் வேண்டும். இந்தியாவின் வருங்காலத்து அரசியல் மாகாண சுய ஆட்சியுடையதான அகில இந்திய ஐக்கிய அரசாங்கமாக விருத்தல்வேண்டும்.

கூட்டுத் தொகுதியின் சிலாக்கியத்தையும், சமூக அவநம்பிக்கையின் தீமையையும் பற்றி இடைவிடாமற் கூறிவரும் நண்பர்கள், மேற்கூறிய நியாயமான உரிமைகளை நமக்களித்து, நம்மீது சிறிதும் அவநம்பிக்கை யில்லையென்பதை நிரூபித்துக் காட்டுவார்களாக!

ஈமானின் சக்தி.

பரிசுத்த இஸ்லாம் மதம் உதயமாவதற்கு முன்னர் அராபிய பூபாகத்தின்கண், அவிவேகம், துஷ்கிருத்தியம், அஞ்ஞானம் ஆகியவை யாண்டும் வியாபித்துத்தாண்டவமாடிக் கொண்டிருந்தன. ஒருபால் சூதாடுஞ்செயல் சர்வ சதாரணமாயிருந்துவந்தது. மற்றொருபால், மதுபானக் கொடும்பழக்கம் பரவிப் போயிருந்தது. இன்னொருபால் நாட்டுமக்கள் அமிதபோகம், பாபகாரியம், வியபிசாரம் முதலியவற்றின் ஆழிய ஆழியில் மூழ்கிப் போய்க் கிடந்தனர். சுருங்கக்கூறின் கண்கொண்டு நோக்குந் திசையெல்லாம் பஞ்சமாப்பாதகங்களும்; நயவஞ்சகம், மோசம், பகை, குரோதம், மாச்சரியம், பழிக்குப்பழி கொடுங்கோன் ஆகிய தீம்பிணிகளே அக்கால அராபிய மக்களின் வாணாளை வீணாளாய் போக்கிவந்தன. அத்தகையகாலத்து ஈரானியர் (பாரசீகர்) விவேகம், ஞானம், நாகரிகம் ஒழுக்கம் முதலியவற்றால் ஒருவாறு சிறப்புற்று வந்தனர். எனவே "பத்து அராபியரைக் காட்டினும் ஓர் ஈரானியர் சிலாக்

கியமாவர்'' என்னும் சொல்மொழிபழமொழியாய்நிலவி நின்றிருந்தது.

நிற்க, பரிசுத்த இஸ்லாம் மதம் உதயமாய் சத்தியபோதமென்னும் சன்மார்க்க ஜோதி அக்கால அராபியர்களின் ஆன்மார்த்த, உலகார்த்த ஜீவார்த்தசாதனங்களைநேர்மைப்படுத்தி நற்றுறையிலாக்கி வைத்திருந்தது. ஒரு கால்சீர்கேடுற்றிருந்த மக்கள் பின்னர் இஸ்லாத்திலாகி தங்களுள்ளத்தே உறுதியான ஈமான்கொண்டு சத்திய ஒழுக்கஸ்தராகிவிடவே, அவர்களுடைய ஆன்மார்த்தசக்தியும்பன்மடங்கு பெருகி வன்மையும் வீரும் பெறுவதாயிற்று. தூய ஈமானின் சக்தியானது சர்வலோக மக்கள் மீதும் ஆதீனங்கொண்டு நிலவி ஓங்கிற்று. அராபியர் ஈமான்கொள்ளாமுன்னர் ''ஓர் ஈரானியர் பத்து அராபியரைக் காட்டினும் வன்மையாளர்'' என்றிருந்துவந்த மொழியானது அராபியர் தூய ஈமான்கொண்டு முன்னுக்குவந்த பின்னர் ''ஓர் அராபியர் பத்து ஈரானியரைக் காட்டினும் சிலாக்கியமாவர்'' என்னும் நன்மொழியாய் பொன்மொழிவழங்கலாயிற்று.

இங்ஙனம் அராபியர் சர்வ துறைகளினும் மற்றோரைக்காட்டினும்சிறந்தோங்கியமைக்கு பேராதரவாய் விளங்கிய சாதனம் பரிசுத்த இஸ்லாத்தின் திவ்விய 'ஈமானின் சக்தி'யேயாகும். ஈமானின் சக்தியின் காரணமாய் அவ்வராபிய சோதரர்கள் எவ்வாற்றால் ஜயமும் கீர்த்தியும் பெற்று உலகில் சிறந்த சமூகத்தினராய் விளங்கினர் என்பதற்கு, நம் பெருமானார் நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூல் (ஸல்.) அவர்கள் காலத்திலும், மாண்புறும் கலீபாக்களின் காலத்திலும் இஸ்லாமிய மதப்போர்களில் பெரும்படையினராய் தோன்றிய குப்பார்களை சொற்ப அராபியவீரர்களே வென்று வெற்றிபெற்று ஜெயசீலராய் விளங்கினர் என்னுஞ் சம்பவங்களைக் குறிக்கும் சிலகுறிப்புகளை இதன் கீழ் எடுத்தெழுதுகின்றனம்:—

யுத்தப்பெயர்	எதிரிகளாகிய காபிர்படையினர் தொகை	ஈமானின் சக்தியால் ஜயம்பெற்ற முஸ்லிம்கள் தொகை
(1) ஹி 2-ல், பத்ருயுத்தம்.	ஓராயிரம் குறைஷிக்காபிர்கள்.	313 முஸ்லிம்கள்.
(2) ஹி 3-ல், உஹத் யுத்தம்.	3 ஆயிரம் குறைஷிக்காபிர்கள்.	700 முஸ்லிம்கள்.
(3) ஹி 5-ல், 'கன்தக்'யுத்தம்,	10 ஆயிரம் யூதர்களும், முஷ்ரிக்களும்.	3 ஆயிரம் முஸ்லிம்கள்.
(4) ஹி 7ல், கய்பர்ஜயப்போர்	30 ஆயிரம் யூதர்கள்.	1400 முஸ்லிம்கள்,
(5) ஹி 14-ல், காதிஸிய்யா யுத்தம்.	ஒருலக்ஷம் ஈரானியர்கள் (பாரசீகர்கள்.)	36 ஆயிரம் முஸ்லிம்கள்.
(6) ஹி 14-ல், புவஹல் ஜயப்போர்.	50 ஆயிரம் ரோமக்கிறிஸ்துவர்கள்.	12 ஆயிரம் முஸ்லிம்கள்.
(7) ஹி 15-ல், யர்மூக் யுத்தம்.	2 லக்ஷத்து 40 ஆயிரம் ரோமக்கிருஸ்துவர்கள்.	40 ஆயிரம் முஸ்லிம்கள் மட்டும்.
(8) கய்ஸாரியாஜயப்போர்.	80 ஆயிரம் கிரிஸ்துவர்கள்.	40 ஆயிரம் முஸ்லிம்கள்.

(மேலேகுறிப்பிட்டாவாறு சொற்பத்தொகையினரான முஸ்லிம் அரேபியர்கள் மாபெருந்தொகையுடனுள்ள எதிரிப்படையினரை வென்று வாகைமாலை பூண்டுபிரசித்தியடைந்தது பரிசுத்த இஸ்லாமிய ஈமானின் சக்தியினாலேயேயாம். ஈமான் என்னும் ஜோதிமுன் குபிர்என்னும்காரிருள் ஒழிவது வியப்பன்று.)

இதர சம்பவங்கள்.

அப்பண்டைய போழ்தாகிய இஸ்லாமிய ஆரம்ப காலத்தில் நபிகள் திலகம் ரஸூல் (ஸல்.) அவர்கள், கிஸ்ரா தேச மன்னனுக்கு ''இஸ்லாமிய அழைப்புக்'' கடிதமொன்று விடுத்திருந்தனர். அதில் இஸ்லாத்தின் மேன்மைகளை விளக்கி இப்பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவி உய்யுமாறு அன்புடனழைத்திருந்தனர். இத்திருநிருபம் கிடைக்கப்பெற்ற அம்மூர்க்க மன்னன் அதனை அலக்ஷியஞ் செய்து கிழித்தெறிந்து விட்டனன். இதன்றி மகாக் கொர்வமும் உரோஷமுங்கொண்டு, ஒரு சேனைத்தலைவனை யனுப்பி அந்த ''முஹம்மதை'' (ஸல்.) சிறைப்

பிடித்து தன் கொலுவுக்கொண்டுவருமாறு தேசாதிகாரிக்கு ஆக்ஞையும் பிறப்பித்தனன். இத்தகைய கொடுங்கோலர்கள் ஈமானுடைய சக்தி முன்னர் கிஞ்சித்தேனும் வெற்றியடைந்தனரோ? ஒருக்காலுமில்லை.

பின்னர் ஒருசமயம் வந்துற்றது தத்தம் உள்ளக்கமலங்களில் ஈமானது சக்தியை பூஷணமாய்க்கொண்ட முஸ்லிம் வீரர்கள் கடல் போன்ற அவ்விரோதிகளின் மாபெரும் படைத்திரளை யெதிர்த்து போர் தொடுக்க முனைந்தனர். சேனாபலத்தாலும், செல்வச் செருக்காலும், ஆளும்மமதை யாலும் அகங்காரங்கொண்டு "எங்கள் உயிருள்ளவரை இப்பார்ஸி தேசசத்தைக் கைவிடமாட்டோ"மென வாய் வீரு பேசிக்கொண்டுவந்த அவ்வெதிரிப்படையினர் இஸ்லாமிய ஈமானின்சக்தியை எதிர்த்து நிற்க ஆற்றாது அரண்டு அலறி யுத்தகளத்தை விடுத்து தோற்றோடினர். ஈமானது சக்திநிலவிய இஸ்லாத்துக்கே சகல வெற்றியும் கிடைத்தது. அஞ்ஞான அந்தகாரக் குபிர் இருந்த இடந் தெரியாது ஒழிந்தது.

சீரிய ஜயத்தின் சிறந்த காரணம்.

மேலே கூறப்பெற்றுள்ள ஒவ்வொருசம்பவமும் ஆழ்ந்து உன்னற் பாலதாகும். இஸ்லாம் உதயமாவதற்கு முன்னர் எத்துறையிலும் வீழ்ச்சியுற்றுக் கிடந்த அராபிய முஸ்லிம்கள், இஸ்லாம் உதயமானதன் பின்னர் சர்வ துறைகளிலும் சிறந்து கீர்த்திப் பிரதாபம் பெற்றுவிளங்கியதற்கு உண்மைக் காரணங்கள் தானென்னை? சர்வ முஸ்தீபும் பல்லாயிரக் கணக்கான சாதனமுமுடைத்தாயிருந்த ரோமப் படையினர் சொற்பத் தொகையினராய அராபிய முஸ்லிம்கள் முன் எதிர்த்து பல தடவைகளில் தோல்வி யடைந்துவிட்டதைப்பற்றி ஆச்சரியமுற்று அந்த ரோமதேச மன்னரான கெய்ஸர் தம் பிரதானிகளை நோக்கி 'அராபியர் ஜனபலத்திலும் பணபலத்திலும் ஆயுத முஸ்தீபுகளிலும் உங்களிலும் பன்மடங்கு குறைந்தவர்களாயிருந்தும், அன்னோர் ஜயம்பெற்று விளங்க, நீங்கள் தோல்வியுற்று இழிவுறக் காரணமாயிருந்ததென்ன? என்றுவினவினர். பிரதானிகள் எவரும்இதற்குபதில் உரைக்க ஆற்றலிலாது விழிக்குங்கால், ரோமக்கிழவரொருவர்எழுந்து விடையிறுத்ததாவது :

"அரசே! அராபியர்க்கு" ஈமானின் சக்தி" யுண்டு. அன்னோர்நம்மனோரைக்காட்டிலும் குணத்திலும், ஒழுக்கத்திலும், அனுஷ்டானத்திலும் மிகமிக சிறந்திருக்கின்றார்கள். அவர்கள் இஸ்லாமியபோதனைப்படிபகலெல்லாம்நோன்பு நோற்று, இரவெல்லாம் ஆண்டவனை வணங்குகின்றார்கள் அம்முஸ்லிம்கள்எவரொருவர்க்கும் துன்பம் இழைக்க மாட்டார்கள். அன்னோர் பரஸ்பரம், அன்பு, சகோதரநேயம், மனிததர்மம் முதலிய லக்ஷணத்துடன் நடந்து கொள்பவராவர். பிறர்க்கு சம அந்தஸ்தும் சம பாத்தியதையும் அளிப்பவர்கள். சமத்துவம் சகோதரத்துவம் அன்னோர் வாழ்வில் உறைவனவாம். நிற்க ரோமர்களாகிய நம்மவர்வாழ்விலோ மதுபானத்திலும் துற்காரியத்திலும், ஊறு இழைத்தலிலும், அநீதியிலும், வாக்குப்பிறழ்தலிலும், மற்றும் பல்வகை இழித்துறையிலும் கழிந்து கொண்டிருக்கிறது. ஆகவே நாம் வன்மையிழந்து வீழ்ச்சி யுறுகின்றோம்-ஈமானின் சக்தி யுடையவர்களாய அராபிய முஸ்லிம்களோவெனின் கோரித் துணிந்த பிரிதோர் காரியத்திலும் ஆன்மசக்தியோடு ஊக்கமும் உற்சாகமும் பெற்று, திடசித்தர்களாய் நின்று உழைத்து வாகைமாலை சூட்டி ஜெயசீலர்களாய் விளங்குகின்றனர். இதுவே அன்னோர் ஜயத்தின் சிறந்த காரணம்" என்பதே.

இதுநிற்க, முஸ்லிம்களது வெற்றிக்குரிய சீரிய காரணத்தை அக்காலக் கிறிஸ்துவர்கள் கூட ஒருகாலம்வரை உணர்ந்துகொள்ளாதிருந்தனர். ஆனால் இஸ்கந்திரியா தேசம் முஸ்லிம்கட்கு வெற்றிக் குரியதானதன்பின் அக்காரணத்தைக் கிறிஸ்துவர்கள் நன்குணர்ந்து கொள்ளலாயினர்.

கோரித் துணியுங்காரியத்தில் வெற்றிக் கிடைப்பது ஊக்கம், உற்சாகம், திடசித்தம், தெய்வ நம்பிக்கை (ஈமான்) ஆகியவைகளினால் தானென்பதை நல்லவிதமாய், கலீபா ஹஜ்ரத்துஉமர் (ரலி.)காலத்துச்சிப்பாய்த்தலைவர் தெரிந்து கொள்ளாதிருந்தனர். எனவே இஸ்கந்திரியா முற்றுகையில் ஜெயங் கிடைப்பதில் சிறிது தாமதமேற்பட்டது. இங்ஙனம்

தாமதமேற்பட்ட சமயம் ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் தம் சேனைத் தலைவருக்கு:—'ஸர்தார்! கிறிஸ்துவர்கள் வசிக்குமிடங்களில் தாங்கள் சிறிதுகாலம் வசிக்க நேரிட்டதனால் அவர்களைப்போன்று நீங்களும் சுக போகங்களை யனுபவிக்க ஆரம்பித்துவிட்டீர்களோ? அவ்வாறில்லாதிருப்பின் ஜயம் ஏற்பட இத்துணைத் தாமதம் ஏற்பட்டிரா''தென்று நிருபம்வரைந்தனுப்பினர்கள். இதனின்று ஈமானுக்குளஎத்தகைய சக்தியுண்டென்பது ஈண்டு விளங்கக்கிடக்கின்றது.

நமது ஈமானின் நிலை.

முஸ்லிம்களுடைய ஜயத்துக்குரிய உண்மைக்காரணம் இன்னதென ரோமாபுரிக்கெய்ஸருக்கு ரோமக்கிழவர் கூறியதும், கலீபா ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி.) தமது சேனைத் தலைவருக்கு அறிவுறுத்தியதும் திவ்விய "ஈமானை'' பற்றியேயாகும் சுருங்கக்கூறுங்கால் ஈமானுடைய சக்தி அபாரமானதாகும். இஃது "ஓர் ஈரானியர்க்கு நிகராய் பத்து அராபியர்'' என்று இருந்துவந்த மொழி, பின்னர் "பத்து ஈரானியர்க்கு ஓர் அராபியர் நிகராவர்'' என்று நிலவியது கொண்டு நன்குவிளங்கக் கிடக்கின்றது.

ஏ! முஸ்லிம் சோதரர்காள்! வெற்றிப்பிரியர்காள்! திடனிழந்த குழைந்த உள்ளத்தினர்காள்! இது காலை நுங்களது ஈமானுடைய சக்தி நிலை எத்தகையதாயிருக்கிறதென்பதை ஆழ்ந்து உற்றுணர்ந்து பாருங்கள்' அப்பண்டைக்கால அராபியர்க்கு மனத்துள் உதித்த அளப்பருஞ் சக்திபோன்றது உங்கள் மனத்துள்ளிருக்கின்றதாவென ஓர்ந்து பாருங்கள்! அஃதின்றேல் இன்றே நுங்கள் உள்ளக்கமலத்தில் ஈமானின் ஜோதியை நிலவச்செய்து கொள்ளுங்கள்! ஏக தெய்வத்தின்மீது திட நம்பிக்கைகொண்டு உய்யும் வழிகோருங்கள்! நுங்கள் நித்திய வாழ்க்கையில் சற்குணம், நல்லொழுக்கம், பரோபகாரம், சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய தர்ம நியதிகளை பூஷணமாய் கொள்ளுங்கள்! இவைகளே நீங்கள் உய்வதற்குரிய நற்சாதனங்களாகும். இந்நற்சாதனங்களால் நுங்கள் அவிவேகம், வறுமை, இழிவு, துன்பம், சங்கடம் யாவும் பாஸ்கரன் முன்பனிபோல் பறந்தொழியுமென்பது ஒருதலை. இறைவனருளால் நீங்கள் பண்டைய மூதாதைகளைப் போன்று சிறந்து விளங்குவீர்களாக! வஸ்ஸலாம்.

சென்னை மாகாண முஸ்லிம் 2-வது மகாநாடு

இம் மகா நாடு விக்டோரியா பப்ளிக் மண்டபத்தில் 18-5-31 திங்கட்கிழமை காலை 10-மணிக்கு, தலைவர் மவ்லானா மவ்லவீ ஸையித் பஜ்லுல் ஹஸன் ஹஸ்ரத் மோஹானி B. A. அவர்களின் தலைமையின்கீழ் வெகு ஆடம்பரத்துடனும், விமரிசையுடனும் ஆரம்பமாயிற்று. மகா நாட்டிற்கு உள்ளூர் முஸ்லிம்களில் அநேகரும் வெளியூர்களிலிருந்து டெலிகேட்டுகள் பலரும் ஏராளமாக விஜயஞ்செய்து குழுமியிருந்தனர். பரிசுத்த குர்ஆன் ஷரீபிலிருந்து கிராஅத் ஒத மகா நாட்டின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின.

தலைவர் மவ்லானா அவர்களின் சேவையைப் பாராட்டியும், தனித்தொகுதியின் மேன்மையைக் குறித்தும் 'உர்தூவில்' உருக்கமானவும் இனிமையானவும் கவிகள் பாடப்பட்டன.

பின்னர் மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் கிப்லா அவர்கள் தமது முகவுரைப் பிரசங்கத்தைப் படித்தார். அதில் அரசியலில் முஸ்லிம்களின் முற்கால நிலைமையும், தற்கால நிலைமையும், முஸ்லிம்களுக்கு தனித்தொகுதியே அத்தியாவசியமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் மவ்லானா ஹஸ்ரத் மோஹானி அவர்கள் தலைமை வகித்துச் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு.—

சகோதரர்களே! இம்மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகிக்குமாறு வெகு தூரத்திலுள்ள என்னை தாங்கள் அனைவரும்விரும்பி அழைத்

தற்கு தங்களெல்லீருக்கும் யான் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மகாநாட்டின் நோக்கம் இன்னதென்பதை வரவேற்புக் கழகத்தலைவர் மவ்லானா அவர்கள் தமது தலைமைப் பிரசங்கத்தில் விபரமாக விளக்கிக் காட்டியுள்ளார். தனித்தொகுதி,கலப்புத்தொகுதி என்ற விஷயத்தைப்பற்றிப்பேசுவதற்குமுன்நான் காங்கிரஸ் ஹிந்துத் தலைவர்களிடமும், தேசியமுஸ்லிம்களிடமும் கலந்து விவாதித்து தெரிந்து கொண்ட விஷயங்களை உங்களுக் கெடுத்துக் கூற விரும்புகின்றேன். நேரு ரிப்போர்ட்டு தயாரிக்கப்பெற்றதிலிருந்து முஸ்லிம்கட்கும் காங்கிரஸ் காரர்கட்கு மிடையே அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. நேரு ரிப்போர்ட் முஸ்லிம்கட்கு மிகமிக பாதகமானதாகும். அதனை திருத்திவிடலாமென்று காங்கிரஸ் ஹிந்துக்கள் கூறியதற் கிணங்க முஸ்லிம்கள் நம்பி குறைந்த ஒரு திட்டத்தை தயாரித்து கல்கத்தா கன்வென்ஷனில் கொண்டு போனார்கள். அத்திருத்தம் முஸ்லிம்கட்கு மிகக் குறைந்ததென ஹிந்துக்களும், காந்திஜீயும் ஒப்புக் கொண்டார்களாயினும் ஹிந்து மகாசபா கோஷ்டியினர் மறுத்து விட்டனர். இவ்வாறே பண்முறை முஸ்லிம்கள் குறைந்த கோரிக்கைகளை எடுத்துக் கூறுவதும், அவை ஒப்புக்கொள்ளாவிடில் முஸ்லிம்கள் வேறு கோரிக்கைகளை எடுத்துக் கூறுவதும், அவைகளும் ஒப்புக்கொள்ளப்படாமல் முஸ்லிம்கள் ஏமாற்றமடைவதும் சர்வ சதாரணமாயிருந்து வருகின்றது. இவையெல்லாம் உணர்ந்து கடைசியாக மிகக் குறைந்த கோரிக்கைகளென்றும், இதற்கு குறைந்த கோரிக்கைகள் தயாரிக்க முடியாதென்றும், ஜனாப் ஜின்னாவின் 14 கோரிக்கைகளை பல கூட்டங்களில் உறுதிப்படுத்தி இதில் எவ்விதக் குறைவையும், திருத்தத்தையும் முஸ்லிம்கள் ஒப்புக்கொள்வதில்லையென முடிவு செய்யப்பட்டது. அதே கோரிக்கைகள்தான் கடந்த ஏப்ரில் 5-6, தேதிகளில் டில்லியில் மவ்லானா ஷவ்கத் அலீ அவர்கள் தலைமையில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் சர்வகட்சி மகா நாட்டில் தீர்மானிக்கப்பெற்றன, அதற்கு குறைந்தகோரிக்கைகளை எவ்வாற்றானும் ஒப்புக்கொள்ள முடியாதென்று முடிவு செய்யப்பட்டது. "ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலை நாட்ட சாத்தியமான சகல வழிகளிலும் முயற்சிப்பேன்" என்றஆசை வார்த்தைகளையும், "முஸ்லிம்கள் எத்தகையை கோரிக்கைகள் கேட்பினும் அவற்றிற்கு முழுமனதுடன் முயற்சிப்பேன்" என்பதாகவும் கூறியகாந்திஜீ டில்லிக்கு வந்த பொழுது டில்லி முஸ்லிம் சர்வகட்சி மகாநாட்டின் காரியக் கமிட்டியார் 14 கோரிக்கைகளை காந்திஜீயிடம் சமர்ப்பித்தார்கள். சகோதரர்காள்! முஸ்லிம்கள் நம்பியிருந்ததற்கு முற்றும் மாறாக காந்திஜீ விடையிறுத்தார். அஃதாவது:—இக் கோரிக்கைகள் முஸ்லிம்களின் ஒற்றுமையான கோரிக்கைகளல்ல வென்றும், தேசிய முஸ்லிம் தலைவர்கள் அவைகளை அங்கீகரிக்கவில்லை யென்றும், எனவே அவைகளை ஒப்புக்கொள்ளமுடியாதென்றும் மறுத்து விட்டதோடு முஸ்லிம்களால் முடியாத விதமான சில நிபந்தனைகளைக்கூறி அந் நிபந்தனைகளின்படி திட்டம் தயாரித்து வரும்படி கூறிவிட்டார். இதிலிருந்து காந்திஜீயின் வாக்கு நிலையற்ற தன்மையென்பது நன்கு விளங்கக்கிடக்கின்றது. இதைக் கேட்டபின் தான் காந்திஜியின் மீது மவ்லானா ஷவ்கத் அலீ அவர்கட்கு அடக்கொணாக் கோபம் வந்தது. மவ்லானாவிற்கு கோபம் வந்ததற்கு தக்க காரணம் இல்லாமற்போகவில்லை யென்பதை மேற்கண்ட விவரங்களினின்று நீங்கள் நன்கு தெரிந்திருக்கலாம். போப்பாலில் இருகட்சி முஸ்லிம் தலைவர்களும் கூடிப்பேசி ஏதோ ஒரு முடிபு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அதுவும் மிகமிகப் பாதகமானதே. பொது முஸ்லிம்கள் இம்முடிவை ஒப்புக்கொள்ள மாட்டார்களென்பதை நான் அறிவேன். முஸ்லிம்களின் 14 கோரிக்கைகளில் 'தனித் தொகுதி' ஒன்றைத் தவிர்த்து ஏனைய கோரிக்கைகளை ஹிந்துக்கள் ஒப்புக்கொண்டிருப்பதாகக் கூறப்படுவதும் தவறு. ஹிந்துக்கள் முஸ்லிம்களின் 14 கோரிக்கைகளில் ஒன்றையுமே ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் ஒப்புக் கொள்ளும் விஷயம் ஒரு சூழ்ச்சிக்குள் மறைக்கப்பட் டுள்ளது. அவைகளில் என்னுடைய அனுபவத்தி லிருந்து அநேக விஷயங்களை ருசுப்பிக்க முடியும்.

சகோதரர்களே! நான் சொல்லப்போகும் விஷயத்தைக் கவனிக்க வேண்டுகின்றேன். அஃதாவது மிகுதுமான மாகாணங்களில் ஹிந்துக்களே மெஜாரிட்டி யாகயிருந்து

அதிகாரங்க ளனைத்தையும் அவர்களின் கையின்கீழ் விடப்படுமானல் முஸ்லிம்கள் இந்தியாவில் அடியோடு நசுக்கப்பட்டுப் போவார்க ளென்பதி லையமின்று. ஹிந்துக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் கிராமங்களில், நான்கு ஐந்து முஸ்லிம் வீட்டுக் காரர்க ளிருந்தவர்களை ஒரே க்ஷணத்தில் அடியோடு நாசப்படுத்தி அவர்களை இருந்த விடந்தெரியாமல் செய்திருக்கின்றார்கள். இப்போதே பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இவ்வாறு செய்யப்படும்பொழுது ஹிந்துஆட்சியின்கீழ் அவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்களென் பதை எவ்வாறு நம்பமுடியும்? எனவே ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக வுள்ள 9 மாகாணங் களில் ஐந்து மாகாணங்களின் அதிகாரங்களேனும் முஸ்களின் கைவசம் இருக்கவேண்டுமென்று கோருகின்றோம்.

தற்கால நிலைமைக்கு தனித்தொகுதி எவ்வித நிபந்தனையுமின்றி முஸ்லிம்கட்கு அத்தியா வசியமாகும் என்பதற்கு உங்கட்கு ஓர் உதாஹரணத்தைக் கூற விரும்புகின்றேன். உங்களுடைய பிரதிநிதிகளை நீங்களே தெரிந்தெடுக்க வேண்டியதற்குப் பதிலாக மெஜாரிட்டியினரின் சமுகத்தினராய ஹிந்துக்களும் சேர்ந்து கலப்புத் தொகுதியாக உங்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென கூறுவதானது, உங்களுடைய கேஸை கோர்ட்டில் நடத்துவதற்கு உங்கட்காக வக்கீலை ஏற்படுத்த உங்கள் எதிர்க் கட்சிக் காரருக்கு அதிகாரம் கொடுப்பது போலாகும். உங்களுடைய கட்சிக்கு உங்களுடைய எதிர்க் கட்சிக்காரர்கள் வக்கீலை ஏற்படுத்த நீங்கள் சம்மதிப்பீர்களா. (“மாட்டோம்! மாட்டோம்! என்ற பெரும் ஆரவாரம்.) கலப்புத் தொகுதியால் தெரிந்தெடுக்கப்படும் முஸ்லிம் பிரதிநிதிகள் முஸ்லிம் சமுகத்தின் உண்மைப் பிரதிநிதிகளாக ஒருக்காலும் இருக்க முடியாதென்பது திண்ணம். அத்தகையவர் பேருக்கு முஸ்லிம் பிரதிநிதியாகக் காணப்பட்டாலும் அவரது வேலைகளெல்லாம் ஹிந்துக்கட்கு சார்பானதாகவும் அவர்களின் தாட்சண்ணியத்திற்கு கட்டுப்பட்டதாகவு மிருக்கும் என்பதி லையமில்லை. இதையனுபவத்திலும் கண்கூடாகக்கண்டு வருகின்றோம். அவ்விதப் பிரதிநிதிகள் முஸ்லிம் சமுகத்திற்கு ஏற்படுவதைப்பார்க்கினும் இல்லாம லிருப்பது மிக மேலானதாகும். உண்மை முஸ்லிம் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பது தனித்தொகுதியாலன்றி கலப்புத் தொகுதியால் சாத்தியமற்றதென்பது வெள்ளிடை. எனவே தற்போது முஸ்லிம் சமுகத்திற்கு தனித்தொகுதியே இன்றியமையாச் சாதனமென்பதையும், நான் சுற்றுப்பிரயாணஞ்செய்ததில் இந்தியா முழுதும் முள்ள முஸ்லிம்களில் 100 க்கு 98 பேர்கள் தனித்தொகுதியையே ஆதரிக்கின்றனர் என்பதையும் அறிந்து கொண்டேன். நீங்கள் இது விஷயத்தில் தீர்க்க ஆலோசித்து நல்ல முடிவுக்கு வருவீர்களென நம்புகின்றேன்.

அக்கிராசனர் மவ்லானா அவர்களின் பிரசங்கத்திற்குப் பின் தனித்தொகுதியை ஆதரித்து மகாநாட்டிற் சமர்ப்பிக்கும்படி வந்த தந்திகளும், கடிதங்களும் படிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

பின்னர் பின்வரும் தீர்மானங்கள் எல்லாராலும் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன.

(1) 1931 ஜனவரி 5உயன்று லண்டனில் மவ்லானா முஹம்மத் அலீ அவர்களுக்கு ஏற்பட்ட அகால மரணத்தைக் குறித்து இம் மகாநாடு பெரிதும் வருந்துகின்றது. அவருடைய வாழ்நாள் முழுதும் முஸ்லிம் சமுகத்தின் பாதுகாப்பிற்காகப் பாடுபடுவதிலும் தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடுவதிலுமே இருந்து தம்முடைய இன்னுயிரையும் அப்போராட்டத்திலேயே கொடுத்தார். இவருடைய அகால மரணத்தாலேற்பட்ட மஹத்தான நஷ்டம் எவ்விதத்தும் ஈடு செய்ய முடியாதென இம்மகாநாடுதன் அபிப்பிராயத்தை தெரிவிக்கின்றது. ஷஹீதின் குடும்பத்தாருக்கும், அவருடைய சகாக்களுக்கும் இம்மகாநாடு தன்னுடைய மனமார்ந்த அனுதாபத்தை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

(2) பண்டிதர் மோதிலால் நேரு காலஞ் சென்றதைக்க குறித்து இம்மஹாநாடு பெரும் துக்கத்தைக் காட்டிக்கொள்வதுடன் நாட்டிற்காக அவர் புரிந்த ஊழியத்தையும் பாராட்டுகின்றது. அவரது குடும்பத்தினருக்கும் இம்மகாநாடு தன்னுடைய அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.

(3) டில்லியில் மவ்லானா ஷவ்கத் அலீ அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய அகில இந்திய முஸ்லிம் சர்வகட்சி மகாநாட்டில் நிறை

வேற்றப்பட்ட தீர்மானங்களை இம்மகா நாடு வற்புறுத்துகின்றது.

இந்தியாவில் முஸ்லிம் சிறு பான்மையினர் களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தனி வாக்காளர் தொகுதிகளும், தனிப் பிரதி நிதித்துவமும் இன்றியமையாத அவசிய மென்று இம்மகாநாடு அபிப்பிராயப் படுகின் றது

(4) காசி ஆக்ரா, மிர்ஜாப்பூர், கான்பூர் முதலிய விடங்களில் சமூகச் சண்டைகள் ஏற்பட்டதைக் காண இம்மகாநாடு வருந்து கிறது.

இத்தகைய வருந்தத்தக்க சம்பவங்கள் இனி நிகழாவண்ணம் தடுக்கும்படியாகவும், இந்தியாவை உள்நாட்டுக் குழப்பத்திலிருந்து காப்பாற்றும்படியாகவும் ஹிந்து முஸ்லிம் களெல்லோரையும் இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

பிறகு மகாநாடு இடைவேளை போஜ னத்திற்கு கலைந்து மீண்டும் பிற்பகல் மணி 4-15 க்கு பஜ்லுல் ஹஸன் மவ்லானா ஹஸ்ரத்மோஹானீ அவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. பின் வரும் தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேறின.

ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே நல் லெண் ணம் நல்லுணர்ச்சி பரவி நிற்பதற்கும் இம் மகாநாட்டை வெற்றிகரமாக நடத்திவைப் பது சாத்தியமாகும்படியாக, முஸ்லிமல்லாத சகோதரர்களை வேண்டியும் அறிக்கைவிடுத்த ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி, ஸ்ரீமான் கே. பாஷ்யம் முதலாய காங்கிரஸ் தலைவர் களுக்கும் பிராமணரல்லாதார் கட்சி ஹிந் துத் தலைவர்களுக்கும் இம்மகாநாடு தன்னு டைய வந்தனத்தைத் தெரிவித்துக் கொள் கிறது.

சிறையிலும் அந்தமானிலும் வைக்கப் பெற்றுள்ள மாப்பிள்ளைக் கைதிகளை கவர்ன் மெண்டார் இன்னும் விடுதலை செய்யாதிருப் பதை இம்மகாநாடு பலமாக கண்டிக்கின்றது. அவர்களை விடுதலை செய்வதுடன் மலையாளத் தில்அமுலில்இருக்கும் ஏனைய அடக்குமுறைச் சட்டங்களை உடனே ஒழித்துவிட வேண்டு மென்றும், இன்றேல் இந்தியாவின் எதிர்கால அரசியல்திட்ட மனைத்தையும்யோசிப்பதற்கு அத்தியாவசியமான சமாதானமும் நல்லெண் ணமும் தேசத்தில் ஏற்படாதென்றும் இம் மகாநாடு அபிப்பிராயப்படுகின்றது.

சாம்பியன் திட்டமென ஒரு புதிய திட்டத் தைக் கொண்டுவந்து ஆரம்பக்கல்வி போதனா திட்டத்தில் பல மாறுதல்களைச் செய்யப் போவதால் அது அமுலுக்கு வருமுன் முஸ் லிம் பொதுஜன அபிப்பிராயத்தைப் பெறு மாறு இம்மகாநாடு கார்பொரேஷன் சபை யையும் கவர்ன்மென்டையும் கேட்டுக்கொள் கின்றது.

கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் உயர் பதவிகளில் உதாஹரணமாக:—ஹைகோர் ட்டு ஜட்ஜு, பத்திரப்பதிவு இலாக்கா இன்ஸ் பெக்டர் ஜெனரல் முதலிய பதவிகளில் முஸ் லிம்கட்கு உத்தியோகங்கள் கொடுக்கப்படா மல் முஸ்லிம்களின் உரிமைகளைப் புறக்கணி த்து வருவதை இம்மகாநாடு பலமாகக்கண் டிக்கின்றது.

பின்னர் அடுத்த வருஷத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பின் தொண்டர்களுக்கும் டெலிகேட்டுகளுக் கும் வந்திருந்த ஜனங்கட்கும் மவ்லானா அப் துல் லதீப் பாரூக்கீ அவர்கள் வந்தனமளி க்க, அக்கிராசனர் முடிவுரைக்குப்பின் அக்கி ராசனருக்கு பூமாலை சூட்டப்பட்டு அல்லா ஹு அக்பர் "மவ்லானா ஹஸரத் மோஹானீ ஜிந்தாபாத்" என்ற பேராரவாரத்துடன் மகாநாடு இனிது பூர்த்தியுற்றது.

அருமை அபிமானிகாள்!

சோத்துப்பாரைக்கடை - மாட்டுப்பட்டி போஸ்ட்டிலுள்ள இஸ்லாத்தின் ஊழியர் ஜனாப், எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் நம் அரும் மாசிகைக்கு சந் தாச் சேர்க்கும் கௌரவ ஏஜண்டாக வேலைபார்த்து வருகின்றார். புதிதாகச் சேரும் நண்பர்கள் தங்கள் ஆர்டர்களைப் பதிவு செய்துகொண்டு சந்தாத் தொகையையும் அவரிடம் கொடுக்கும்படி கோரப்படுகின்றனர்.

மானேஜர், ஹி. இ.

முஸ்லிம் சமுதாயக் கொடும் பிணிகள்

இற்றைய நாளில் நம் முஸ்லிம் சமூகத்தினர் தம் வாணாளைக் குலைக்கக்கூடிய கொடிய பிணிகள் வயப்பட்டிருந்து வருகின்றனர். இப்பொல்லாப் பிணிகள் முஸ்லிம் சமுதாய வாழ்வின் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாய் நிற்பதோடில்லாது, நம் சமூகத்தினரை வீழ்ச்சியிலும், பிற்போக்கிலும் ஆழ்த்தி ஒடுக்கி ஒழித்துப்போடுமோவென்றும் அஞ்ச வேண்டியிருக்கின்றது இதுகாலை நம் சமூகத்தை பிற்போக்கிலாழ்த்தி பிற சமுதாயத்தினர் எதிரில் இழிதகைமையினராய் செய்து வரும் கடும்பிணிகள் ஏதேதுவென்பதை இதன்கீழ்ச் சுருக்கமாய் எடுத்துரைப்போமாக.

(1) வறுமை.

வறுமைநோய் யாண்டும் நம் முஸ்லிம் சமூகத்தைப் பொதுப்படையாய் பீடித்து வருத்தி வருகின்றதென்பது உண்மையேயாம். கொடிதினுங் கொடிது வறுமை நோயே என்பது வெளிப்படை. வறுமைக் கொடுமையின் காரணமாய் நஞ்சமூகத்தினர் அடைந்துள்ள இன்னல்கள் அற்பசொற்பமல்ல. முஸ்லிம் சமூகத்தை வறுமை பீடித்த காரணத்தினால் அன்னோர் அளவுக்கதிகமான கடன் சங்கடத்தில் சிக்குண்டு ஆழ்ந்து கிடக்கின்றனர். உதாஹரணமாய் பாங்கிங் இன்குயரிக்கமிட்டியினர் வெளியிட்டுள்ள ரிப்போர்ட்டினின்று தெரிவதாவது :—

"சென்ற பத்துவருடக் காலத்துள் முஸ்லிம் ஜமீன்தாரர்கட்கு ஏற்பட்டுவிட்ட கடன் தொகை 90-கோடியிலிருந்து மேற்பட்டு 135-கோடிவரை அதிகரித்துப் போயிருக்கின்றது. அதாவது ஆரம்பநிலையை யுன்னுமிடத்து சுமார் நூற்றுக்கு 50 பங்கு கடன் உயர்ந்து போயிருப்பது காண்க. இப் பெருங் கடனுக்காகவென்று அவ்வெளிய முஸ்லிம் நிலச்சுவாதீனக்கார வர்க்கம் ஆண்டுதோறும் 15 கோடி ரூபாய்கள் வட்டியாகக் கொடுத்துவந்தது. இதுபோது 20 கோடி ரூபாய்கள் வரையிலும் கொடுக்கும்படி உயர்ந்து விட்டது.

இங்ஙனம் ஒரு சமூகம் 185 கோடி ரூபாய் கடன்பட்டு 20 கோடி ரூபாய்களை ஆண்டு தோறும் வட்டியின்பெயரால் இதரஜாதியினருக்கு வாரிக்கொடுத்துவிடுமாயின் இப்படிப்பட்ட ஏழைச் சமூகம் எவ்வாறு முன்னுக்கு வர வியலுமோ அறிகிலோம், மேமேலே கூறப்பட்டுள்ள கடன்தொகை சட்டப்படி ரிஜிஸ்திரர் காரியாலயத்தில் பதிவு செய்துவைத்தவற்றினின்று தெரியவருவதாகும். பதிவு செய்யப்படாமல் வாய்ப்பேச்சாகவும் கைமாற்றலாகவும் நஞ்சமூகம் பட்டுள்ள கடன் தொகை மேற்படிதொகையில்சேர்ந்ததன்று. இது வேறுபட்டதாகும்.

இப்படிப்பட்ட உயிர்கொல்லிப்பிணியாகிய கடனானது நம் முஸ்லிம் சமூக இரத்தத்தை உறிஞ்சி உயிர்நாடியையே அறுத்து மாயச் செய்வதாயிருக்கிறன்தென்பதுமுற்றும் உண்மையாம். இன்னும் மரத்தை செல்லரித்து நாசப்படுத்துவதே போன்று கடன்தொல்லையானது நம் சமூகவாழ்வை அரித்து நாசப்படுத்துகின்றது.

நிவாரணவழிகள்.

வறுமைப் பிணியொழிந்து கடன்தொல்லை நீங்கி செல்வத்துறையில் சுகமாய் நஞ்சமூகம் வாழப் பிரயத்தனப்படுவதேமுன்னுக்கு வருவதற்குரியவழியாகும். எனவேமுஸ்லிம்சோதரர்ஒவ்வொருவரும்முதலில்ஊக்கமும் முயற்சியுங்கொண்டு தங்கள் வருவாயை அபிவிருத்திச் செய்துகொள்ள முயலவேண்டும். அங்ஙனம் பாடுபட்டு சம்பாத்தியம் புரியும்பணத்தினை வீண்விரயஞ் செய்யாமல் மிச்சப்படுத்தி பாதுகாத்தல் வேண்டும்.

சிக்கனச் செலவு ஒரு முக்கிய விஷயமாகும். நித்திய வருவாய்க்குக்குறைந்த அளவே நித்திய செலவுக்கு உபயோகிக்கவேண்டும். வருவாய்க்கு அதிகச்செலவு புரிவதும், வருவாயின்றி செலவுமாத்திரம் தடையின்றி புரிவதும் தனக்குத்தானேபெருங்கேட்டைவிளைவித்துக் கொள்வதாகும்.

பெயர் பகட்டுக்காகவும் ஆர்பாட்டத்திற்காகவும் பிரபல்யத்திற்காகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்தசெல்வத்தைவீண்விரயஞ்செய்தல் மூடத்தனமே யாகும். இங்ஙனம் சிக்கனம் புரிதலினும் வரம்பைக்கடந்து உலோபித்தனத்தில் வீழ்ந்துவிடலும் கூடாது. தானுமுண்டு உடுத்து பிறர்க்குஞ் சிறிது அளித்து பரோபகாரம் புரிந்து வாழ்வதே இஸ்லாத்தின் சீரிய போதனையாகும். பிறர்க்களியாது லோபித்தனம் புரிவதும், யாவற்றையும் தொலைத்து ஆத்ம துரோகஞ் செய்வதும் கூடாத காரியமேயா மன்றோ?

இன்னமும் நஞ்சமூகத்தின் வறுமையும் கடனுந் தொலைய வேண்டுமாயின் வீண் சடங்குகள், மூடப் பழக்க வழக்கங்கள் முதலியனவும் ஒழியவேண்டும். கூண்டு, கொடியேற்றம், பஞ்சா, தாபூத், ஊர்வலம், மேளதாளம் முதலிய ஷரீஅத்துக்காகாச் செயல்கள் முற்றும் ஒழிக்கப்படல் வேண்டும். கலியாணகால வீண் சடங்குகள் முதன்முதலில் தொலைய வேண்டும். சுன்னத்தான முறைப்படியும் ஷரீஅத்தின் சரியான கட்டளைப்படியுமே நிகாஹ் முதலிய காரியாதிகள் நிகழ்வுறல் வேண்டும்.

மேலும் நஞ்சமூகம் முன்னுக்குவர முஸ்லிம் வர்த்தக ஸ்தலங்களை பொதுமக்கள் ஆதரிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டிய சாமான்களை சொற்ப நாணயம் அதிகம் கொடுத்தேனும் முஸ்லிம் கடைக்காரர்களிடமேதான் வாங்க வேண்டும் இன்னும் ஒவ்வொருமுஸ்லிமும்தம்வியாபாரங்களையும் தொழில்களையும் முன்னுக்குக் கொண்டு வர சதா சிந்தித்து முயற்சிக்க வேண்டும். தங்கள் சந்ததியினர்களுக்கு இயன்றவரையில் கல்வியை கற்பித்து ஜீவனோபாயம் செய்யதற்கு பழக்கிவிடல் வேண்டும். இத்தகைய வழிகளை நாம் அனுஷ்டித்து வருவோமாயின் வறுமையும் கடனுந் தொலைந்துக்ஷேமம் நிலவுமென்பது திண்ணம்.

(2) அவிவேகம்.

நம் முஸ்லிம் சமூகத்தின் வீழ்ச்சிக்கு மற்றொரு பிணியாயிருந்துவரும் அவிவேகம் தொலையவேண்டுமாயின் நம்சன்மார்க்கல்வி பூரண சந்திரோதயம்போல்யாண்டும் எவ்வுள்ளத்தும் பரவி வியாபித்தல்வேண்டும். சென்ற பத்தாண்டுகளாய்நஞ்சமூகத்திடையேகல்விப் பற்று தோன்றி கல்வி சற்று அபிவிருத்தியடைந்து வருகிறதென்பது உண்மையேயாகும். இங்ஙனம் ஒரு சிறிது கல்வியபிவிருத்தியடைந்ததினால்தான் இக்காலை நம்மவர் மதம், சமுதாயம்,இராஜியம், தேசியம் இவைகள் இன்னின்னவை யென்பதை ஒருவாறு உணர்ந்து நன்முறையில் நடந்து வருகின்றனர். எனினும் இதுகாலை நம்மனோர்கல்வி நிலை மிகமிகக் குறைவென்றேதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. ஏனெனின் இதர சமூகத்தினரோ கல்வித்துறையில்நம்முஸ்லிம்களைக்காட்டினும் பன்மடங்கு முன்னேற்றமடைந்துள்ளார்கள். அவர்கள் நிலையையும் நம்மவர் நிலையையும் சீர்தூக்கி நோக்குங்கால் நம் நிலை ஆகாரத்தில் கலந்த உப்பளவேதானிருக்கிறது.

“கல்வி கற்கவேண்டியது ஒவ்வொரு ஆண்பாலர் மீதும், ஒவ்வொரு பெண்பாலர் மீதும் கடமையான பர்லாகயிருக்கின்றது” என்று நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மொழிந்தருளியிருப்பது பிரசித்தம். இத்திருமொழியின்படி இதுகாலை அனுஷ்டானம் புரிந்து வருபவர்கள் முஸ்லிம்களா அன்னியரா வென்று உற்றுணர்ந்து பாருங்கள். அன்னிய வர்க்கத்தாராகிய ஐரோப்பியர்கள்தான் இதுகாலை கல்வியின் உயர்வையுணர்ந்து கல்வியைக்கற்று முன்னேற்றமடைந்துள்ளார்கள். எனவே அவர்களில் எழுதப்படிக்க தெரிந்துள்ள விவேகசாலிகள் 100-க்கு 95 பேர்கள் இருந்து வருகின்றனர். அன்னோரில் படிக்கத் தெரியாதோர் எங்கோ ஒவ்வொன்று மிக அபூர்வமாய் காணப்படுகின்றனர். ஆனால் நம் முஸ்லிம்களது நிலைமையோ வெனின் அதற்கு நேர் முரணாதாக யிருந்து வருகின்றது. அதாவது நன்கு எழுதப்படிக்கத் தெரிந்த விவேகசாலிகள் நம்மில் அபூர்வமாகவே யிருந்துவருகின்றனர்.

அவிவேகத்தின் தீமைகள்.

கல்வியில்லா அவிவேகத்தினால் நேரிடுந் தீங்குகளும் அளவிடற் கரியனவாகும். கல்வியில்லாக் காரணத்தினாலேயே இது காலை நம் முஸ்லிம் சமூகத்தினர் பல துறைகளிலும் பிற்போக்கடைந்து காணப்படுகின்றனர். அவிவேகத்தினாலேயே நம்மவர் சிலர் பிறசமூகத்தினரிடத்தில் குற்றேவல் புரிந்து கொண்டும்

இழிவுபட்டுக் கொண்டும் குட்டுப்பட்டுக் கொண்டுமிருக்கின்றனர்.

மேலும் நஞ்சமூகத்தினர் கல்விஞான உலகானுபவ மில்லாக்காரணத்தால் பல்வகை இலாபங்களையும் மிழக்கின்றனர். ஆரம்பக் கல்விக் கென்று அரசாங்கத்தினர் குடிஜனங்களின் நன்மைக்காக அளிக்கும் பண உபகாரத்தையுங்கூட நம்மவர்கள் பெறுதற்கு வகை தெரியாதவர்களாய்ச் சீர்குலைகின்றனர். இவ்வாறே கூட்டுறவு என்னும் கோவாப்ரேடிவ் லோகல், முதலியஇலாக்காக்களால்கிடைக்கப் பெற்ற நன்மைகளையும் நம்மவர்கள் இழந்து விடுகின்றனர். ஈதெல்லாம் அவிவேகத்தின் காரணத்தால்நேரிடும் பாதகங்களே யல்லாது வேறென்ன வென்றுதான் கூறவேண்டும்? என்றுதான் நம்முஸ்லிம் சமூகத்தினர் பண்டைக்காலப் பண்பும் பெருமையும் பெற்றுத் திகழ்கவரோ?

கல்வியின் அந்தஸ்து.

முன்னொரு காலத்தில் கல்விகற்றுத் தெளிவதானது மனித வாழ்வுக்கொரு அழகென்றும் பூஷணமென்றுமட்டும் கருதப்பட்டு வந்தது. ஆனால் பலவித மாறுதல்களடைந்து நாகரிகந் தாண்டவமாடு மிற்றையநாளிலோ கல்வியானது அழகெனப்பட்டது போய் உலக வாழ்க்கைக்கே உயிர்போன்றதென மதிக்கப்படுகின்றது. குறைந்தமட்டில் இக்காலை மார்க்கக்கல்வியுடன் பிரைமெரி வகுப்பு வரை ஆரம்பக் கல்வியேனும் படியாமல் உயிர் வாழ்வதினும் உயிர்வாழா தொழிவதே மேலெனத் தோன்றுகின்றது. இக்காலை கல்வியின்றி இவ்வுலகில் கண்ணியமாக வாழ்தலென்பது முடியாத காரியமேயாம்.

கிராமாந்தரப் பகுதிகளிலுள்ள மக்களின் அவிவேக நிலைமை மிகமிக வருந்தற்குரியதா யிருக்கின்றது. சிற்றூர்களிற் பெரும்பாலோர் எழுதப்படிக்கத் தெரியாத அஞ்ஞானிகளாகவேதான் காணப்படுகின்றனர். இது நஞ்சமூகத்துக்கு இழிவன்றோ? ஒவ்வொரு முஸ்லிமும் சன்மார்க்க போதனைகளையும் கட்டளைகளையும் உணர்ந்து ஒழுகுவதற்கு மதக்கல்வி—இல்மு அத்தியாவசியமானதாகும். இரண்டாவதாய் உலகவியலில் கணக்கெழுதல், எழுதியதைப்படித்தல், வீட்டு நிர்வாகம், கடை-வியாபார ஒழுங்கு, பத்திரிகை படித்தல், வியாஸமெழுதல் ஆகியவற்றிற்கெல்லாம் லோகார்த்தக்கல்வி அத்தியாவசியமானதா யிருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு நகரவாசியும் சிறப்பாய் ஒவ்வொரு கிராமவாசியும் எழுதப்படிக்கத் தெரிந்திருக்கவேண்டியதே தற்காலச் சிறப்பாம். இன்றேல் தற்போதிய வீழ்ச்சியினும் அதிக வீழ்ச்சியடைவார்க ளென்பதைப்பற்றி எச்சரிக்கை கொள்வார்களாக.

(3) பிடிவாதகுணம்.

நம் முஸ்லிம் ஜனங்களுள் பல்லோர் பண்டைப் பௌராணிக பிடிவாதக் குணமுடையவர்களா யிருக்கின்றனரென்பது வெளிப்படை. இத்தகையோர் ஏதேனுமொரு புது ஆராய்ச்சி, நாகரிகசாதனம், சீர்திருத்தம், நவீனமுறை ஆகியவற்றைக் காண நேரிட்டாலுங்கூட அதை வெறுக்கின்றனர். இத்தகைய விஷயங்கள் உலகவாழ்க்கைக்கும், தேகாரோக்கியத்துக்கும், ஆத்மார்த்தத்திற்கும் எம்மட்டோ உசிதமானதா யிருப்பினுங்கூட அவற்றினை வெறுக்கின்றனர். உதாரணமாய் ஆங்கிலேய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள ஆங்கிலக் கல்வி, வைசூரிக்காக அம்மைக்குத்திக்கொள்ளல், விஷபேதிக்காக நவீன சிகிச்சைசெய்து கொள்ளல், ஆஸ்பத்திரிகளிலுள்ள ஆங்கில மருந்துகளை உபயோகித்தல் ஆகிய நல்முறைமைகளுங்கூட ஆகாத காரியங்களென்று நம்மவரில் பல்லோர் வெறுத்து பகிஷ்கரிப்பதை நாம் காணலாம். இவ்விழிநிலை கிராமப்பகுதிகளில் அளவை மீறியிருக்கின்றது.

பரிசுத்த தீனுல் இஸ்லாம் சத்தியமும் தாராளமும் உண்மையும் நிறைந்த பரிபூரண இயற்கைச் சன்மார்க்கமென்பது வெள்ளிடைமலை. புதியசீர்திருத்தத்துக்கும், நவீனமுன்னேற்ற வழிக்கும் இதில் முட்டுக்கட்டைக் கிடையாதென்பது திண்ணம்.

(மேற்கூறியவாறு நல்ல விஷயங்களில் பழைய பிடிவாத குணமே கொண்டிருப்பது கெடுதியாகவே யிருக்கின்றது. இவ்வாறே ஆங்கிலக் கல்வி இக்காலத்திற்கு முக்கியக்கருவியாயிருக்க, அதை வெறுப்பதனால் தீமையேயல்லாமல் நன்மை யொன்றுமுண்டாகாது)

மேலேகூறியதைப் போன்ற காரணங்களினாற்றான் நம்முஸ்லிம் சமூகத்தினர் மற்ற இதரவர்க்கத்தினரைக்காட்டினும்கல்வியிலும்

தேகாரோக்கியத்திலும், சரீரபலத்திலும், பணச் செல்வாக்கிலும், ஆராய்ச்சித் துறையிலும், தொழின்முறையிலும் மிகமிகப் பிற்போக்கடைந்து வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றனர். ஆகவே இனியேனும் நம் முஸ்லிம்கள் பிற்போக்கான பிடிவாத புத்தியை விட்டு பிறச் மூகத்தினர் உலகார்த்தத்துறைகளில் அநுஷ்டிக்கும் நாகரீக முன்னேற்ற முறைகளில்மார்க்க முரணல்லாதவற்றினைப்பின்பற்றி உய்யக் கடவார்களாக.

(4)சோம்பல்.

முஸ்லிம் சமூகப்பிற் போக்கிற்குரிய மற்றொருகாரணம் சோம்பலாகும். சோம்பலினும் பொல்லாத விரோதி வேறொன்றுமில்லை. சோம்பல் பகைவனைவிட மிகமிகக் கொடியதாம். இது காலை பொதுவாக எங்கு நோக்கிய போதிலும் நம்முஸ்லிம்கள்சோம்பலுற்று ஊக்கங்குன்றி, உற்சாக மிழந்து நடை பிணங்களாகக் காணப்படுகின்றனர்.

சோம்பலின் கெடுதிகளை நம்மில் பல்லோர் உய்த்துணர்ந்து பார்ப்பதில்லை. ஆதலினாற்றான் நடுக்கடலில் புயலில் அகப்பட்டு கவிழும் மரக்கலத்திலுள்ள ஒருவன் அதுசமயமும் சோம்பல் கொண்டு உயிரை தற்காக்கவும் மனமெழாதவனாய் மாண்டு மடிவதைப்போல் நம்நிலைமையும் வந்து வாய்க்கின்றது. சுருங்கக்கூறுமிடத்து "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார், சோம்பலுடையோர் தேம்பித் திரிவர்" ஆகவே முஸ்லிம் சோதரர்காள்! சோம்பலைவிட்டு சதா உழைத்து நலன் பெறும் எறும்பேபோல் பாடுபட்டு பிரயோஜன மடையுங்கள்!

ஆண்டவன்மீது நம்பிக்கை.

நாம் தொடங்கும் ஒவ்வொரு காரியத்திலும் ஆண்டவன்மீது முழு நம்பிக்கைகொள்வது சாலச் சிறந்ததாகும். இதுவே "தவக்கல் அலல்லாஹ்" எனவுங் கூறப்படும். "தவக்கல்" என்பதற்கு ஒரு சிலர் ஆண்டவன் மீது நம்பிக்கை வைத்துவிட்டு கால் கரம் அசையாமலிருந்தாலும் கோரியது கிடைக்குமென நம்பியுள்ளனர். இது மௌட்டீகமான எண்ணமென்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

இவ்வுலகில் பாடு படவும், முயற்சிப் புரிந்துநலன் பெறவும் ஆண்டவன் நம்மானிடர்களை சிருஷ்டித்துள்ளான் இதை விட்டு நாம் சோம்பேறிகளாய் உட்கார்ந்திருக்கிறோம். இதர சமூகத்தினரான ஆங்கிலேயர், ஹிந்துக்கள் முதலியோர் கஷ்டம் பிரயாசை இவைகளை அனுஷ்டித்து முன்னுக்கு வருகின்றனர். ஆனால் நம் முஸ்லிம்களோ "தவக்கல்" என்பதற்கு தவறான அர்த்தங்கள்கொண்டு வாளாயிருந்து சோம்பித்திரிந்து சீரழிகின்றனர்.

முஸ்லிம் நேயர்காள்! இதுகாறும் கூறி வந்த அறிய விஷயங்களை மீண்டும் படித்துப் பார்த்து மனத்தில் கொண்டு முன்னுக்குவர பாடுபடுங்கள். நீங்கள் முயற்சிப் புரிந்தால் ஆண்டவனும் அருள்புரிவான்.

ஹதீதுகளை ஒழுங்குசெய்த முறை.

ஹதீது என்பது நபிகட் பெருமானார் (ஸல்.) அவர்களது சொல், செயல், நடத்தை இவைகட்குப் பெயர். பெருமானார் (ஸல்.) அவர்கள் 'தாங்கள் நபி' யென அறிவித்த நாள் முதல் மொழிந்த வார்த்தைகளும், செய்த காரியங்களடங்கலும் ஹதீதென வழங்கப் படுகின்றது.

ஏக பரம்பொருளாகிய அல்லாஹு (ஜல்.) இடமிருந்து நாயகம் (ஸல்.) அவர்கள் பால் இறக்கிவைக்கப் பெற்ற திருவசனங்கள் அனைத்தும் 'குர் ஆனெ ஷரீ' பாகும். தாங்கள் அனுஷ்டித்துக் காட்டிய செயல்களும், போதித்த வாக்கியங்களும் ஹதீதாகும். சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு இறைவன்றன் கட்டளை எவ்வளவு இறக்கி வைக்கப்பட்டதோ அவைகளை உடனுக்குடன் எழுதி வைத்துக் கொள்ள வேண்டுமென முயற்ச்சித்தார்கள். எனவே வஹீ வந்தவுடன் எழுதுகிற வரை யழைத்து தங்கள் முன்னிலையிலேயே எழுதும்படி செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் ஹதீதுகளை எழுதிவைக்க வேண்டாமென்று விலக்கி யிருந்ததுடன் குர்ஆன் ஷரீபைத்தவிர்த்து மற்றெதையும் தங்கள் பக்கலினின்று எழுதிக்கொள்ளக் கூடாதென்ற கட்டளையும் பிறப்பித்து விட்டார்கள்.

இது காரணம் பற்றியே ஹதீதுகளை எழுதிவைப்பது நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் ஏற்பட்டில்லை. எனினும் அக்காலத்திலுள்ள சில அரசர்களுக்கு பரிசுத்த இஸ்லாம் மதத்தைத் தழுவும்படி எழுதிய கடிதமும் * ஒரு ஸஹாபி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருடைய ஞாபகார்த்தத்திற்காக எழுதிக் கொடுக்கும்படி செய்த சில உபதேசமும் † தான் அக்காலத்தில் எழுதப்பெற்றவைகளாகும். மேலும் ஸஹாபாக்கள் தங்கள் காலத்திலும் ஹதீதுகளை மிகக் குறைவாகவே எழுதி வைத்திருந்தார்கள். எனவே அக்சாலத்தும் அவைகள் முழுதும் எழுதி வைக்கப்படவில்லை. ஏனெனின், அது சமயம் எழுதி வைக்கப்பட்டிருந்த இரண்டொரு ஹதீதுகளும் கிதாபு ரூபமாயின்றி ஞாபகம் செய்து கொள்வதற்காகக் குறித்து வைக்கப்பட்டதாகவே யிருந்தது. உதாஹரணமாக:—ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு அம்றுப்னு ஆஸ் (ரலி.) அவர்கள் தாம் மனனஞ் செய்துகொள்வான் வேண்டி சிலஹதீதுகளை எழுதி வைத்திருந்தனர். ஸய்யிதுனா ஹஸ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் தங்கள் வாள் உரையுள் பழிவாங்குவற்குள்ள சில கட்டளைகளை எழுதிவைத்திருந்தார்கள். இவ்வாறே சில ஸஹாபாக்களும் குர்ஆனில் சில விரித்துரைகளை எழுதி வைத்திருந்தார்கள்.

பின்னர், ஒருமுறை ஹஸ்ரத் உமரிப்னு கத்தாப் (ரலி.) அவர்கள் குர்ஆன் ஷரீபைப் போல் ஜனங்களிடையே ஹதீதுகளையும் பரவச்செய்ய வேண்டுமெனக்கருதி ஹதீதுகளை ஒருங்கே சேகரஞ்செய்ய எண்ணினார்கள். எனினும், அவ்வாறு செய்தால் பிற்காலத்தில் குர்ஆனே கரீமுக்கும் ஹதீது ஷரீபுக்கும் ஏதேனும் விகற்பம் ஏற்பட்டு குர்ஆன் ஷரீபுடன் சில ஹதீதுகள் எங்கு கலந்துவிடுமோவென்றஞ்சி அது காரியத்தில் அவர்களீடுபடவில்லை.

நாயகம் (ஸல்.) அவர்களுடையவும், அவர்களது சங்கைவான்களாய ஸஹாபாக் (தோழர்)களுடையவும் காலத்தில் ஹதீதுகள் எழுதி வைக்கப்படாமற் போயினும், ஸஹாபாக்கள் ஹதீதுகளைக் கற்றுக்கொள்வதிலும் அவற்றை மனனஞ் செய்து கொள்வதிலும் எடுத்துக்கொண்டஆற்றலும்முயற்சியுமானது எழுதி வைப்பதில் உண்டாகும் முயற்சியைப் பார்க்கினும் பன்மடங்கு அதிகமாயிருந்ததென்றே கூறலாம். ஹதீதுகளைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு ஸஹாபாக்கள் வேண்டிய முயற்சி செய்து அதற்கான பல ஒழுங்குகளையும் நியமித்திருந்தார்கள். அஃதாவது, ஸஹாபாக்களிற் பெரும்பாலோர் தங்களது ஜீவனாம்சத்திற்கான தொழில் சம்பாத்தியம் போன்ற வேலைகளிலீடுபட வேண்டியிருந்தமையால் திருச்சமுகத்திற்கு நாள்தோறும் வந்துபோக இயலாதவர்களாயிருந்தனர். அதற்காக இருவர் சேர்ந்து முறையேற்படுத்தி ஒருநாள் ஒருவர் சென்று கேட்டு வந்து, தான் கேட்டவை யனைத்தையும் மற்றொருவர்பால் ஒப்பிவிப்பதும், மறுநாள் மற்றவர் சென்றுதான் கேட்டு வந்தவை யனைத்தையும் அவர்பால் செப்புவதும், இவ்வாறு ஹதீதுகள் விட்டுப் போகா வண்ணம் மனனஞ்செய்வதற்குள்ளவசதிகளை இருவரிருவராகதங்களுக்குள்ஏற்படுத்தியிருந்தார்கள். பின்னர் லோக தயாளர் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வுலகைவிட்டுச் சென்ற

---

* ஹிஜ்ரத்திற்குப் பின் பெருமானார் (ஸல்.) அவர்கள் சில அரசர்களுக்கு இஸ்லாம் மதத்தின் பேரில் அவேட்கையூட்டி சில கடிதங்கள் எழுதி அனுப்பினார்கள். அதைக் கண்ணுற்ற ஹபஷா தேயத்து நஜ்ஜாஷீ பாத்ஷா இஸ்லாமைக் கொண்டு சிறப்பிக்கப் பெற்றார். ரோமாபுரி அரசராய ஹிர்கலின் உள்ளத்தில் இஸ்லாத்தின் விருப்பம் அபரிமிதமாக ஏற்பட்டிருந்தும், உலக அபிலாஷைகளானவை இஸ்லாமைத் தழுவுவதை விட்டும் அவரைத் தடுத்து விட்டன. ஈரான் தேயத்து பாத்ஷாவான 'எஜ்தகிர்த்' தம் மூர்க்கத்தினால் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டாரில்லை.

† ஒருநாள் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஓர் ஸஹாபிப் பெரியாருக்குச் சில உபதேசம் புரிந்தார்கள். அதுகேட்டு அவர் "அல்லாஹ்வுடைய றசூலே! இவ்வுபதேசங்களை எனக்கெழுதித் தரும்படிக் கட்டளை யிடுங்கள்" எனக் கேட்டுக் கொண்டார். நாயகம் (ஸல்.) அவர்கள் அவ்வாறே அவருக்கவற்றை எழுதிக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள்.

பின், ஸஹாபாக்களுக்கு ஹதீதுகளைக் கற்றுக்கொள்வதில் அபரிமிதமான ஆவல் ஏற்பட்டு, தாம் அறியாத ஒரு ஹதீது இன்ன ஊரிலுள்ள இன்ன ஸஹாபிக்குத் தெரிந்திருக்கின்றதென ஒருவர் கேள்விப் படுவாராயின் அதைக் கற்றுக்கொள்ள ஒரு மாதப் பயணத்தையும் பொருட் படுத்தாது ஆங்கு அந்த ஸஹாபி யுள்ள இடந்தேடிச் சென்று அவரிடம் அதனைக் கேட்டுத் தெரிந்து மனத்திலிறுத்தி வைப்பவர்களா யிருந்தார்கள்.

மேலும், நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் அநேக ஸஹாபாக்கள் எத்துணை ஹதீதுகளை பகற் காலத்திலோ இரவிலோ அன்றி மற்றெந்த நேரத்திலோ கேட்டுக்கொண்டார்களாயின், அவற்றினை அப்படியே ஒவ்வொரு வாக்கியம் வாக்கியமாக ஞாபகஞ் செய்வார்கள். அன்றியும் அவர்கட்கு ஞாபக சக்தியும் அபரிமிதமாயிருந்தது. அதனால் அவர்கள் மனனஞ் செய்துள்ள ஹதீதுகளை நாயகம் (ஸல்.) அவர்கள் முன்னிலையில் திருப்பிக் கொள்வார்கள். நபி பெருமானார் (ஸல்.) அவர்களும் பலநேரங்களில் தாங்கள் அருளிய ஹதீதுகளை இரண்டு அல்லது மூன்று முறை திருப்பித் திருபிப் சொல்லி ''இதனைச் செவ்வனே மனனஞ் செய்து கொள்ளுங்க'' ளெனக் கட்டளையும் பிறப்பிப்பார்கள். அவ்வாறே ஸஹாபாக்களும் திருக் கட்டளைப் பிரகாரம் ஹதீதுகளைப் போதிப்பதில் முயன்றிருந்தார்கள் தாபிஈன்களும் அவற்றை ஞாபகஞ் செய்து கொள்வதிலும், பத்திரப் படுத்தி வைப்பதிலும் பெரிதும் பிரயத்தனம் எடுத்துக் கொண்டதுடன் பிரசாரம் செய்வதற்குப் போதிய ஏற்பாடும் செய்து வைத்திருந்தார்கள்.

ஸஹாபாக்களது காலத்தில் அநேகர் தூர தேசங்களிலிருந்து தங்களுக் கேற்படும் பற்பல சிரமங்களை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது களிபேறுவகை கொண்டுஏனைய ஸஹாபாக்களிடம்வந்து நாயகம் (ஸல்.) அவர்களது சொற்செயல் நடத்தை முதலியவற்றைக் குறித்து நன்கு தெளிவுபடக் கேட்டுத் தெரிந்து ஞாபகஞ் செய்து கொள்வதுடனில்லாது அவர்களது கூட்டத்தாரிடஞ் சென்று "நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வாறு திருவாய் மலர்ந்தளியதாக இன்ன ஸஹாபீ எனக்குக் கூறினா''ரென அவர் கேட்டுத் தெரிந்த ஒவ்வொரு வார்த்தையையும் எத்தகைய மாறுதலின்றி அப்படியே போதிப்பார். அவர்கள் கூறியிருந்ததில், ஏதேனும் சந்தேகம் ஜனித்தால் "ஸஹாபியானவர் இன்ன விஷயத்தைக் கூறுங்கால் இவ்வார்த்தையை யுபயோகித்தாரோ! அல்லது அவ்வார்த்தையை யுபயோகித்தாரோ!' என தனக்குச் சந்தேகம் இருப்பதாக அவ்விரண்டு வார்த்தைகளையும் அறிவித்து விடுவது வழக்கம். இவ்வாறு மிகப் பேணுதலுடன் ஹதீதுகளின்பிரசாரம் அக்காலைநடைபெற்று வந்தது.

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் உமர் (ரலி.) அவர்களது காலத்தில் அநேக தேசங்கள் ஜெயிக்கப்பெற்று அவ்வவ்விடங்களில் இஸ்லாமியப் பிரசாரம்நடைபெற்று வந்தது. அத்தேச ஜனங்களுக்கு மார்க்கத்தைக் கற்பித்துக் கொடுப்பான்வேண்டி ஸஹாபாக்கள் முயன்று அவர்கள்பால் சென்று அன்னோர்கட்கு ஹதீதுகளைப் போதித்துக் கொண்டிருந்தார்கள். ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத், அபூஹுரைரா (ரலி.) போன்ற கீர்த்திவாய்ந்த ஸஹபாக்களை இதே பிரசாரத்தின் காரணமாக பல பாகங்களுக்கும் ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். இதன்றி முஸ்லிம்களால் ஜெயிக்கப் பெற்ற தேசமெங்கணும் சிலஸஹபாக்களிருந்து ஆங்காங்குள்ளவர்கட்கு மார்க்கத்தைக்கற்றுக்கொடுப்பதை விட்டும் ஒழிந்தபாடா யிருந்ததில்லை. இத்தகைய காரணங்களினாற்றான் ஹதீதின் கல்வியானது மிக்க சவிஸ்தாரமாக நானாபாகங்களினும் பரவ ஆரம்பித்துவிட்டது. அஃது பரவுவதற்கு எத்துணை சௌகரியம் ஏற்பட்டதோ அத்துணைப் பேணுதலும் அதில் ஏற்பட்டு விட்டது.

இறுதியாக ஹஸ்ரத் உமர்பின் அப்துல் அஜீஸ் அவர்கள் கலீபாவாக ஏற்பட்ட காலத்தில் ஹிஜ்ரீ 140-க்குப் பின் பொதுவாக முஸ்லிம்கட் கிடையில் ஹதீதுகளை ஒழுங்குப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அதற்குக் காரணம் முஸ்லிம்களது எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வந்தமையால், அவர்கட்கு மார்க்கக் கல்வியைக் கற்றுக்கொள்வதிலும் ஹதீதுகளை மனனஞ் செய்வதிலும் உண்டான

பேராவல் ஒவ்வொரு முஸ்லிமின் நரம்புகளில் இரத்தத்தைப்போல் ஓட ஆரம்பித்ததேயாகும். ஈதன்றி ஸஹாபாக்கள் காலத்திற்குப் பின் மார்க்கப் புரட்டர்கட்கும் வழிகேடர்கட்கும் பொய்யான ஹதீதுகளைப் பரவச் செய்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில், அவைகளைவிட்டு மானிடர்களைக் காப்பாற்றி சன்மார்க்கப் பிரகாசத்திற் கொணரும் பொருட்டு ஹதீதுகளை எழுதிவைத்தல் மிக மிக அவசியமெனத் தோன்றிற்று. எனவே ஹதீதுகளை எழுதி வைப்பதற்கான எல்லா வசதிகளையும் ராஜாங்க புறத்திலிருந்து செய்து முஸ்லிம்களின் தேயங்களில் வதிந்துவந்த கண்ணியவான்களாய உலமாக்கள் (மார்க்க அறிஞர்கள்) இவ்வுத்தம கைங்கரியத்தி லீடுபடுத்த அழைக்கப்பட்டனர். மேலும், அத்தகைய அழைப்பின்றியும் அநேக உலமாக்கள் இம்மேலான புண்ணிய சேவையில் தாங்களே ஈடுபட்டனர். சுருங்கக் கூறின், அக்காலத்தி லுண்டாய எல்லா உலமாக்களும், எல்லா இமாம்களும் தங்கள் தங்கள் தகுதிக்கேற்றவாறு இம்மேலான சேவையி லீடுபட்டு அபரிமிதமான முயற்சிபுரிந்து ஹதீதுகளினின்று ஆயிரக் கணக்கான கிரந்தங்களை இயற்றி அவைகட்குள்ள சட்ட திட்ட விதிகளையும் நியமித்துவிட்டார்கள். முதன் முதலில் ஹதீதுகளைக் கிதாபு ரூபமாக எழுதிவைத்தவர் யாவரென்பதில் உலமாக்களிடையில் அபிப்பிராயபேதமிருந்து வருகிறது. சிலர் ஜஹ்ரி (ரஹ்.) அவர்களென்றும், வேறு சிலர் ரபீக்பின் சுஹைர்(ரஹ்.) அவர்களென்றும் மற்றுஞ் சிலர் ஸயீத்பின் உர்விய்யா (ரஹ்.) அவர்களென்றும் கூறுகின்றனர். இவைகளை நாம் நன்கு நோட்டமிட்டுப் பார்ப்போமாயின் இன்னோரணைவரும் ஏககாலத்தில் ஹதீதுகளை கிதாப் ரூபமாகச் செய்வதற்கு அஸ்திவாரமிட்டவர்களென்று தெரிந்துகொள்வதுடன் இவர்களில் இன்னார் முந்திபவர், இன்னார் பிந்தியவர்என்பதை யறிந்துகொள்ள இயலாதவர்களாயிருக்கின்றோம். எனினும் இன்னோரின்நாமங்கள் ஹதீதுகளை இயற்றியவர்களின் முதல் ஜாபிதாவில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதற்குப்பின் காலத்திலுள்ளவர்களும்அநேக ஹதீது கிரந்தங்களை இயற்றியுள்ளார்கள். அன்னவர்களது நாமங்கள் இரண்டாவது ஜாபிதாவில் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஆனால் இவ்விருவகுப்பினரால் இயற்றப்பெற்ற கிரந்தங்கள் பழக்கத்திற்கு வரவில்லை. பிந்தியவர்களா லியற்றப்பெற்ற கிரந்தங்களில் முந்தியவர்களாலியற்றப் பட்டவைகளிலில்லாத அநேக அபூர்வ முறைகள் காணப்பெற்றன. அஃதாவது முன் இரண்டு ஜாபிதாவில் குறிப்பிடப் பெற்றவர்களா லியற்றப்பெற்ற கிரந்தங்களில் தொழுகையைப் பொறுத்த மட்டில் எழுதுவதாகயிருந்தால், அதில் தொழுகை சம்பந்தமான விஷ்யங்களைத்தவிர்த்து வேறெதையுங் காணமுடியாது. அத்தன்மைப்போலவே நோன்பு சம்பந்தமாக எழுதுவதாயின் அதைத் தவிர வேறு விஷயம் காணப்படமாட்டாது இவ்வாறு அவைகள் பொதுவாக இல்லாமல் குறிப்பிடப்பட்ட ஒவ்வோர் விஷயத்தைப் பொருத்தே யிருந்தது.

அதற்குப்பின் மூன்றும் வகுப்பினராலியற்றப்பெற்ற கிரந்தங்களில் வணக்கம் புரிதல், ஜீவனோபாயஞ் செய்தல், தொழில் செய்தல் முதலிய எல்லாஅம்சங்களும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தன. உதாரணமாக:—இமாம் மாலிக்(ரஹ்.)அவர்கள்மதீனாவில் "முஅத்தா" என்னும் கிரந்தத்தையும், இப்னு ஜுரைஹ் (ரலி.) அவர்கள் மக்காவிலும், அத்ரயீ (ரலி.) அவர்கள் ஷாமிலும், ஸுப்யானுத் தவ்ரீ (ரலி.) அவர்கள் கூபாவிலும், ஷமாபின் ஸல்மா (ரலி.) அவர்கள் பஸராவிலும் பல்வகையான ஹதீது கிரந்தங்களை இயற்றுவதற்கு ஆரம்பஞ் செய்தார்கள். இதுகாலை மூன்றும் வகுப்பினர்களா லியற்றப்பெற்ற கிரந்தங்களில் "முஅத்தா" வென்னும் கிரந்தத்தைத் தவிர்த்து வேறெதையும் காணமுடியவில்லை. மூன்றும் வகுப்பினருக்குப் பின் உண்டானவர்களால் இயற்றப்பெற்ற கிரந்தங்களில், முன்பு ஏற்பட்ட கிரந்தங்களைப் பார்க்கினும் பற்பல நலன்களும், அபூர்வ விஷயங்களும் ஒருங்கே அமையம பெற்று புகாரீ, முஸ்லிம், திர்மதீ, அபூதாவூத் என்னும் அரிய நாமங்களோடு இஸ்லாமிய நாடுகளெங்கணும் இற்றைய காலத்தில் மிக்க கியாதிபெற்று விளங்கிக் கொண்டிருக்கின்றன.

மேலே கூறப்பெற்றுள்ள கிரந்தங்களுக்குப் பின்னும் ஹதீதுகளி லநேகக் கிரந்தங்கள் இயற்றப் பெற்றன. இறுதியாக ஹதீதுகள்

அனைத்தையும் எழுதி வைத்துவிடவேண்டுமென்ற முடிபு செய்யப்பட்டு ஒவ்வொரு ஹதீதுகளையும் அவைகட்குள்ள தக்க ஆதார ஆதேயங்களுடன் ஒவ்வொருவரும் தங்கள் கிரந்தங்களி லெழுத ஆரம்பித்தனர். அவர்கள் எதிர் பார்த்ததைக் காட்டினும் அதிக பிரயோசனங்களை அவர்களது முயற்சியில் ஆண்டவன் அளித்து விட்டனன். இதனுல் ஹதீதுகளனைத்தும் கிரந்தங்களில் எழுதப்பட்டுப் போயிற்று. சிறிது காலத்திற்குப் பின் வாய் மொழியாகக் கூறிக்கொண்டிருந்த வழக்கமும், ஹதீதுகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக ஒரு மாதகாலம் செல்ல வேண்டியிருந்த கஷ்டமும் அறவே நீங்கிற்று. அது முதல் ஹதீதுகளைக் கற்றுக்கொள்ள நாடுவோர், கிரந்தங்களைப் பார்த்து மிக்க எளிதில் பயின்று வந்தார்கள். இஃதன்றி ஹதீதுகளில் உண்மையானவைகளையும், பொய்யானவைகளையும் தெரிந்துகொள்வதற்கான பல சட்ட திட்டங்களையும் உலமாக்கள் இயற்றி அதற்கு "உஸூலெ ஹதீது" என்ற பெயருமிட்டார்கள். அவை சிறிது காலத்திற்குள் எல்லாராலும் அங்கீகரிக்கப்பெற்று அனுஷ்டானத்திற்கும் வந்து விட்டன.

ஹதீதுகள் கிரந்த மூலமாக ஏற்படுத்தப்பெற்றதன் வரலாற்றை இதுகாறும் சுருக்கமாக நாம் விளக்கிக் காண்பித்துள்ளோம். ஒருவன் அவற்றைஆரம்பமுதல்அந்தம் வரை ஆழ்ந்து நோக்குவானுயின், எம்பெருமானுர் (ஸல்.) அவர்களது சொல், செயல், நடத்தை முதலியவற்றையும், நம் சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கத்தின் திருக் கட்டளைகளையும், மார்க்க அறிஞர்களாம் உலமாக்கள் எத்தகையப் பேணுதலுடன் எழுதி வைத்திருக்கின்றன ரென்பதை அன்னவன் உணர்ந்து கொள்வதுடன், இம் முயற்சியின்பத்தில் ஒரு பங்குகூட வேறு எம் மார்க்கத்திலும் காண முடியாதென்பதை நன்கு விளங்கிக்கொள்வான்.

(தொடரும்.)

பெண்மையும் பர்தாவும்

(ஸ்ரீமதி ஸரஸ்வதிதேவி வரைவது.)

நம் பெண்மணிகட்கு அரியஆபரணங்களாயிருக்கத் தக்கவை மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு ஆகியனவாம். எப் பெண்மணியின் தன்மையில் நாணுந் தன்மை யில்லையோ அன்னவள் பெண் இனத்தில் சேர்ந்தவளாகாள். நாணமற்ற நாரி இத்தரணியில் தோன்றியும் யாதொரு புண்ணியமும் பெருள். அச்சமும் நாணமுமே பெண்மணியுடைய பத்தினித் துவத்தையும், கற்பையும் காக்கும் அருஞ் சாதனங்களாகும். நாணம் அச்சமில்லா மாதர் கற்புடையவளாயிருத்தல் சாலாது. நாணம்,அச்சம், மடம், பயிர்ப்புஆகியநாங்கு வகை பெண்மைக்குணங்களும்இஸ்லாமிய பர்தாவினுள் இனிது அமையப் பெற்றிருப்பது உன்னற்பாலதாகும். நாணத்துக்கும் பர்தாவுக்கும் அத்தியந்த சம்பந்தமுண்டு. ஆகவே தீனுல் இஸ்லாமின் ஷரீஅத்தில் பர்தா வழக்கம் அத்தியாவசியமென வற்புறுத்தப்பட்டுள்ளது.

பர்தாவின் மேன்மை.

பெண் தன்மைக்கு பர்தா முறை அத்துணை அத்தியாவசியமானதா யிருக்க நம் இந்திய சகோதரர்களில் ஒரு சிலர், பர்தாவழக்கம் பெண்களுடைய வாழ்வைக் குலைக்கும் காரியமா யிருக்கிறது; ஆதலின் அது பெண்மைக்கு ஏற்றதன்று என வீண் விதண்டாவாதம் புரிகின்றனர். அத்தகையோர், இத்தரணியில் பர்தா வழக்கத்தைத் திரஸ்கரித்து மனம்போனவாறெல்லாம் மானமற்று மதிகுலைந்து பரப்புருடருடன் கலந்துறவாடி கேடுறும் மேனுட்டுப் பெண்களின் துர்நடத்தைகளைக் கண்டு படிப்பினைப் பெறுவார்களாக.

பர்தா வேண்டாமெனக் கூறுவோர் மேனாட்டுப் படிப்பாலும், ஐரோப்பிய ஜாதியாரின் நடையுடைப் பாவனையாலும் வெருண்டு மதிமயங்கிப் போனவர்களாவர். ஆகவே தான், மேனாட்டுப்பெண்களைப்போன்று ஆடவர்களுடன் சமமான அந்தஸ்தும் உரிமையும் சுயேச்சையும் பெற்று மோட்டார் ஓட்டல், குதிரை சவாரிசெய்தல், நடனசாலைகட்குச் செல்லல், வேடிக்கை விளையாட்டுகளில் கலந்துக் கொள்ளல், ஆகாயக்கப்பலில் பிரயாணம் புரிதல் ஆகிய துணிகரக் காரியாதிகளால் பெண்களுக்கு தேக சௌக்கியமும், மனச் சந்தோஷமும் சரீரசக்தியும், ஆரோக்கிய வாழ்வும் உண்டாகின்றனவென்று கூறி, நம் முஸ்லிம் பெண்களும் அவ்வாறிருத்தல் வேண்டுமென மதிகெட்டுப்பிதற்றுகின்றனர். அவ்வாறுள்ள மேனாட்டுப்பெண்களுக்கு குண ஒழுக்க ஆசாரவிஷயத்திலும், கணவனுக்கு பணிவிடைப் புரியும் விஷயத்திலும், இல்லத்துவேலைகளைக்கவனித்துக் கொள்ளும் முறையிலும் எத்துணை முரண் தன்மையும், பொடு போக்குத்தன்மையும், எதேச்சாதிகாரமும் ஏற்பட்டு ஏறுக்குமாறாய் நடக்கும் குணம் உண்டாகிவிடுகின்றதென்பதை பர்தா வேண்டாமெனப் பிதற்றும் கோஷ்டியினர் ஏனோ உற்றுணர்ந்துப் பாராதிருக்கின்றனர்?

மேனாட்டுப் பெண்களின் மௌட்டியம்.

கோஷாவின்றி எதேச்சாதி காரிகளாய்த் திரியும் மேனாட்டுப்பெண்கள் ஆடவர்கட்கு எதிரிடையாகிப் புரியும் பாதகங்கள் பலப்பலவாகும். மேனாட்டுத் தினசரி வாழ்வை நோக்குவோமாயின், பெரும்பாலான பெண்கள் கணவனுக் குட்பட்டிருக்கும் பதிவிரதாத் தன்மை யற்றது கண்டவர்களுடனெல்லாம் கை கோர்த்துச் சென்று கலந்துறவாடிக் கெடுவதையும், அப் பெண்கள் தம்வாணுளில் அநேக புருடர்களைக் கணவர்களாகச் செய்து சுகித்து வெருட்டி, வேறொருவனை வரித்துக் கொள்வதையும், சின்னஞ் சிறுதர்க்கத்துக்கெல்லாம் மணந்த கணவனை நீதிஸ்தலத்துக்கு இழுத்துவிவாக ரத்துச் செய்து வேறொரு புருடனை இழுத்துச் செல்வதையும், இத்தகைய தான்றோன்றித் தனத்தால் களவு, சூது, கொள்ளை, கொலை, வியபிசாரம், முதலிய பஞ்சமாப்பாதகங்களை அஞ்சாது செய்ய அப்பெண்கள் பின்வாங்காதிருப்பதையும் நன்குத் தெரிந்து கொள்ளலாம். இதுதான் பர்தா இல்லாமல் அலைவதின் பிரயோஜனங்கள் போலும்! இதுவே ஐரோப்பிய நாட்டுப்பெண்களின் தான்றோன்றித் தனங்களாகும்.

அமேரிக்கப் பேண்களின் தன்மை

இது நிற்க, அமெரிக்கப் பெண்களோ ஐரோப்பிய பெண்களைக்காட்டினும் இழிநிலையில்முன்னடியாகவேதானிருக்கின்றனர். உதாரணமாக அமெரிக்கப் பெண்கள் அதிகமான சுயேச்சை யுடையவர்களாதலால், அவ்விடத்திய ஆடவர்கள், பெண்களின் சம்மத மில்லாமல் எக்காரியத்தையும் செய்யக் கூடாதாம். உலகவிவகாரக்காரியங்களில்ஓர் ஆடவன் தன் மனைவியின் அனுமதியையும் ஆலோசனையையும் பெறாமல்துணிந்தொருகாரியம் சாதித்து விடுவானாயின், உடனே அப்பெண் கோர்ட்டுக்குச் சென்று அப்புருடன்மீது மான நஷ்ட ஈட்டுக்கு வழக்குத் தொடுத்து விடுகின்றனள். இத்தகைய பெண்களின் அடாச் செயல்களினால் பெரிதும் கஷ்டப்பட்ட ஆடவர்களில் ஒரு கோஷ்டியினர் இது போழ்து கிளம்பி "அமெரிக்கப் பெண்கள் இந்திய (முஸ்லிம்) பெண்களைப்போல் பதிவிரதாத் தன்மைப்பூண்டு வீடடங்கித்தானிருக்கவேண்டும், உலக வியவகாரக் காரியங்களில் பெண் கட்கு எதேச்சாதிகாரம் கூடாது. குடும்ப இல்லறத்துறையில் மட்டும் பெண்கட்கு உரிமை யளிக்கப்படல் வேண்டும்" என்றகொள்கைகளுடன் ஓர் இயக்கத்தை தோற்றி கிளர்ச்சி செய்கின்றனர். இதினின்று பர்தா வில்லாது திரிவதனால் பெண் தன்மை எத்துணைச் சீர் கேடுற்று நலிகிற தென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்குகிறது.

ஆகவே சத்திய ஆசார புண்ணிய வதிகளான சகோதரிகாள்! நாணம், மடம், அச்சம்பயிற்பு களாகிய பெண்மைக்குள்ள ஆபரணங்களைப்பூண்டு பர்தாவுக்குள்ளிருந்து பதிவிரதைகளாய் உங்கள்கணவருக்குடன் பட்டு, மனங் கோணாது, ஒருயிரும் ஈருடலுமாக இல்லறம் நடாத்தலில் உண்டாகும் மேன்மையையும், இன்பத்தினையும், புண்ணியத்தையும் சற்றே உற்றுணர்ந்து பாருங்கள். மனைவியும் மணாளனும் மனமொருமித்து குடும்ப பாரம் நடாத்துவரேல், இருபாலர்க்கும் எத்தகைய துக்க

மும் அணுகாது சர்வசுகானந்தத்தோடு மன பூரிப்ப ரென்பது திண்ணம். எனவே சோதரிகாள்! இவ்வித பதிவிரதாத் தன்மையிலிருந்து புண்ணியமும் ஆனந்தமும் பெற்று இனிது வாழ விரும்புகிறீர்களா? அல்லது மேனாட்டு பெண்கட்கொப்ப சுயபுருடருடன் சதாசண்டையிட்டு பிரிந்து, பரப்புருடருடன் உறவாடி துற்நடத்தையிலுழன்று சீரழிய விரும்புகிறீர்களா? மேனாட்டாசாரத்தைவெறுத்துத் தள்ளி பரிசுத் இஸ்லாத்தின் பர்தா முறையைப் பின் பற்றி பதிவிரதைகளாய் இலங்கி இல்லற நித்தியானந்த வாழ்வுபெற்று நற்கதியடைவீர்களென்றே நம்புகின்றேன்.

உத்தமப் பெண்ணின் அழகு.

உத்தமப் பெண்கட்கு உண்மையழகு எதுவெனின் நற்குணமும் நன்னடத்தையும் பர்தாவுள் அடங்கியிருக்கும் ஒழுக்கமுமேயாகும். ஈதன்றி மேனாட்டுப் பெண்களைப் போல் பணத்தை விரயப்படுத்தி வாசனைத்தூளிலும் சுகந்த ஸோப்புகளிலும், மெல்லியபட்டு, மஸ்லின் ஆடைகளிலும், வைர நகைகளிலும் தம் உடலினை மட்டும் சிங்கார வனப்பும் ஒய்யாரமும் செய்துகொள்வது ஒருபோதும் உண்மை அழகாகாது. இத்தகைய செயற்கை அழகினால் இயற்கை அழகும் கெட்டுப் போகிறதென்பது அனுபவசாலிகளின் மெய்வாக்கு. ஆடவரை மயக்கும் சரீர அழகு என்றும் இவ்வுலகில் நிலைத்திருக்கப் போவதில்லை. மங்கைப் பிராயம் முடியுங்கால் அவ்வனப்பும் ஒழிந்து, முதுமை ஏற்பட்டு அந்தங்குலைகிறதென்பது வெளிப்படை. ஆனால் சற்குணம் நல்லொழுக்கம், இனியமொழி, தூய உள்ளம், நாணுந்தன்மை, பர்தாவழக்கம், புருடருக்குடன்பட்டு நடத்தல் போன்ற பொற்குண சௌந்திரிகள் என்றும் அழியாது சதா இளமைப் பிராயத்திலேயே யிருந்து மிளிர்வராயிருப்பர். இத்தகைய அருங்குண ஒழுக்கமுடைய பெண்மணிதான் சத்தியவதியாவாள். இவள் இருக்கும்வீடு சுவர்க்கத்துக்கு ஒப்பாகுமென ஆன்றோர் நவின்றுள்ளனர். இவளே வீட்டரசி. இவளே கணவனின் மதிமந்திரி, இப்படிப்பட்ட நன்மணிக்கே சுகமும் விமோசனமுமுண்டு.

பெற்றோர் கடன்.

சிறுமிகளை சிறு பிராய முதலிலிருந்தே (பாலிகாதகால முதலே) நற்றுறையில் பழக்கி பர்தா அனுஷ்டிக்கச் செய்து சத்தியவதிகளாய் ஆக்கிவைக்க வேண்டியது பெற்றோர்களாய மாதாப் பிதாக்களின் கடமைகளாகும். இளமையிலேயே பெண் பிள்ளைகட்கு ஒழுக்கம், மரியாதை, கற்பைக் காப்பாற்றும் முறை, குடும்ப விவகாரம் நடத்தவேண்டிய விதம், கம்மியாக பேசவேண்டிய பழக்கம் முதலியன படித்துத்தரல் வேண்டும், அவற்றுடன் கோஷாவின் உயர்வு, பர்தாவின் அவசியம், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு ஆகிய குணங்களின் சிறப்பு முதலியவைகளும் போதிக்கப்படல் வேண்டும். கணவனுக்கு கட்டுப்பட்டு நடத்தல், பெரியோர்கட்கு பணிந்து நடத்தல், சிறியோருடன் அன்பாயிருத்தல், ஏழைகளுடன் தயவாயிருத்தல் ஆகிய நல்லொழுக்கங்களையும் சிறுமிகளுக்குப் பெற்றோர்கள் பழக்கிவைத்தல் வேண்டும்.

இங்ஙனம் சிறுவயது முதலே பழக்கப்படும் பெண்கள் மங்கைக்காலத்தில் உத்தம பத்தினிகளாகவும், பதிவிரதைகளாகவும், கற்பின் யுவதிகளாகவும் விளங்குவது பிரசித்தம். பெண்கள் அதிக வாயாடியாக யில்லாதிருத்தல் சிறந்த நற்பழக்கமாகும். வாயாடும் பெண்கள் தம் கணவரின் மனத்தை அதிகம் புண்படுத்தி விடுவர். வீண் தொல்லைகளைத் தொடுப்பர். ஆகவே சிறுமிகளை அதிக வாயாடித்தனத்துக்கு விட்டுவிடாது பழக்குவது பெற்றோரின் மற்றொரு கடமையன்றோ!

பெண்கட்கழகு பர்தாவன்றோ ?

பெண்கட்குரிய நாணமானது பர்தா வழக்கத்தில் இனிது அமையப்பெற்றிருக்கிறது. பெண்கள் ஹயா-நாணமுடையவர்களாயிருப்பது அவர்கள் உத்தம பத்தினிகள் என்பதற்குரிய அடையாளமாகும். நாணமற்ற நாரி உத்தமியாக யிருப்பதென்பது கற்பு இழந்த பெண் பதிவிரதையாய் நடிப்பதற்கொப்பாம். நாணமற்ற ஒரு பெண்ணுக்கு குழந்தைப் பிறக்குமாயின், அப்பிள்ளையின் தன்மையிலும் வெட்கங்கெட்டத் தன்மையே தாண்டவமாடு மென்பது நிச்சயம் என்று வைத்தியர்களும், உடற்கூற்று அறிஞர்களும் கூறுகிறார்கள். தாய் ஒருவள் நாணமிழந்தவாறு நடந்து கொள்வாளாயின் அவளுக்குப் பிறக்கும் பெண்பிள்ளை முழுதும் நாணமற்று கற்பிழக்கும் நாரியாவளென்பது அனுபவ வாக்காம். ஆகவே

நாணம்-அதாவது ஹயா ஒவ்வொருவர்க்கும் எத்துணை அத்தியாவசியமென்பது ஈண்டு நன்கு விளக்கமாகிறது.

நாணத்துக்கு பர்தா வழக்கம்தான் ஏற்ற சாதனமாகும். நாணமில்லா தொருவள் சில காலம் பர்தா அனுஷ்டிப்பாளாயின் அவள் தன்மையிலும் நாணுந்தன்மை உதயமாகி அவள் பத்தினியாவளென்பது பிரசித்தம். ஆகவேதான் "பர்தாவுடனிருந்து வருவது பெண்கட்கு இன்றியமையாத தென்று" பெரியோர்கள் கூறியுள்ளனர். பர்தாவானது பெண்தன்மைக்கே உயிர்போன்றதாகும். பர்தாவனுஷ்டிக்கும் பெண்கட்கு பலவிதப் பிரயோஜனங்களுண்டு. பர்தா-அல்லது நாணுந் தன்மைதான் இல்லறத் துறைக்கு அளவிலா இன்பமளிக்கும் சிறந்த கருவியாகும். பர்தாமுறை ஆன்மார்த்த முன்னேற்றத்துக்கும் அத்தியாவசியமாகும்.

பர்தாவின் அவசியம்

பர்தா ஆவசியமென்பதற்கு மற்றோர் உதாரணம் கூறுவோம். உண்ணும் உணவை நாம் வீட்டில் மூடிவைக்காமல் திறந்து வெளியில் வைத்து விடுவோமாயின் அதில் வெளியிலுள்ள கெட்ட தூசிகளும் துற்கந்தப் பொருளும், ஈக்களும் விழுந்து அவ்வுணவு கெட்டுப் போவது நித்திய அனுபவமகும். இவ்வாறே மூடிவைக்க வேண்டிய ஒவ்வொரு வஸ்துவையும் நாம் திறந்து வெளியே போட்டுவிடுமோமாயின் அசுத்தக் கிருமிகள் அதில் தங்கி சுகாதாரக்கேட்டை விளைவித்து நோயுண்டாக்குகிறதென்பது வெளிப்படை. இதே உதாரணம் பெண்களுக்கும் தகுந்ததாயிருக்கின்றது. எனவே நம் பெண்மணிகளை ஆடவர்களின் கண்ணைவிட்டு மறைத்து பர்தாவுக்குள் வைப்பது அப்பெண்களின் நற்குண நல்லொழுக்கத்தைப் பாதுகாக்கும் நற்சாதனமாகும். ஆகாரத்தை வெளியே போடுவதால் அது கெட்டுப்போவதேபோல், பெண்களையும் எதேச்சையாக வெளியேவிட்டு பரபுருடர் சகவாசத்தில் உழலச் செய்துவிடுவதால் அப்பெண்ணின் கற்புக்குலைந்து, அவள் ஆன்ம வாழ்வே மாசுபடிந்ததாய் ஒழிகிறதென்பது வெளிப்படை. ஆகவே, பெண்ணாய்ப் பிறந்த ஒவ்வொரு பிறவிக்கும் நாணுந் தன்மையும், பர்தா வழக்கமும் கற்பைக் காக்கும் கடமையும், வாழ்வுக்கு உரியதாகின்றது. நேயர்காள்! பர்தாவின் மேன்மையையும் நன்மையையும் உணர்ந்து உங்கள் பெண்களை பர்தா அனுஷ்டிக்குமாறு கட்டளையிடுவீர்களாக!

ஷஹாதத்

உயர் மிகு இமாம்ஹஸன், இமாம் ஹுஸைன் (ரலி.) ஆகிய சோதரர்கள் உலக தயாளர் ரஸூலே அக்ரம் முஹம்மத் (ஸல்.) அவர்களுடைய அத்தியந்த அன்புவாய்ந்த பேரர்களாவர். இவ்விரு சகோதரர்கள் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் செல்வப் புதல்வியாகிய ஹஜ்ரத் பீபி பாத்திமா நாயகி (ரலி.) அவர்களுடைய சூலில் உதித்த அருமந்தப் புதல்வர்களாவர். பாத்திமா நாயகியின் (ரலி.) கணவரும், நபிகள் நாயகம் (ஸல்.)அவர்களின் மருகருமான நான்காவது கலீபா ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்கள் தம்மிரு கண்ணுண்மணிக் கொப்பாய இவ்விரு பிள்ளைகளை மிக்கப் பிரியத்தோடு வளர்த்து நற்குணமும் நல்லொழுக்கமும் புகட்டினவர்களாவ. பாட்டனாராய நமது நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இமாம்ஹஸன், ஹுஸைன் ஆகியவர்களைக் குழந்தைப் பிராயத்தில் மிகப் பிரியத்துடன் உச்சி மோந்து, உளம் பூரித்து ஆசீர்வதித்து இறைவன்பால் இனிது பிரார்த்தனைப் புரிந்துள்ளார்கள். இமாம் ஹஸன் ஹுஸைன்இவர்களின் ஷஹாதத்து-மரணம் எம்பெருமானர் (ஸல்.) அவர்களின் ஜீவிய காலத்திற்குப் பின் பல்லாண்டு கழிந்து நிகழ்வுற் றிருப்பினும் இது சம்பவத்தினை யொட்டித் தங்களது ஜீவியகாலத்திலேயேதீர்க்க தரிசனமாய் உணர்ந்திருந்தார்கள். ஆகவேதான் அக் குழந்தைகளை எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் வாரி யெடுத்து மார்போடணைத்து நெற்றிமோந்து பக்ஷம் பாராட்டியபோழ்து தங்கள் திருநேத்திரங்களினின்று துக்க நீர் சொரிந்து ஆசீர்வதித்தார்கள்.

இறைவன் கருணைக்கும், திரு நபிநாயகத்தின் ஆசிர்வாதத்துக்கும் உரித்தாய் விளங்கிய இமாம்ஹஸன், ஹுஸைன் (ரலி.) ஆகிய சோதரர்களும் உருவத்திலும் தோற்றத்திலும் நற்குண நற்சுபாவத்திலும், கம்பீரத்திலும் நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சகல அம்சங்களிலும் மிக மிக ஒத்தமைந்தவர்களா யிருந்துவந்தனர். இத்தகைய சிறப்புகள் வாந்த இருசோதரர்களும் தமது வாழ்நாளனைத்தையும் இஸ்லாத்தின் அனுகூலத்துக்கும், முஸ்லிம் பிரஜைகளின் க்ஷேமத்துக்குமென்றே அர்ப்பணஞ் செய்து திகழ்ந்தார்கள். இறுதியில் இஸ்லாமிய சமுதாய நன்மைக்காகவென்றே இருவரும் ஒருவர்பின் ஒருவராய் தம் இன்னுயிர்களை தியாகம் செய்து ஷஹீதாயினர்.

அவ் விரு சோதரர்களின் மூத்தவராய இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள் அமீர் முஆவியாவின் அதமப்புதல்வனாய யஜீதின் சூழ்ச்சியால் விஷம் ஊட்டப்பட்டு தமது 46-ம் வயதில் ஷஹீதாகி மரணமடைந்தார்கள். இவரது திருவுடலம் 'ஜன்னத்துல் பகீஃ' யென்னும் புண்ணியத்தலத்தில் நல்லடக்கஞ் செய்யப்பட்டுள்ளது. அவர்களது இளைய சோதரராகிய இமாம்ஹுஸைன் (ரலி.) அவர்கள், ஹிஜ்ரீ 61-ம் ஆண்டு முஹர்ரம் மாதம் 10-ம் நாளன்று கர்பலா மைதானத்தில் கடும்வெய்யிலில் தண்ணீரற்ற கானகத்தில் யஜீதுடைய கொடிய சேனைகளால் சற்றுமிரக்கமில்லா முறையில் கொல்லப்பட்டு சத்தியத்திற்காக வென்று ஷஹீதாயினர்,

இத்தகைய சந்தர்ப்பத்தில் அவ்விரு சோதரர்களும்இஸ்லாத்தின்நன்மைக்காகவும் முஸ்லிம்களின் க்ஷேமத்துக்காகவும் சத்தியத்துக்காகவுமென்று எவரால் எங்ஙனம் எச்சமயம் எவ்வித சூழ்ச்சிகளால் கொல்லப்பட்டு ஷஹீதானர்களென்ற விபரத்தை ஈண்டு சிறிது விளக்கிக் கூறுவோமாக :—

இமாம் ஹஸன் (ரலி.) ஷஹாதத்.

நபிகள் நாயகம் ரஸுல் (ஸல்.) அவர்கள் காலஞ்சென்றுவிட்டபின், அவர்களது நான்கு அருந்தோழர்களில் முதல்வராய ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் நபிபெருமானர் வகித்துவந்த கிலாபத் ஜனநாயக ஆக்ஷிப்பதவியை வகித்து நீதிவழுவாச் செங்கோன்முறை நடத்தி வந்தனர். இவருக்குப்பின் நீதிமான்களில்சிறந்த ஹஜ்ரத்உமர்பாரூக் (ரலி.) இரண்டாவது கலீபாவாக யிருந்து பரிபாலித்துவந்தார். அதற்குப்பின் ஹஜ்ரத் உஸ்மான் (ரலி.) மூன்றாவது கலீபாவாகயிருந்து நீதிபரிபாலனம் நடத்திவந்தனர். நான்காவதாய இமாம் ஹஸன் ஹுஸைனின் பிதாவும், நபிபெருமானரின் அரிய மருகருமான ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்கள் நான்காவது கலீபாவாகயிருந்து சீரானஆக்ஷி புரிந்துவந்தார்கள்.

இந்நான்காவது கலீபாவாகிய ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்கள் சன்மார்க்கத்துக்காக வென்றே ஷஹீதானபின்னர், முறைப்படி சர்வ இலக்ஷணங்களும் அமைந்த இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள் பெரும்பாலான ஜனங்களின் சம்மதப்படி அத்தலைமைப்பதவியைநடத்தலானார்கள். ஆனல்அக்காலைஸிரியா (ஷாம்.) தேசத்து அதிபராயிருந்துவந்த அமீர்முஆவியா அதற்கு முரண்பட்டு முன்வந்து, அலீ (ரலி)க்குப்பின் தகுதியுள்ள தமக்குத்தான்அந்த கிலாபத் தலைமைப்பகுதி உரியதென்றும், ஆதலின் தனக்கே அதை ஒப்படைத்துவிட வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்தார். இப்பிரச்சினையானது இறுதியில் கடும்போர் மயமாய் மூண்டு எரியும்போலாகிவிட்டது. இருசார்பினரும் போர்க்களத்தை நோக்கி முனைய சித்தமாயினர். இயற்கையிலேயே மேன்மை சுபாவமும், இளகிய உள்ளமும், பெருந்தன்மையும் சகிப்புக்குணமும் ஒருங்கே அமையப்பெற்ற இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள், அவ்வுயர்தரப் பதவிக்காகவென்று மக்கள் எவரும் போர்த்தொடுத்து இரத்தஞ் சிந்தலாகாதென்ற பெருந்தன்மைபூண்டு, அப்பதவியைவிட்டுக் கொடுத்துவிடுவதற்கு அமீர் முஆவியாவுடன் சமாதானஞ் செய்துகொள்ள முன்வந்தனர். இதன்படியே பேசி முடிவு செய்யப்பட்டு, "அமீர் முஆவியாஉயிருடன் வாழுங்காலமெல்லாம் கிலாபத் பதவியை வகித்து பரிபாலனம் புரியலாமென்றும், இவரது மரணத்துக்குப்பின் அப்பதவி நபிகள்நாயகத்தின்பேரருக்கே சேரவேண்டுமென்றும், நபிகள் நாயகம்(ஸல்.) அவர்களுடைய வழியைப் பின்பற்றி குர்ஆன் ஹதீது கட்டளைகளுக் கியைந்த முறையிற்றான் பரிபாலனம் புரியவேண்டுமென்றும் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளப்

பட்டது. இவ்வொப்பந்தப்படி இமாம்ஹஸன் (ரலி.) அவர் தமக்குரிய கிலாபத் பதவியை ஹிஜ்ரி 41-ம் வருடத்தில் கூபாவிலுள்ள ஜாமிஃமஸ்ஜிதியில் எல்லோரின் முன்னிலையில் தற்காலிகமாய் அமீர் முஆவியாவுக்கு பகிரங்கமாகவிட்டுக் கொடுத்துவிட்டனர்.

இமாம்ஹஸன் (ரலி.) அவர்களது இப்பெருந் தன்மை பெரிதும் போற்றற்குரியதாம். இப்பெருந் தகையார் கிலாபத் பதவிவகுத்து கடனாற்றிய காலம் 6 மாதங்களும் சின்னாட்களுமேயாம். இவர்கள் இங்ஙனம் விட்டுக் கொடாதிருப்பரேல் இரு சாராரிலும் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் வீரர்கள் தம் உயிர்களை இப்பிரசினைக்காக போரில் தியாகம் செய்து மாண்டுபோயிருப்பர். இமாம் ஹஸன்(ரலி.)அவர்கள்சார்பாகபோர் தொடுத்து தங்கள் உயிர்களை அர்ப்பணம் புரிய நாற்பதினாயிரம் முஸ்லீம் வீரர்கள் தயாராயிருந்தும் இப்பெரும் பக்கபலத்தைக் கொண்டும் இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள் மனைவயிரங் கொள்ளாமல் அப்பதவியை விட்டுக்கொடுத்த நற்செயலை அக்காலையே இமாம் முஆவியா உட்பட பல சஹாபாக்களும் பாராட்டிப் புகழ்ந்துள்ளார்கள்.

இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள் கலீபாப் பதவியை இச்சிக்காது விட்டுக்கொடுத்துவிட்டு திருமதீனா நகருக்குப் போந்து சாதாரணமாகவே எளிய முறையில் வாழ்ந்து வந்தார்கள். ஏற்கெனவே இவர்களது விரோதிகள் இமாம்ஹஸன்(ரலி.)அவர்களைக்கொன்று விடுவதற்காக வென்று சூழ்ச்சி செய்து பன்முறை விஷங்கொடுத்து தீங்கு விளைவித்துள்ளார்கள். அமீர் முஆவியாவின் மகன் யஜீது என்பான் தந்தைக்கிருந்த ஒரு சில நற்குண ஒழுக்க நல்லம்சங்களுங்கூட இல்லாதவனாய் மிகத் துஷ்டனாகவும், குறுகிய புத்தியினனாகவு மிருந்தனன். இன்னவன் தந்தை முஆவியாமரித்து இமாம் ஹஸன் உயிருடன் இருப்பரேல் தனக்கு அக்கிலாபத் பதவி கிடைக்காது போய்விடுமென்ற அழுக்காறு கொண்டு இமாம் ஹஸன் (ரலி.) மீது கொடிய குரோதங் கொண்டனன். எனவே இவன் பெருஞ் சூழ்ச்சிசெய்து வேற்றாள் வாயிலாய் இமாம்ஹஸன் (ரலி.) அவர்கட்கு இம்முறையும் நஞ்சூட்டி ஜீவிய வாழ்வைக் குலைத்தான். பன்முறை நஞ்சுண்டு இறை யருளால் பிழைத்திருந்த இமாம்ஹஸன் (ரலி.) அவர்கள் இவ்விறுதி முறையுண்ட நஞ்சால் உடல் நலம் பாதிக்கப்பட்டு, ஜீவாதாரம் முறிபட்டு ஈரல் துண்டிக்கப்பட்டு கடுநோயால் பீடிக்கப்பட்டிருந்து விஷ உபாதையாலேயே ஷஹீதாகி மவுத்தாகிவிட்டனர்.

தமக்கு யாரால் விஷ மூட்டப்பட்டதென்பதை இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள் சமுசயித்து உணர்ந்திருந்தார்களாயினும்,பொது ஜனங்கட்கு அன்னோன்மீது ஆக்குரோஷம் உண்டாக்கிவிடுதல் நல்லதல்லவெனக் கருதி தான், யஜீதைகாட்டிக் கொடுக்காமலே தம் இன்னுயிரை இழந்தார்கள். நிற்க, இப்பெருந் தகையாரின் மரணோபதேசம் (வஸிய்யத்) படியே அவர்களுடைய திருவுடல் ஜன்னத் துல்பகீஇல் தமது அருந்தாயாரின் மஜாருக்குப் பக்கத்தில்தான் நல்லடக்கஞ் செய்யப் பெற்றிருக்கின்றது.

இமாம்ஹஸன் (ரலி.) அவர்கட்கு பல மணங்கள் ஆகியிருந்தன. அவற்றால் பன்னிரண்டு ஆண்மக்களும், ஐந்து பெண்மக்களும் ஜனித்திருந்தனர். இப்பன்னிருவரில் இமாம் காஸிம், உமர், அப்துல்லா ஆகிய மூன்று புதல்வர்கள் இஸ்லாத்தின் நன்மைக்காக வென்று இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களுடன் கர்பலாவில் ஷஹீதாகி விட்டனர். மற்றிரு புதல்வர்களாய ஹஜ்ரத் ஜைத், ஹஜ்ரத் ஹஸன் ஆகிய இருவர்களின் குடும்பம் பெருகி அவ்வழியே தோன்றியவம்சம் இது காலையும்இத்தரணியில் வாழா நிற்கின்றனது. மேலும், இமாம் ஹஸன் (ரலி.) மார்க்க பக்தியிலும் சற்குணத்திலும் சிறந்தவர்கள் கால் நடையாய் சென்று 20 முறை ஹஜ்ஜு செய்துள்ளனர். மும்முறை தமது முழுச் செல்வத்தை சரியாக பகிர்ந்து தர்ம மளித்துள்ளனர்.

இமாம் ஹுஸைன் (ரலி.) ஷஹாதத்தும் கர்பலாப்போரின் அகோரமும்.

பெருந்தன்மையினால் தம்கிலாபத் பதவியை விட்டுக்கொடுத்து சமாதான ஒப்பந்தஞ் செய்திருந்த இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள் விஷத்தினால் ஷஹீதாகிவிடவே, நிரந்தரமாக அக்கிலாபத் பதவியை கைப்பற்றி ஆதிக்கங் கொள்ளவேண்டுமென்ற துர் எண்ணங் கொண்ட அமீர் முஆவியா, எவ்வாற்றேனும் தம்புதல்வன் யஜீதை கிலாபத் பதவிக்குரிய இளவரசனாக்கி வைத்துவிட வேண்டுமென்ற பல திறப்பட்ட சூழ்ச்சிகள் புரியலானார். அம்முயற்சி ஈடேறுதற்கு ஜனங்களுக்குப் பொருளை இலஞ்சமாக வாரிக்கொடுத்து, 'யஜீதை இளவரசனாக ஒப்புக்கொள்ளுமாறு' ஜனங்களைத் தூண்டி சில நன்றியற்றாரிடமிருந்தெல்லாம் 'பைஅத்' என்னும் வாக்குறுதிப் பெறலானார். அநேக பெரிய சஹாபாக்களும் கண்ணியவான்களும் முஆவியாவின் இலஞ்சத்தை திரஸ்கரித்து அத்தீச்செயலுக்கு எதிர்ப்புப் புரியலானார்கள். இங்ஙனம் கிலாபத் பதவிக்காக முன்னடியாகவே இளவரசனை யேற்படுத்துவது இஸ்லாமிய ஜன நாயக ஆக்ஷி முறைக்குரியதன்றென்றும், இஃது எதேச்சாதிகார அரசாக்ஷி புரிவோரின் வழக்கமென்றும், பெரியோர்கள் எடுத்தோதினார்கள். முஆவியா இந்நியதிக்கு இணங்காது முரண்பட்டு, பல துறையிலும் ஆட்களை ஏற்படுத்தி ஜனங்கள் பால், யஜீதை இளங்கோவாக ஏற்றுக்கொள்ள பல பிரசாரங்களும் செய்வித்து வந்தார்.

அமீர் முஆவியாவின் பிரதிநிதி (கவர்னர்) திருமதினா நகரின் மஸ்ஜிதில் வெள்ளிக்கிழமையில் ஜும்ஆ குத்பா ஓதுங்கால் "கலீபா அபூபக்கர், உமர் ஆகியவர்களது வழிமுறைப்படி பொதுஜனங்களெல்லோரும் அமீர் முஆவியாவின் புதல்வராகிய யஜீதை இளவரசராக அங்கீகரித்துக்கொள்ள வேண்டும்" என்று எடுத்துக் கூறினார். அது சமயம் முதற் கலீபா ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி.) புதல்வராகிய ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் எழுந்து மேற்படி பிரதிநிதியின் பகற்கூற்றை கண்டித்துப் பேசி, "யஜீதை கிலாபத்துக் குரியவனாக்குதல் ஒருபோதும் கலிபா அபூபக்கர், உமர் ஆகியோரின் வழிமுறையாகாது. இச்செயல் கெய்ஸர், கிஸ்ரா போன்ற எதேச்சாதிகாரமுள்ள கொடுங்கோலர்களின் தீய வழக்கமேயாம், ஏனெனின் முதலிரண்டு கலீபாக்கள் தங்கள் புதல்வர்களை ஒருக்காலும் தம் கிலாபத் ஸ்தானத்தில் நியமிக்கவில்லை" யென்னும் உண்மையை எடுத்தோதினார்கள். எனவே அதுகாலை பொதுமக்கள் ஏக முகமாய் எக்காரணத்தாலும் யஜீதை இளங்கோவாக ஏற்றுக் கொள்ளவில்லை.

அமீர் முஆவியா காலஞ்சென்று போனதும் உடனே யஜீது தனது தகப்பனின் ஸ்தானப் பதவியில் பொதுஜன விருப்பமின்றியே ஆதிக்கங்கொண்டு எதேச்சாதிகார ஆக்ஷி செலுத்தத் தொடங்கினான். இதுவன்றி பொது ஜனங்களை வற்புறுத்தி பலாத்காரஞ்செய்து தன்னை அரசனாக ஏற்றுக் கொள்வித்து அறுதிமானமும் வாங்கி வந்தனன். இதனால் யஜீது இஸ்லாமிய வழக்க முறைப்படி கிலாபத் பதவிக்கு வரவில்லையென்பதும், அவன் சன்மார்க்க முறைக்கு முரணாகவே நடந்துகொண்டானென்பதும் வெளியாகின்றன. இதல்லாது யஜீதானவன் குணசுபாவ ஒழுக்கத்திலோ மூர்க்கனாகவும், ஒழுங்கீனனாகவும், பாபஞ் செய்பவனாகவுமிருந்தனன். ஆதலின் அத்தகையவன் புனிதமான கிலாபத் பதவிக்கு அருகனல்லவென பல்லோராலும் முடிபு செய்யப்பட்டது.

அம்முடிபின் படியே இமாம் ஹுஸைன் (ரலி.) முதலியவர்கள் இரண்டு காரணங்களை முன்னிட்டு யஜீதின் ஆதீனத்துக்கு ஒப்பந்தஞ் செய்து கொடாமல் அவனுக்கு எதிரிடையாக நிற்கலானார்கள். அவற்றில் ஒன்று:— அவன் இஸ்லாமிய ஜனநாயக

ஆகூஷி முறையை திரஸ்கரித்து எதேச்சாதி காரமாய்க் கொண்டதுடனில்லாமல், பொது மக்களை தன்னை ஒப்புக்கொள்ளுமாறு பலாத் காரஞ் செய்தானென்பது. மற்றொன்று.— அவன் குணத்திலும் நடத்தையிலும் சன் மார்க்க ஆசாரத்திலும் மிகவும் முரண்பட்டு நடந்து வந்ததுடன், மார்க்க பக்தியிலும், ஒழுக்கத்திலும், நடப்பிலும், உத்தமோத்த வனுயில்லாதவன் இஸ்லாமிய கிலாபத் பத விக்கு அருகனல்ல வென்பது.

பொதுஜனங்களை யஜீது வற்புறுத்தியும், பலாத்காரப் படுத்தியும், ஏமாற்றியும் பை அத்து (அறுதிமானம்) பெற்றுக் கொண்டது போல் இமாம் ஹுஸைன் அவர்களிடமிருந் தும் பைஅத்து வாங்கிவிடவேண்டு மென்று அறுதி மானத்திற்காக தூதாளொருவனை அனுப்பி வைத்தனன். அத் தூதுவன் கொண்டுவந்த அறுதிமானத்தை இமாம்ஹு ஸைன் அவர்கள் ஒரே அடியாய் நிராகரித்து விட்டு, திருமதீனு நகரை விட்டு திருமக்கமா நகருக்குப்போய்ச் சேர்ந்துவிட்டனர்.

இதுசமயத்திற்றான் கூபாக்காரர்களில் பல் லோர் இமாம் ஹுஸைனவர்கட்கு அபிமான நிருபங்கள் பல விடுத்தனர். அதில் "கூபா வின் பிரஜைகளெல்லாம் தங்களிடம் பைஅத் துப்பெற தயாராயிருக்கின்றனர் என்றும், யஜீதின் கொடுமையை விட்டும் பலாத்கார பைஅத்தை விட்டும் எங்களை பாதுகாக்க வேண்டு மென்றும், இஸ்லாத்தைத் தற்காக்க வேண்டு மென்றும்" கோரிக்கொண்டனர். இதற்கு நம் ஹுஸைன் (ரலி.) அவர்கள் இணங்கி முதலில் தமக்குபதிலாக பைஅத்து பெற 'முஸ்லிம் பின் உகைல்' என் னும் அறிஞரை கூபாவுக்கு தம்பிரதி நிதியாக அனுப்பி வைத்தனர். கூபாவின் பல்லாயிர ஜனங்கள் முஸ்லிம்பின் உகைல் அவர்களிடம் பைஅத்துச் செய்துகொண்ட னர். நிற்க, இச்சிறப்பு வரலாறுகளையும், பிர ஜைகள் இமாமுடைய விஜயத்தை விரும்பும் விஷயத்தையும் நிருபமூலம் முஸ்லிம் பின் உகைல் அவர்கள் இமாம்ஹுஸைன் (ரலி.) அவர்கட்கு தெரிவித்து அழைத்தனர். இதன் படியே ஹஜ்ரத் இமாம்ஹுஸைனவர்கள் தமது மனைவிமக்கள் குடும்ப சகிதமாய் கூபா வுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

இதுநிற்க, கூபாஜனங்களில் பல்லாயிரம் பேர் இமாம் ஹுஸைனுக்கு ஆதரணையாய் ஹஜ்ரத் முஸ்லிமிடம் பைஅத்துசெய்து கொண்டனர் என்ற விஷயம், யஜீதுக் கோஷ் டியினருக்குத் தெரிந்துவிட்டது. உடனே அம்முரட்டு யஜீது தனது பிரதிநிதியாகிய 'அத்ஹர்பின்ஜியாத்' என்பவனை சகல பரி வாரங்களுடன் கூபாவுக்கு அனுப்பிவைத்து பலாத்காரஞ் செய்து ஜனங்களை தன்பக்கல் சேர்க்குமாறு கட்டளையிட்டனன். யஜீ துடைய ஆள்கள் கூபாசென்று பிரஜைகளை மிகவும் அதிக்கிரமமாக துன்புறுத்தவும், பலாத்காரஞ் செய்யவும், பொருளாசைப் புகட்டவும் தீவிரமாய்த்தொடங்கிவிட்டனர். இவ்வதிக்கிரமங்கட்கு இலக்காகி பயந்த கூபாவாசிகள் யாவரும் ஹஜ்ரத் இமாம் ஹு ஸைன் (ரலி.) அவர்களுக்காக செய்துகொ டுத்த பைஅத்தை முறித்துவிட்டு நன்றி கெட்டதனமாய் யஜீதின் பக்கம் சேர்ந்து விட்டனர். இத்துடனில்லாமல், இமாமின் பிரதிநிதியாகிய ஹஜ்ரத் முஸ்லிம் அவர்களை யஜீதின் ஆளாகிய அத்ஹர்பின் ஜியாதின் வசம் பிடித்துக் கொடுத்துவிட்டனர். கடு களவும் இரக்க சித்தமில்லாத அந்த அத்ஹர் என்பவன் அம்முஸ்லிமை கொன்று ஷஹீ தாக்கியது மன்றி, அவருடைய இரு இளங் குழந்தைகளையும் கழுத்தையறுத்து படு கொலை புரிந்துவிட்டான்.

கூபாவில் நிகழ்வுறும் இவ்வதிக்கிரம்க் கொ டுங்காரியங்களைப்பற்றி இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்கட்கு முன்னறிக்கை செய்வதற்கு கூபாஜனங்களில் ஒருவன்கூட முன்வராதிரு ந்து விட்டனன். ஒன்றுமறியாத இமாம்ஹு ஸைன் அவர்கள் கூபாவுக்குவந்து சேர்ந்த தும், 'தமது பிரதிநிதியாகிய ஹஜ்ரத் முஸ் லிம் கொல்லப்பட்டு போனதையும், அவரது இரு சிசுக்கள் படுகொலைப் புரியப்பட்டதை யும், கூபாஜனங்கள் நன்றிகெட்டதனமாய் பைஅத்துக்கு மாறுசெய்து காட்டிக்கொடுத் ததையும்' உணர்ந்து திக்பிரமை யடைந்த னர்.

இஃதிங்ஙனமிருக்க, இமாம்ஹுஸைனையும் பலாத்காரப்படுத்த எண்ணி அவர்வருகையை எதிர்ப் பார்த்துக்கொண்டிருந்த யஜீதின் சே னைத் தலைவனுன உமர்ஸஅத் என்பவன் கூபா வில் பெரும்படையுடன் இமாம்ஹுஸைன் அவர்களை சூழ்ந்துக் கொண்டான். அக் கொடிய வெய்யிற்காலத்தில் சாதாரணமாய்

விலங்கினம், பக்ஷிகள் யாவும் உரிமையோடு நீரருந்தும் 'புராத்' நதிஜலத்தில் ஒரு துளி கூட இமாம் ஹுஸைனே, அவரது மனைவி மக்களோ, தோழரோ தொடக்கூடாதென கடுங்காவலிட்டு தடைபுரியப்பட்டனர்.

இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களுக்கும் யஜீதின் சேனாதிபதிக்கும் தர்க்கம் நிகழ்வுற்றது. இமாம் ஹுஸைனவர்கள், மூன்று உரிமை வேண்டினர். (1) தாங்கள் மக்காவுக்கோ, மதீனாவுக்கோ போய் சேர்ந்துகொள்ள விட்டுவிடல் வேண்டும். (2) இல்லாவிடில் எதுவும் பேசி முடிவுசெய்து கொள்ள யஜீதின் முன்னிலைக்கு தம்மை நேரே அனுப்பிவைத்தல்வேண்டும். (3) இஸ்லாமிய எல்லைக்குட்சென்று காபிர்களுடன் ஜிஹாது புரிய தமக்கு உரிமை வேண்டும் என்பனவாம். இவற்றில் ஒன்றையும் அத்தலைவன் உமர்ஸஅத் ஒப்புக்கொள்ளாது அலக்ஷியஞ்செய்து நிராகரித்தனன். இதற்குமாறாக "தாங்கள் எஜீதை இஸ்லாமிய அரசனென்று ஒப்புக்கொண்டு பைஅத்துச்செய்து கொடுத்தாகவேண்டும்" என்று வற்புறுத்தினான். அவனது அதமத்தன வேண்டுதலை இமாம் அவர்களும் உதாசீனஞ்செய்து நிராகரித்து விட்டனர்.

இங்ஙனம் இமாம் அவர்கள் சத்தியத்தின் மீதும், சன்மார்க்க நியதியின்மீதும் நிலையாய் நின்று யஜிதை கலீபாவென ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று கூறிவிடவே யஜீதுடை ஆட்கள் இமாமுடைய மனைவிமக்களை துண்புறுத்தவும், கடும் போர் தொடுக்கவும் முனைந்துவிட்டனர். இந் நெருக்கடியான சந்தர்ப்பந்தான் முஹர்ரம்மாதம் 10-ம் நாள் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகை நேரமாயிருந்தது.

மேலும் கல்மனமும், மிருகக்குணமும், பேய்த்தனமும் படைத்த யஜீதுக்கோஷ்டியினர் இமாம்ஹுஸைனுடனும் அவரதுமனைவி மக்களுடனும், சொற்பத்துணைவர்களுடனும் கடும் போர் தொடுக்கலாயினர். யஜீதின் சேனைகள் ஆயுதபாணிகளா யிருந்தனர். இப் பாதகர்கள் முதலில் இமாம்ஹுஸைன் முதலியவர்கட்குமூன்றுநாட்கள்வரை ஆகாரமென்ன! புராத் நதியின் பச்சைத் தண்ணீருங்கூட இவர்கட்கு கிடைக்காதபடி பசியாலும் தாகத்தாலும் வாட்டினர். பின்னர் ஆயுதந்தாங்கி போர்த்தொடுத்தனர். முதலாவதாக இப்போரில் 'ஹுர்ருபின் ரயாஹீ' அவர்கள் வீரத்தோடு வெட்டுண்டு ஷஹீதாகி மாண்டனர். பிறகு ஹஜ்ரத் அப்பாஸ், இமாம்ஹஸனின் புதல்வராய ஹஜ்ரத்காஸிம், இமாம்ஹுஸைனின் புதல்வராய் அலிஅக்பர் மற்றுஞ் சில துணைவர்கள் ஆகியோர்ஒருவர்பின் ஒருவராய் அக்கர்பலாப்போரில் மிகப் பரிதாபகரமாய் மாண்டு ஷஹீதானார்கள். சுருங்கக்கூறுமிடத்து யஜீதின் வீரர்கள் கிஞ்சித்தும் இரக்க மில்லாமல் சின்னஞ் சிறு குழந்தைகளையுங்கூட தாகத்தாலும் பசியாலும் வாட்டி, வெட்டி வீழ்த்தி ஷஹீதாக்கினர். விருத்தாப்பியர்களைக் கூட சிறிதும் இரக்கமில்லாமல் கொன்று ஷஹீதாக்கினர். இமாமின் ஆறுமாதக் கைக் குழந்தையாயிருந்த அலி அஸ்கர் என்னுஞ் சிசுவை யஜீதைச் சேர்ந்த ஒரு கொடிய மூர்க்கன் அம்பால் எய்து உடலைச் சிதைத்துக் கொன்று ஷஹீதாக்கினான். அக் குழந்தை அதன் தந்தையாகிய நம் இமாம் அவர்கள் மடியில் பரிதாபகரமாய் உயிர் நீத்தது ஹா! என்னே பரிதாபம்!! அது சமயம் பெற்றோர்களது மனம் எவ்வாறுதுடித்திருக்குமென எண்ணுகிறீர்கள்!!!

இதுகாறும் நமது இமாம்ஹுஸைன் (ரலி.)மனஞ்சகித்து திடசித்தத்தோடு சாதாரணமாய் சத்தியஜிஹாதுபுரிந்து கொண்டுதானிருந்தனர். இதில் கணக்கற்ற யஜீதுக் கோஷ்டியினரை வெட்டி வீழ்த்தி உடல்களை உருட்டினர். தமது அத்தியந்த பிரிய மக்களும், சகாக்களும், பல்லோரும் கொல்லப்பட்டதுட னில்லாது தம் 6 மாதக் குழந்தையும் பரிதாபமாய் கொல்லப்பட்ட கோரக்காக்ஷியைக் காணவே இமாம்ஹுஸைனவர்கட்கு அடக்கொணா ஆத்திரம் பொங்கி 'துல்பகார்' என்னும் வாளை இறுகப்பிடித்துக்கொண்டு குதிரைமீதேறி எதிரிகள் படையில் புகுந்து தம் வீராதி வீரத்தனத்தால் பல மூர்க்கர்களை வெட்டி வீழ்த்தினர். இறுதியாய் யஜீதின் வீரர்களில் ஒரு மூர்க்கன் பின்புற மிருந்து கூரிய நீண்ட ஈட்டியால் நமது ஹஜரத் இமாம் ஹுஸைன் அவர்களுடைய திருவுடலத்தைகுத்திச் சிதைத்துவிட்டனன். மூன்றுநாள் அன்னந்தண்ணீரில்லாமல் வீரப் போர் தொடுத்த இமாம் அவர்கள் குதிரைமீதிருந்தேகளைத்து சோர்ந்து கீழேவிழுந்தனர்

பின்னர் அப்படுபாவி 'ஷுமர்' என்பான் இமா மவர்களுடைய திருச்சிரசை வெட்டி எடுத்துக் குதிரைக்காலில் இடரச்செய்து அவமானப்படுத்தியதோ டில்லாமல், ஈட்டி முனையால் அச் சிரசை குத்தி தூக்கி உயரப் பிடித்துக்கொண்டு அதை ஊர்வலத்தோடு ஷாம் தேசத்துக்கு எடுத்துச் சென்று கொடிய யஜீதிடம்ஒப்படைத்துவிட்டனன். ஹா! என்னே கொடுமை! எத்துணை பரிதாபம்! அந்தோ!

இங்ஙனம் உத்தம தயாநிதி, சத்தியதியாகி, முஸ்லிம்களின் இமாம்-ஹஜ்ரத் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உடல் வேருய் சிரம்வேருகி, சத்தியத்தை காப்பதற்காகவென்று உயிர்நீத்து வீரமாய் ஷஹீதானர்கள். இறுதியில் அப்பெருந்தகையாரின் உடல் கர்பலா மைதானத்திலும், சிரசுமதீனவிலுள்ள, 'ஜன்னத்துல் பக்கீ' இலும் இஸ்லாமிய உத்தமப் பெரியார்களால் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

இதினின்று நம்மவர்க்கு ஏற்படும் படிப்பினை யாதெனின், இஸ்லாத்தின் நன்மைக்காக எத்தகைய துன்பங்கள்—சங்கடங்கள் வந்துற்றபோதிலும் சகித்து அனுபவிக்க வேண்டும். கொடுமைக்கோ, பலாத்காரத்துக்கோ அஞ்சி சத்தியத்தையும், அறநெறியையும் விட்டுக்கொடுத்தலாகாது. பரிசுத்த தீனுல் இஸ்லாத்தின் மான்மியத்தை காப்பதற்காக வேண்டி தம் இன்னுயிரை தியாகம் செய்யவும் பின்னடையலாகாது. இவைகளே இமாம் ஹஸன், ஹுஸைன் (ரலி.) ஆகியஇரு சோதர மஹான்களின் சத்திய ஷஹாதத்து வரலாற்றினின்று நாம் கிரகித்து அனுஷ்டிக்கவேண்டிய படிப்பினையாகும். இப்படிப் பினைப்படி நாம் நடந்து மதத்துக்கும் மக்கட்கும் நலன்புரிய இறைவன் திருவருள் பாலிப்பானக. ஆமீன்.

பரிசுத்த முஹர்ரமும், ஆகாக் கருமங்களும்.

இஸ்லாம் மதம்மிகத் தூய்மையானதும், சீரான சற்குண சத்தொழுக்கப் போதனைகள் நிலவியதும், மௌட்டியச்சடங்குகள் வீண டம்பரங்கள், ஷிர்க்கு பித்அத்துகள் ஆகியவற்றைவிட்டு பரிசுத்தமானதுமான சன்மார்க்கமாகும். இஸ்லாத்தின் இனிய போதனை ஏனைய சர்வமத போதனைகளைக் காட்டினும் மிகச்சிறந்ததும், ஆழிய கருத்துடையதும் புத்திக்கும் யுக்திக்கும் மிகப் பொருந்தியது மாமென்பது வெள்ளிப்படை.

உண்மை இவ்வாறிருக்க நம் முஸ்லிம் சமூகப் பாமரமக்கள் போதிய மார்க்கக்கல்வி ஞானமில்லாக் காரணத்தால் அவர்களது நித்திய நிகழ்ச்சிகளில் பலதிறப்பட்ட மூடக்கொள்கைகளும், ஷரீஅத்தில் விலக்கான காரியங்களும், ஏகதெய்வத்துவ கொள்கைக்காகாத ஷிர்க்கான செயல்களும், வேறு பல பித்அத்துகளும் ஆகாத கருமங்களும் இடம் பெற்று பெருகி அவ்வெளிய முஸ்லிம்களை சன்மார்க்க பக்தியொழுக்கத் துறையில் மிகவும் வீழ்ச்சிக்குள்ளாக்கி விட்டன. உதாரணமாக நிகழும் முஹர்ரம்மாத முதற்பத்து நாட்களில் இவ்விந்திய நாட்டில் பலதிறப்பட்ட நகர கிராமப்பகுதிகளில் நடைபெறும், ஸந்தூக் எடுத்தல், பஞ்சாவைத்தல், பஞ்சா தூக்கித்திரிதல், வேஷம்போடுதல், அருவருப்பான கொப்பிப்பாட்டுகளை பாடித்திரிதல், மாரடித்தல், பாட்டுக்கச்சேரி நடத்தல், பச்சைத் துணியணிந்து பஞ்சாவின் முன் பணிந்து நேர்ச்சை முதலியன செய்தல்போன்ற நூற்றுக்கணக்கான கருமங்களை எடுத்துக் கொள்வோம். இக்காரியங்கள் நம் இஸ்லாமிய—ஸுன்னத்து வல்ஜமாஅத்தின் கொள்கைக்கு ஆகாத கருமங்களென்பதில் மார்க்கபக்தர் எவருக்கும் ஆக்ஷேபனை யில்லை யென்பது உண்மை. அங்ஙனமிருந்தும் நம் முஸ்லிம் சமூகத்தின் பாமர மக்களில் ஒரு சாரார் மேற்படி சடங்குகளைப் பிடிவதாமாய் செய்து சீர் கேடுற்று வருவது மிக மிகவருந்தற்குரிய விஷயமாகும்.

நிற்க, முஹர்ரம் மாதத்திற்கும் இத்தகைய ஷிர்க்கு பித்அத்தான காரியங்கட்கும் ஏதேனும் சம்பந்த முண்டாவென சற்றுகவனிப்போம். எம்பெருமானர் லோகதயாளர்

விக்கிர நிக்ரஹர்சத்திய சீலர் அஹ்மத் முஸ்த பாரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய அத்தியந்த அருமைப் பேரர்களாகிய ஹஜ்ரத் இமாம்ஹஸன், இமாம் ஹுஸைன் (ரலி.) ஆகிய இருசோதரப் பெரியார்கள் பண்டைப் போது முஹர்ரம் மாதத்திற்றான் பகைவர்களால் முதியவர் விஷங் கொடுக்கப்பட்டும் இளையவர் கர்பலா மைதானத்தில் கடுகளவும் இரக்கமின்றி படுகொலைப் புரியப்பட்டும் ஷஹீதாகிப் போனார்கள். இஃதல்லாது இந்த முஹர்ரம் மாதம் வேறு பல்வகைச் சிறப்புமுடைய தாகும். அவையாவன :—

(1) இம்மாத முதற்றேதியிலிருந்து தான் இஸ்லாமிய ஆண்டாகிய ஹிஜ்ரீ ஆரம்பமாகின்றது. (2) "ரமலான் மாதத்திற் கடுத்தபடியாய்நோன்பு நோற்பதற்கு சிறந்த நாட்கள் முஹர்ரம் மாத முதற்பத்து தினங்களாகிய "ஆஷூரா" தான் என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவுளம் பற்றியுள்ளார்கள்.

இவையல்லாது, ஹஜ்ரத் நபி ஆதம், (அலை.) இப்ராஹீம் (அலை.) இவர்கள் பிறந்தது முஹர்ரம் மாதம் தானென்றும், நூஹ்நபி (அலை.) அவர்களுடைய மகாப்பிரளயக் காலக் கப்பல் இம்மாத பத்தாம் நாட்தான் கரைத் தட்டி காக்கப் பட்டதென்றும், ரிவாயத்துகளில் கூறப்பட்டுள்ளன.

சுருக்கக்கூறு மிடத்து முஹர்ரம் மாதம் மிகமிகச் சிறப்பும் கண்ணியமும் பொருந்திய தாகுமென்பதில் ஐயமில்லை. இத்திங்கள் இத்துணை மகாத்மியம் மிக்க தாயிருந்தும் பாமரமக்கள் அம்மாத முதற்பத்து நாட்களை ஷிர்க், பித்அத்தான காரியங்கள் செய்யவும், கைச்சிலையாகிய பஞ்சாத்தூக்கவும், வேடங்கள் பூண்டு அவிவேகத்தனமாய் நடிக்கவும், அருசையான பாட்டுகளைப்படிக்கவும் உபயோகித்து இழிவுபடுத்திவருவது பெரிதும் வருந்தற்குரிய விஷயமாகும். ஏனெனின் பரிசுத்த தீனுல் இஸ்லாம் மதத்தில் உதித்த முஸ்லிம்கள் இத்தகைய ஆகாத - இழிய காரியங்களைப் புரிவதைகாணும் இதர சமூகத்தினர் கைகொட்டிவாய் பேசி இழிவு படுத்தி சிரிக்கின்றனர்.

நிற்க, இந்நாட்களில் செய்யக்கூடுமான காரியம் இஸ்லாத்தின் நன்மைக்காக தியாகமாகி ஷஹீதான இமாம்ஹஸன்-ஹுஸைன் (ரலி.) அவர்களது ஆன்மாவுக்கும், கர்பலாப்போரில் எதிரிகளால் கொல்லப்பட்டு ஷஹீதான இதர உத்தமப் பெரியார்களின் ஆன்மாக்களுக்கும் மன்னிப்பையும் திருவருளையும் சுவனபதியும் அளிக்குமாறு எல்லாம் வல்ல அல்லாஹுத ஆலாவிடம் பெரிதும் இரந்து பிரார்த்திக்க வேண்டியதும், அவர்களது சாந்திக்காககுர் ஆன் அத்தியாயம், ஸலவாத்துகள் முதலியன ஓதி ஒப்படைப்பதுவுமேயாம். இஃதல்லாது இக்காலப் பாமரர்கள் பலர், கர்பலாவில் மாண்டுஷஹீதான அப்பெரியார்களின் மவுத்துக்கு வருந்துவதற்கு பதிலாக புலிவேஷமும், பெண்வேஷமும், அருசையான வேடமும் பூண்டு கேலிகரக்கூத்தாடிக் கேவலப் படுத்துவது முற்றும் மௌடீகத்தனமும் வழிகேடான காரியமும், ஷிர்க்குபித் அத்துகளுமேயாகு மென்பதில் ஐயமிலது.

இன்னமும், ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்களும், இதர இஸ்லாமிய வீரதீரப் பெரியார்களும் பண்டைப்போது கர்பலாக்கொடு வெய்யில் மைதானத்தில் விரோதிகளால் முற்றுகை யிடப்பட்டு அன்னந் தண்ணீர் அளிக்கப்படாமல் வேகும் வெய்யிலில் பலநாள் பசியாலும் தாகத்தாலும் நாவரண்டு குடல் காய்ந்து வாடி வதங்கி அகோரமாய் ஷஹீதாயிருக்க, இக்காலத்து பாமரர்கள் ஷர்பத் பானங்களைக்குடங்குடமாய் கரைத்து சந்தோஷகரமாய் தாங்களும் பருகிக்கொண்டும், பிறர்க்கு பகிர்த்துகொண்டும் பஞ்சாவின்முன் கொண்டாட்டம் போடுகின்றனர். இஃதென்ன வழக்கமோ அறிகிலேம். இக்காரியம் கொண்டாடப்படுவது துக்கத்தை முன்னிட்டா? சந்தோஷத்தை முன்னிட்டா என்பதைக்கூட யோசித்துப் பாராமல் மதிமிழந்து நடந்துகொள்கின்றனர் பல்லோர்.

பரிசுத்த முஹர்ரம் மாத நாட்களில் நிகழ்வுறும் இப்படிப்பட்ட ஷிர்க், பித்அத்தான ஆகாத கருமங்கள் பெரும்பாலும் நம் இந்திய நாட்டிலேதான் அதிகம் காணப்படுகின்றன. இந்தியா அல்லாத அரபநாடுகளாய மக்கா, மதீனா, பைத்துல் முகத்தஸ், பக்தாத், குஸ்தன்தனியா, மிஸிர் முதலிய இடங்களில் இவ்விதமாய் நிகழ்வுறுவதாய் தெரியவில்லை.

இவைகள் ஒருபக்கலிருக்க, முஸ்லிம் சமூகத்தைச்சார்ந்த 'ராபிலி' போன்ற வேறு சில

கோஷ்டியினர் நபி அவர்களின் பேரர்களுடைய ஷஹீது மரணத்திற்காக வென்று ஆண்டுதோறும் அளவுக் கதிகமாய துக்கங் கொண்டு, அதை வெளிக்குக் காட்டிக்கொள்வான் கருதி அன்னந்தண்ணீர் உட்கொள்ளாமலும், மார்பில் அறைந்து அடித்துக்கொண்டும், மூர்ச்சித்து கீழே வீழ்ந்துகொண்டும் பல முரண்பட்ட செயல்களை யெல்லாம் புரிகின்றனர். இன்னமும் வேறொரு சாரார் கர்பலாவின் ஷஹீதுகள்மீது துக்கக்கவியெனும் "மர்ஸிய்யா, தஅஜிய்யா" முதலியவற்றைப் பாடுவதாய் முன்வந்து உண்மை சரித்திர நிகழ்ச்சிக்கு மாறாய கட்டுக்கதைகளை யெல்லாம் பாட்டுகளாய்ப் புனைந்து படித்து பண்டைப் பெரியார்களை அவதூறும் இழிவும் படுத்தி வருகின்றனர். இவைகளெல்லாம் இஸ்லாமிய ஷரீ அத்தில் அனுமதிக்கப்படாத காரியங்களும், விரும்பத்தகாதச் செயல்களு மாகுமென்பதில் என்ன சந்தேகம்? இவ்விதச் செயல் கூடாதகாரியங்களெனத் தெரிந்தும் அவற்றைப் புரிவதும், புரிவோரைஆதரித்துஇனாம்களும்,பரிசுகளும் அளிப்பதும் எத்தகைய பேதமை யாகும்?

நிற்க, இமாம் ஹஸன் ஹுஸைன் (ரலி.) அவர்களது பரிதாப மரணத்தை முன்னிட்டு கூட்டங்கூடி வேஷம்போட்டு துக்கப் பாட்டுகள் படித்து "தஅஜியா" புரிவதும், தப்பு மேளங்கள் அடிப்பதும், வாத்திய கோஷம் புரிவதும், முஹர்ரம் மாதம் முதல் பத்து நாட்களில் ஒழுக்கத்து முரணா முறையில் அரூசையான பாட்டுகளைப் பாடுவதும்,கூத்தாடுவதும், மாரடித்துக்கொண்டு, ராகம் பாடிப் புலம்பி யழுவதும், பொய்யான கதைகளைப் புனைந்து கூறி பெரியார்களை கேவலப்படுத்துவதும், வீணாகப் பணத்தை விரயஞ்செய்து சிங்கார வனப் புகள்புரிவதும், துக்கத்தைத் தெரிவிப்பதற்காக பச்சை போன்ற குறிப்பிட்ட நிறத்தில் இம் முஹர்ரமில் உடை பூணுவதும், கையிலோ கழுத்திலோ நூல்கள் கட்டிக்கொண்டு மாமிசம் புசியாமல் சடங்கு செய்வதும், முஹர்ரமில் இமாம் ஹஸன் ஹுஸைன் (ரலி.) அவர்களுடைய பெயரால் தத்தம் சிறுவர்களுக்கு புதியன உடுத்தி பிச்சை யெடுக்கச் செய்வதும், இன்னும் இதுபோன்ற காரியங்களைப் புரிவதுமுற்றுங்கூடாதென்றும்,இவைஷரீஅத்தில்அனுமதிக்கப்படாத பித்அத்தானசெயல்களென்றும் கண்ணியமிகுந்த ஸுன்னத்து வல் ஜமாஅத்தின் உலமாக்கள் தீர்ப்பளித்துள்ளார்கள்.எனவே அவை முழுதும் ஆகாத கருமங்களென்பதை மார்க்கபக்தியும், மதப் படிப்பும், விஷயஞானமும், பகுத்தறிவுமுடைய எவரும் ஆக்ஷேபியாது ஒப்புக் கொள்வரென்பது திண்ணமேயாகும்.

மேற்கூறப்பெற்றது போன்ற ஷிர்க்கு பித்அத்தான காரியங்களும், பஞ்சாநிறுத்தல், தஅஜியா புரிதல்போன்ற காரியங்களும், புலி வேஷம் முதலிய துர்நடத்தைகளும் புரியுங் கோஷ்டியினர் என்ன ஆதார ஆதேயத்தைக் கொண்டு இத்துணை அவசியமாய் அத்தகைய காரியங்களைப்புரிந்து வருகின்றனரோதெரியவில்லை. பித்தளை, தகரத்துண்டுகளை கைகளைப்போல் கத்தரித்து கழியில் சொருகி நிறுத்திவைப்பதனால் அவற்றிற்கு ஏதோ சக்தி வந்து விடுகிறதென்று நம்பிக்கொண்டாடும் மக்கள் அதில் உண்மையும் சத்தியமும் இருக்கிறதாவென ஏனோ உற்றுணர்ந்து பார்ப்பதில்லை.

இத்தகைய பஞ்சா, வேஷம், சடங்கு, ஆர்பாட்டம் ஆகியவற்றால் நன்மை யொன்றும் உண்டாவதில்லை யென்பது ஒருபக்கலிருக்கட்டும்! இவற்றின் காரணமாய் ஏற்படும் நஷ்டங்களோ பலப்பலவாகும். அச்சடங்குகளைப் புரிய ஏராளமான பொருட்கள் செலவிடப்படுகின்றன. முஸ்லிம்கள் பொருளாதார நிலையில் மிகவும் க்ஷீணதசை யடைந்து போயுள்ள இக்காலத்தில் மேற்படி வீணான காரியங்களுக்குநூற்றுக்கணக்காய பணத்தை வாரி விரயஞ் செய்வது அறிவுடைய தன்மையாமோ? மேலும் இவ்வித வீண் சடங்கு, பித்அத்தான காரியங்களை முன்னிட்டு ஷிஆக்களுக்கும், ஸுன்னி முஸ்லிம்கட்கும் வகுப்பு சச்சரவு ஏற்படுவது மிகக் கொடிய தீமையே யாகும்.

ஆகவே இப்படிப்பட்ட கெட்ட காரியங்களையும் பாபச்செயல்களையும், பித்அத் ஷிர்க்களையும் விட்டும் முஸ்லிம் பாமர மக்களை பாதுகாத்து சன்மார்க்க சத்தொழுக்கத்துக்குக் கொண்டு வராங்காங்குள்ள அறிஞர்களும், ஆலிம்களும், அதிகாரிகளும்தக்க முயற்சிஎடுத்துக்கொள்வது அவர்கள் தம் கடமைகளாகும். குறைந்த பக்ஷம் நம் ஸுன்னத்து வல் ஜமாஅத்து முஸ்லிம்களை விட்டேனும்

மேற்படி தீயகாரியங்களை முதலில் ஒழிக்க வேண்டும். இப்பணியே அல்லா ரஸூலுக்கு விருப்பமான திருப்பணியாகும். எல்லாவித ஷிர்க்பித் அத்துகள் ஒழிந்து எங்கணும் சன்மார்க்காசாரம் ஜோதியுடன் வியாபிக்க இறைவன் அருள் புரிவானாக ! ஆமீன் !!

அறிவும் மதமும் அவசியமே.

சன்மார்க்கம், பகுத்தறிவு இவைகட்கிடையில்நெருங்கியசம்பந்தமில்லையென்றுகூறுதல் தவறானகூற்றேயாம். அறிவும்மதமும்ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாத தனிப்பட்ட வஸ்துக்களன்று ஆதலின் மானிடன் அவைகளில் ஒன்றை மட்டில் எடுத்துக் கொண்டு மற்றொன்றை விட்டுவிடக் கூடியவைகளாகயிருக்கவில்லை. சன்மார்க்கமானது ஆன்மார்த்த பரிபக்குவத்துக்குரிய சட்டதிட்டங்களும், ஒழுங்கு முறைகளும் நிரம்பப்பெற்ற நேரிய வழியேயாகும். அவ்வழியில் அறிவென்னும் வாகனத்தின் மீதேறி சீராய்ச் செல்ல வேண்டும்.

மத விஷயத்தில் பகுத்தறிவை யொட்டி உழல்வதென்பதற்கு ஒரளவும் வேண்டும். ஒவ்வொரு சக்தியையும் ஒரு கட்டுப்பாடின்றி விட்டுவிட்டால் அதனால் நலவு ஏற்படுவதற்குப்பகரமாக கெடுதியே விளையுமென்பதை யறியாதார்யாருமிலர்? உதாஹரணமாக மோட்டார் வண்டியில் ஒடக்கூடிய சக்தியிருந்து திருப்புதல் நிறுத்துதல் ஆகிய சக்திகள்யில்லாதிருக்கும்போது அதை ஒடும்படிசெய்யின் அதனால் விளையுந்தீமைமறைந்ததன்று. அவை அளவில்லாமல்ஒடி எங்கேனும் ஒரு சுவற்றிலோ மரத்திலோ பாறையிலோ அடிபட்டு கெட்டுடைந்து போமென்பது திண்ணம். அவ்வாறே துடுக்கான குதிரையும்அதன் கடிவாள கயிற்றைஇழுத்துப் பிடிக்காது அளவை மீறி தளரவிடப் படுமாயின் பின்னர் அக்குதிரையை அடக்க முடியாமல் சவாரி செய்யும் மனிதனது உயிருக்கே விபத்தேற்படுமென்பது உண்மை. ஆதலின் இவ்விரண்டிற்கும் ஒர் அளவு வேண்டும். அவ்வாறே சன்மார்க்காசார விஷயத்தில் பகுத்தறிவை செலுத்துவதிலும் ஒரளவும் நிதானமும் மிக மிக அத்தியாவசியமாய் வேண்டப்படுகின்றது.

நிற்க, மானிடனாய்ப் பிறந்த ஒருவன் அரசனாயினும், ஆண்டியாயினும், விரகுவெட்டிவிற்றுப் பிழைக்குங் கூலிக்காரனாயினும், இரந்துண்ணும் யாசகனாயினும் யாவர்க்கும் சன்மார்க்காசாரம் அத்தியாவசியமானதாகும். மார்க்கவரம்பைமீறி நடப்பவன் மனிதத்தன்மையை மீறி நடப்பவனாவன். மதாசாரமில்லா தொழுகுபவன், கண் இரண்டுமில்லாது கானகத்தேசெல்லும் கபோதிக்கொப்பாவான். சன்மார்க்கமானது மனித வாழ்க்கையின் நலன், இடர், நன்மை தீமை, பாபம் புண்ணியம், சத்தியம் அசத்தியம் முதலியவற்றினை தெளிவுறச்செய்து பக்குவப்படுத்தும் அருஞ்சாதனங்களாகும். மனித சரீரத்துக்கு கண்ணும் அறிவும் வேண்டுமாயிருப்பதே போல், ஆன்ம வாழ்வுக்கு மதமும் ஆசாரமும் அத்தியாவசியமானதா யிருக்கின்றது. அறிவில்லாதவன் நன்மை தீமை தெரியாது நல்வழி கெட்டவழி இன்னதென உணராது குருடனேபோல் தட்டுக்கெட்டுத் தடுமாறிகீழே வீழ்ந்து மாய்வான். அவ்வாறே மதாசாரமில்லாதவன் பாபம் புண்ணியம் இன்னதென தெரியாது. சத்தியம் அசத்தியம் யாதென அறியாது கண்டதே காக்ஷி கொண்டதேகோலமெனக்கொண்டு அஞ்ஞானியாகவும் அவிவேகியாவும் நாஸ்திகனாகவும் அலைந்துத் திரிவன். மதாசாரமின்றி மானிடனொருவன் இறைவனது நல்லடியானாவதென்பது முடியாது. ஆண்டவனின் பக்தனாவதற்கும், ஆன்மமுக்தி பெறுதற்கும், சற்குணநற்சுபாவமிளிர்ந் தொழுகுவதற்கும் சன்மார்க்க சட்டதிட்ட நல்லாசாரம் நிறுவப்பெற்ற நல்வழி மக்களுக்கு வேண்டற்பாலதென்று கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

அறிவிற்கும் மதத்துக்கும் நெருங்கிய சம்பந்த முண்டென மேலே கூறியுள்ளோம். அதனை ஈண்டு சிறிது விளக்குவாம். எனவே

பகுத்தறிவை ஒழுங்காய முறையில் சீர்படுத்தி நடந்துகொள்வதற்கே நல்வழிநன்மார்க்கம் எனக் கூறுதல் நியாயமாகும். ஏனெனின், ஒருவன் தனக்குள்ள அறிவை சீரான முறையில் உபயோகித்துக் கொள்வானுயின் அவன் சத்திய சீலனேயாவன். அறிவை தீயான வழியில் செலுத்திச் செல்பவன் துன்மார்க்கனுவா னென்பதில் ஐயமுண்டோ? மேலும் ஒருவன் அறிவைமட்டும் உபயோகப்படுத்தி அவ்வறிவு கோலும் வழிப்படிமட்டும் செல்வானுயின் அவனும் சத்தியசீலனுய்விட முடியாது. ஆனுல் அறிவானது சன்மார்க்க நல்லாசார முறைக்கேற்ப வழிகாட்டுகிறதா என்பதைப் பெரிதும் கவனிக்கவேண்டியதவசியம்.

நிற்க, அறிவை உபயோகித்து நடந்து கொள்பவனுக்கு இரு உதாரணம் எடுத்துக் கூறுவோம். ஒரு புத்திசாலி சத்தியத்தையே பிரதானமாய்க் கருதி தன் வயிற்றுப் பிழைப்புக்கென்று காடுசென்று நாளெல்லாம் விரகுவெட்டி மாலையில் கடைவீதி கொண்டுவந்து விற்றவிலைகொண்டு வீடேகி சமைத்து மனைவி மக்களை காப்பாற்றுகின்ருன் இன்னெரு புத்திசாலி சத்தியமென்பதை கைகொள்ளாமல், நடுநிசியில் திருட்டுத்தனமாய்ச் சென்று பிறரொருவருடைய வீட்டுச் சுவற்றில் கன்னம் வைத்து உட்சென்று களவாடிக்கொணர்ந்து மனைவிமக்களோடு உண்டு சுகிக்கின்ருன். இவ்வாறுநடந்துவரும் இவ்விருவரும் தத்தம் அறிவு எவ்வழிபோதித்ததோ அதையே பின்பற்றி நடந்துகொண்டனர். ஆனுல் உலகமோ முதல்வன் செய்த காரியம் உத்தமச்செயலென்றும், மற்றவன் செய்தது பாதகச்செயலென்றும் கூறுகின்றது. இருவருஞ்செய்த காரியம் தமது வயிற்றுப்பிழைப்பைக் கருதியேயாமன்ருே? இவ்விருவரும் ஒரே நோக்கத்தை கொண்டு அறிவு கூறிய வழியில் நடந்திருந்தும் இரண்டும் முரண்பட்டச் செயலாயிருக்கின்றது. ஆகவே ஒருவன் அறிவுப் போக்குப்படி நடந்தால்மட்டும் போதாது. அறிவை சன்மார்க்க சட்டதிட்ட நல்லாசாரத்துக்குட்படுத்தி மதப்போதனையையும் அறிவையும் ஒன்றுபடுத்தி சீரானவழியின் பக்கல் நடந்து செல்லவேண்டும். இதனுற்ருன் மனித வாழ்க்கைக்கு சன்மார்க்கம்—அதாவது மதம் அத்தியாவசியமென இறைவனுல் கடமைப்படுத்தப் பெற்றமை காண்க!

சன்மார்க்கமானது, மனிதனுடைய அறிவுப்போக்கு, வரம்பைமீறிச் சென்றுழலாமல் சீரான ஆசார சட்டதிட்டங்கட்குட்படுத்தி வைத்திருக்கின்றது. உலகில் நடக்கும் சர்வ காரியமும் மதாசார கட்டுப்பாட்டின் வரம்புக்குள் அடங்கி அறிவின் ஆதாரத்தால் நிகழ்த்தப்பட வேண்டுமென்பதே ஆசாரத்தின் முக்கிய நோக்கமாகும். அறிவும், மதமுமில்லாமல் இவ்வுலகில் எத்தகைய புண்ணியக் காரியமும் சித்திப்பெருது. மனித வாழ்வுக்கு இவ்விரு அம்சங்களுமே மிகப்பிரதானமானதாயிருக்கின்றது. மனிதனை தீயவழியினின்று தடுத்து, நேர்வழியில் கொண்டு போய் சேர்த்து நற்குணமும் நல்லொழுக்கமும் புகட்டும் சர்வ சாதனங்களும் சன்மார்க்கத்தில் அமைந்திருக்கின்றது. இத்தியாதி மேன்மைகளை நோக்குமிடத்து மக்கட்கு மதம் எத்துணை அவசியமென்பது துலக்கமாகின்றது.

மதாசாரத்துக்குள் கட்டுப்பட்டு, தெய்வ பக்தராகவும், உத்தமராகவும் சிறந்து விளங்குவதில் எம்மட்டோ கண்ணியமும் புண்ணியமுமிருக்க, இக்காலத்திய நவீன சீர்திருத்தக்காரர்களில் ஒரு சாரார் மதாசாரத்துக்குக் கட்டுப்பட்டு சத்தொழுக்கஸ்தராய் நடந்து கொள்வதை கசப்பென வெறுத்து வழி கெடுகின்றனர். இஸ்லாம் மதம் பகுத்தறிவுக்கு முற்றும் ஒத்தமைந்ததாயிருக்க ஒரு சிலர் வழிகேடர்களின் கூற்றுகளை கண்மூடித்தனமாய் பின்பற்றி மதம் அறிவுக்குடன்பாடானதா யில்லையென்றும், முன்னேற்ற நாகரிகத்திற்கு மதாசாரத்தில் வழியில்லையென்றும் தவருகக் கருதி, மதமே நம் முன்னேற்றத்திற்குத் தடைகல்லாயிருக்கின்றது அதனைத் தொலைத்துவிட்டால்தான் முன்னேற்றமடைய முடியுமெனக் கருதி, மதாசாரத்தை கைநழுவவிட்டு 'கண்டதே காக்ஷி கொண்டதே கோலமென' மௌடீகராக நடந்து கொள்ளுகின்றனர். அத்தகையினர் தங்களுக்குள்ள அறிவை நல்வழியில் செலுத்தில் நிதானப்புத்தியுடன் இஸ்லாம் மதாசாரக் காரியங்களை ஆராய்ந்து பார்ப்பார்களாயின் நிச்சயமாக இஸ்லாமிய ஆசாரத்தின் மேன்மை அன்னவர்கட்கு

உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்காமற் போகா. சுருங்கக் கூறுமிடத்து, இஸ்லாத்தின் ஒவ்வொரு கொள்கையும், கிரியையும் பகுத்தறிவுக்கும், இயற்கை நியதிக்கும், இகபர நலனுக்கும் முழுதும் ஒற்றமைந்தவாறே இறைவனால் நிறுவப்பெற்றிருக்கின்றது. எனவே மதப்பற்றற்றுத் திரிவோர் வழிகேடர்களின் பிரசாரத்தைவிட்டு தங்கள் அறிவைத்திருப்பி இஸ்லாமிய மதாசாரத்தின் பக்கல் உய்த்துணர்ந்து பார்த்து உண்மையினைத் தெரிந்து, ஷரீஅத்தின்படி நடந்து இகபரநலன் பெற்றுத் திகழ்வார்களாக!

டில்லிமாநகர் புராதனச் சிறப்புகள்

நம் இந்திய தேசத்தின் சிறந்த-புராதன பட்டணமாய டில்லிமாநகர் பல முஸ்லிம் மன்னர்கள் ஆண்டு வாழ்ந்த சீரிய வனப்பு வாய்ந்த பட்டணமாகும். புராதன மன்னர்கள் பலர் தத்தம் காலங்களில் டில்லி எல்லைக்குள் 7-அரிய ஊர்களை ஸ்தாபனஞ்செய்து அழகுபடுத்திச் சென்றுள்ளார்கள். இந்தியாவுக்கு முஸ்லிம்கள் படையெடுத்து வருவதற்கு முன் ஆண்டுவந்த ஹிந்து மன்னர்களும் அந்த டில்லிமாநகரை, வனப்புப் படுத்துவதில் அதிகப்பற்றுக் கொண்டிருந்தார்களென்று தெரிகிறது.

குதுப் மினார் என்னும் பெரிய ஸ்தூபி, "புரானா கில்ஆ" என்னும் பழயை கோட்டை, ஹுமாயூன் மன்னரின் மக்பரா (கல்லறை), ஜாமிஃ மஸ்ஜித், பல முகலாய குடும்பத்தின் 'மஜார்'கள், காஜா நிஜாமுத்தீன் அவுலியா போன்ற பெரியார்களின் மக்பராக்கள் முதலியவைகள் டில்லியிலுள்ள புராதனக்கால உயர்தரச் சின்னங்களாகும். மேலும் முகலாய அரசர்கள் தம் காலந் தொட்டு டில்லி நகரை பற்பல வனப்புகளால் சிறப்பிக்கக் கருதி அநேக உயர்தர உன்னதக் கட்டிடங்களை கட்டிவைத் திருக்கின்றனர். அவைகளன்றி ஆங்கிலேய அரசாங்கத்தினர் புதிய நகர் ஒன்றை அங்கு நிர்மாணித்துள்ளார்கள் அஃது புதிய டில்லியென சிறப்புடன் இக்காலை விளங்குகின்றது. டில்லிமா நகரில் கண்களைக் கவரச் செய்யும் வனப்புடைய அரண்மனைகள், நந்தவனங்கள், புராதனக் கோட்டை கொத்தளங்கள் மஸ்ஜிதுகள் ஆகியவைகள் அனந்தமிருக்கின்றன.

ஸுல்தான் முஹம்மத் கோரீ என்னும் அரசர் சென்ற கி. பி. 1192-ம் வருடம் டில்லியைச்சேர்ந்த "ராய் புத்தூரா" என்னும் புராதன ஊரையும் வால்கோட் என்னும் கோட்டையையும் பிடித்துக்கொண்டு அங்கு தமது ஜயக்கொடி நாட்டி ஆண்டுவந்தார். இதுதான் டில்லியில் ஏற்பட்ட முதல் இஸ்லாமிய ராஜ்ஜியமாகும். இதற்குப்பின் டில்லிமாநகரில் இஸ்லாமிய ராஜ்ஜியம் தொடர்ந்து பல்லாண்டுவரை வம்சவழியாக நடைபெற்று வந்துள்ளது.

மேலும் ஸுல்தான் முஹம்மத் கோரியுடைய இராஜப் பிரதிநிதியாயிருந்த குத்புத்தீன் ஏபிக் என்பவர் அக்காலை டில்லி எல்லைக்குள் புதிதாய் இஸ்லாமிய ஊரொன்றை ஏற்படுத்தி அபிவிருத்திக்குக் கொண்டுவந்தார். இங்ஙனம் இங்குதமக்கு ஏற்பட்ட வெற்றியை என்றென்றும் உலகம் நினைத்து மகிழ்வுறும் வண்ணம் ஓர் ஞாபகார்த்தமாய் "குதுப் மினார்" என்னும் அரிய பெரிய ஸ்தூபியை நிர்மாணித்து வைத்தனர். இதன் அழகு பொருந்திய வனப்பும் கெம்பீரமும் கண்களைக் கவரத்தக்க காக்ஷியுடையதாகும்.

துக்லக் வம்ச அரசர்களுடைய ஆக்ஷியின் பயனாய் டில்லிமா நகரானது பல்வகை வனப்பும் முன்னேற்றமும் அடைந்தது. ஸுல்தான் கியாஸுத்தீன் துக்லக் என்பவர் டில்லிமாநகரின் மத்தியத்தினின்று கிழக்கில் 5-வது மைலில் "கில்லஅயே துக்லக் ஆபாத்" என வன்மை பொருந்திய பெரிய கோட்டையொன்றை பெரும் பிரயாசையோடு நிர்மாணித்து முடித்தார். அங்கு தான் அவருடைய "மக்பரா" (கல்லறை) அமைக்கப் பெற்றுள்ளது.

ஸுல்தான் கியாஸுத்தீன் துகலக் காலஞ் சென்றதன்பின் அவரது புதல்வர் முஹம்மத்

துக்லக் என்பவர் தமது சிம்மாசன ஸ்தலத்தை துக்லக்ஆபாதினின்று குதுப்மினருள்ள இடத்திற்கு மாற்றிக்கொண்டார். பின்னர் இந்த முஹம்மத் துக்லக் தமது ஞாபகார்த்தமாய் குதுபை யடுத்து "ஜஹான்பனுஹ்" என்றொரு சிறந்த ஊரை ஸ்தாபனஞ் செய்தார். இது நன்கு அழகு பொருந்தியதாயும், போதிய பாதுகாப்புடையதாகவும் சிறந்து விளங்கிற்று.

பின்னர் கி. பி. 1341-ம் வருடத்தில் "ஷியாஹ் இப்னுபதூதா" என்னும் அதிபர் டில்லிவந்து சேர்ந்தார். இவர் வெற்றிபெற்று விஜயஞ் செய்தபோது மேற்கூறப்பட்ட "ஜஹான்பனுஹ்" என்னுமூர் நன்னிலையில் இருந்ததெனினும் இதில் போதிய ஜனவாசமில்லாதிருந்தது. இங்கு இவர் விஜயஞ்செய்வதற்கு முன்னரே முஹம்மத் துக்லக் மன்னர் டில்லியைவிட்டு தக்ஷிணத்திலுள்ள தவ்லத் ஆபாதிற்கு தமது சிம்மான ஸனத்தை மாற்றிக்கொண்டிருந்தார். எனினும்,சில வருடங்கள் கழிந்தபின்னர் மீண்டும் முஹம்மத் துக்லக் பழையபடியே டில்லிக்குவந்து சேர்ந்து இனிது ஆக்ஷிபுரியலானுர். இம்முறை இவர் தமது நகரை முன்னும் பதின்மடங்கு நல்லவிதத்தில் வனப்பும் ஜனப் பழக்கமும் உண்டாகும்படி செய்து முன்னுக்குக்கொண்டு வந்தார்.

முஹம்மது துக்லக் ஆக்ஷிக்குப் பிறகு அவரது சகோதரப் புதல்வராய "பைரோஜ்ஷா" என்னும் அரசர் யமுனு நதிக்கரையில் சில மைல்தூரம் வடக்கில் "பைரோஜ் ஆபாத்" என்றொரு புதிய நகரை ஸ்தாபனஞ்செய்து அதை வனப்படுத்தி ஆண்டுவந்தார். துக்லக் வம்சத்து அரசராய பைரோஜ்ஷா காலஞ் சென்றதற்குப்பின் இந்தியாவின் கண் முகலாய வம்ச அரசர்களின் அரசாக்ஷிதான் தலை சிறந்து விளங்கிவந்தது. பிறகு 1398-ம் வருடம் அமீர்தைமூர் என்னும் அரசர் டில்லியைப்பிடித்து சிலகாலம்வரை இனிது ஆண்டு வந்தார்.

அதன்பின் டில்லிமாநகர் நிரந்தரமாக முகலாய அரசர்களது ஆதீனத்திலிருந்துவந்தது. முகலாயர் முன்னிருந்த மன்னர்களைப் போன்று குரோதம், பகை, போர் முதலிய குணங்களில்லாமல் பரஸ்பரம் நடந்துகொள்ளும் சுபாவமுடையவர்களாய் ஆக்ஷியை இனிது செலுத்திவந்தார்கள். முகலாயர்கள் அரசு புரிவதில் திறமைசாலிகளாயிருந்தது போலவே வீரதீரத்தோடு போர்ப்புரிவதிலும் கீர்த்திப் பெற்றவர்களாயிருந்தனர். அவ்வப் போது ஆண்ட முகலாய அரசர்கள் டில்லிமா நகரையும், சுற்றுப்புறப் பட்டணங்களையும் சீர்திருத்தி பண்படுத்தி அபிவிருத்தி செய்து வந்தனர்.

ஜஹீருத்தீன் பாபர் என்னும் அரசரும் உலகம் போற்றும் முறையில் டில்லிமா நகரை ஆண்டுவந்தார் இவரது புதல்வர்தான் ஹுமாயூன் மன்னராவர். ஹுமாயூன் மன்னர் தமது அருங்குண நற்செயல்களாலும் நீதிநிலவிய அரசியல் முறையாலும் நற்கீர்த்திபெற்று விளங்கினர். இந்த ஹுமாயூன் மன்னர் "தீன்பனுஹ்" என்ற பெயரால் ஒரு ஊரை ஸ்தாபனஞ்செய்து அதை சகல வசதியாலும் வனப்புப்படுத்தி யிருந்தார். இந்நகர் விசாலமுடையதாகவும், மக்கட் பழக்கம் அதிக முடையதாகவும் விளங்கியிருந்தது. அவர் கி. பி. 1556-ல் காலஞ் சென்றுபோனர்.

ஹுமாயூனுக்குப்பின் ஆண்ட 'ஷேர்ஷா ஸூரி' என்பவர் ஹுமாயூன்நிர்மாணித்துச் சென்ற கோட்டையையும் பட்டணத்தையும் இன்னும் பன்மடங்கு வனப்பும் வசதியும் படுத்தி பூர்த்தி யாக்கினர். இதற்கு பின்னர் 'ஷேர்கட்' என்னும் நாமத்தைச்சூட்டி ஜனப் பழக்கம் அதிக முடையதாகவும் செய்வித்தார்.

இங்ஙனம் டில்லியை ஆண்ட அரசர்கள் அதைச் சார்ந்த பகுதிக்குள் பற்பல சமயத்தில் அநேக புதிய ஊர்களை ஸ்தாபித்து வனப்பும் விசாலமும் படுத்திவந்தார்கள். அவ்வாறு புராதனப் புகழுடன் ஏற்பட்ட நகரங்களுள் ஏழுநகரங்கள் கீர்த்திக்குடையயதா யிருந்துவந்தது. இவ்வித நகர்ப்பகுதிகளெல்லாம் தற்போது பிரிட்டிஷ் ஆக்ஷியில் வெவ்வேறு பெயர் நாமங்கள் கொடுக்கப் பட்டு வழங்கி வருகின்றன.

மேலும் டில்லிமாநகரின்கண் சிறப்புற்று விளங்கும் மக்பராக் (கல்லறை) களில் முகலாய வம்சத்தின் சிறந்த அரசராய ஹுமாயூன் மன்னரின் மக்பரா இதுகாலையும் சிறந்ததா யிருந்துவருகின்றது. இன்றளவும்

அது ஹுமாயூனின் ஞாபகார்த்தமாய் விளங்குகின்றது.

அக்பர் சக்கிரவர்த்தி, ஷாஹ்ஜஹான் மன்னர், முதலியவர்கள் டில்லிமா நகரை ஆண்டு நற்கீர்த்திப்பெற்றேகிய பிரதாபம் உலகம் முழுதும் தெரிந்ததாதலின் ஈண்டு விபரித்துக் கூறப்படவில்லை. அக்பர் சக்கிர்வர்த்தி இந்தியாவின் சகலவர்க்கத்தினர்கட்கும் அன்பாளராய் நடந்துகொண்டதால் இன்றும் அவரை உலகம் போற்றுகிறது. 'பத்தஹ்பூர் செச்ரீ என்னும் பகுதியானது டில்லிமாநகரின்கண் ஞாபகார்த்தமான ஸ்தலமாக யிருந்துவருகின்றது.

ஷாஹ்ஜஹான் மன்னர் முதலில் ஆக்ராவில்தான் பிரக்யாதியுடன் அரசுபுரிந்து வந்தார். ஆக்ராவின் கோட்டை அரசாங்கப் பாதுகாப்புக்கு போதிய வசதியும் சாதனமு மில்லாததாயிருந்து வந்ததைக் கருதி 'ஷாஹ்ஜஹான் ஆபாத்' என்று டில்லிக்கு புதிய நாமங்கொடுத்து அதில் சகலவிதமான வசதிகளும் சாதனங்களும் தயார்செய்து திருப்தியுடன் அரசாண்டார். ஷாஹ்ஜஹான் மன்னர் தமது வாழ்க்கையில் இறுதி 8 வருடங்களை டில்லிமாநகரி லிருந்துதான் அரசாண்டு பிரக்யாதியுடன் காலங்கழித்தார். 'கில்அயேமுஅல்லா' என்னுங் கோட்டை 1639-ம் வருடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1643-ம் வருடம் தான் பூர்த்திப்பெற்றது. எனவே இக் கோட்டையும் சகல சிறப்புகளும் சாதனங்களு முடையதா யிருந்தது.

டில்லியில் முடிசூண்டு கீர்த்திப் பிரதாபத்தோடு ஆண்ட முஸ்லிம்களுள் சுல்தான் ஆலம்கீர் ஔரங்ஜேப் பாஷாவும் சிறந்தவராவர். ஔரங்ஜேப் மற்றஅரசர்களேபோல் மனப்போனபடி யெல்லாம் நடந்துகொள்ளாமல் சன்மார்க்கவரம்பை மீராதவராகவும் தெய்வபக்தராகவும், மார்க்காபிமானியாகவும் விளங்கிவந்தார். சத்தியத்துக்காக அவர் பலபோரும் புரிந்துள்ளார். இத்தகையமன்னர் டில்லியை ஆண்டு தர்ம ராஜ்ஜியம் புரிந்துவந்த காலத்தில் டில்லியின்கண் 20 லக்ஷம் ஜனங்கள் வாழ்ந்திருந்துவந்தனர் என்று சரித்திரக்காரர்கள் கூறியுள்ளனர். மேலும் ஔரங் ஆபத் என்னு மூர் இவரது ஞாபக சின்னமாய் நிறுவப் பெற்ற ஸ்தலமாகும்.

கி. பி. 18.வது நூற்றூண்டு வரைக்கும் டில்லிமா நகரமானது யாதொரு மறுதலுமில்லாமல் முகலாயர்களின் அரசாங்க தலைநகரமாகவே யிருந்துவந்தது 18-வது நூற்றூண்டு தொடங்கிய பின்னர் தான் டில்லியின் க்ஷேமத்துக்கு மராட்டியர்களால் பலவித பாதகங்கள் ஏற்படலாயின. கி.பி. 1738-ம் ஆண்டில் மராட்டிய தலைவனுன பாஜீ ராவ் பேஷ்வா என்பான் திடு கூறுக டில்லியின் மீது படையெடுத்து வந்தனன். நாடு நகரங்களை அழித்துச்சேதப்படுத்தினன். எனினும் கூடிய சீக்கிரமே அவன் திரும்பத் துறத்தப்பட்டனன்.

பின்னர் கி.பி. 1756-ல் அஹ்மத்ஷா அத்தாலி என்பவர் டில்லி மீது படையெடுத்து வந்தார். இன்னவரின் படையெடுப்பின் காரணமாய் அந்நாட்டுப் பொருளாத நிலை ஓரளவு நலிந்து க்ஷீணதசை யடைந்தது. எனினும் இன்னவரால் அதிக பாதகம் ஏற்படவில்லை.

டில்லி சரிதையின் மற்றெரு பெரிய நிகழ்ச்சியானது கி. பி. 1784-ல் ஏற்பட்ட பஞ்சமேயாகும். இக்கொடிய பஞ்சத்தின் காரணமாய் அந்நாட்டிலுள்ள ஜனத்தொகையின் மூன்றில் ஒரு பாகத்தினர் பஞ்சத்தால் வாடி நலிந்து மாண்டு போயினர். 1803-ம் வருடம் பிரிட்டிஷாரால் எழுதிவைக்கப் பட்டிருந்த ஒரு ரிப்போர்ட்டின் படி அதுவரை டில்லியைச் சூழ்ந்த 600-கிராமங்களின் மக்கள் பஞ்சத்தால் மடிந்தனர் என்று தெரிகிறது.

அந் நிகழ்ச்சிக்குப் பின் இந்தியாவின் கண் முகலாய ராஜ்ஜியம் நிலைகுலைந்து அழியத் தலைப்பட்டுப் போகத் தொடங்கிவிட்டது. எனவே 1788-ம் வருடத்தில் குலாம் காதிர் கான்ருஹேலா என்பவர் இரண்டாவது ஷா ஆலம் மன்னர் மீது படையெடுத்துத் தாக்கித் தோற்கடித்தது முதல் முகலாய அரசக்குடும்பம் அப்டியே நசித்து கேவலமுற்றது.

முகலாக ராஜ்ஜிய வன்மைக்குன்றி இந்தியர் அரசாக்ஷி நிலை குன்றி விட்டதை யுணர்ந்த ஆங்கிலேயத் தலைவரான லார்டு லீக் என்பவர் கி. பி. 1802-ம் வருடம் இந்தியாவின் இராணுவங்களை முறியடித்து டில்லிமாநகரை பிடித்துக்கொண்டார் அதற்கும்பின்னிருந்து "கத்ரு" என்னும் சிப்பாய்க் கலகம் ஏற்படும் வரை மொகலாய அரசர்களின் பெயர்கள் விளங்கிக் கொண்டிருந்ததாயினும் உண்மை

யில் தெஹ்லியின் மீது பிரிட்டாஷாரின் கொடியே பரந்துகொண்டிருந்தது.

அதன்பின் டில்லிமாநகரில் "கத்ரு" என்னும்கொடிய சிப்பாய்கலகம் நிகழ்ந்தது இது சமயத்தில்டில்லியின்ஜனத்தொகைஒன்றரைக் கோடியே தானிருந்துவந்தன. சிப்பாய்கலகத்தினுல் டில்லிநகரிலுள்ள உயிர் பொருள் இவைகள்மிகவும் சேதங்களடைந்தன. அதன்பின் முகலாய அரசகுடும்பத்தின் கீர்த்தி கண்ணியம் செல்வாக்கு யாவுமே அழிந்து போனதுடன் அப்பட்டணத்தின் சிறப்பும் இருந்த இடம் தெரியாது போய்விட்டது.

இந்தியாவில் புதிதாய் ஏற்பட்ட பிரிட்டிஷ் (வர்த்தக) அரசாங்கத்தினர் கல்கத்தாவை தங்கள் தலைநகராகச் செய்து கொண்டனர். ஆனுல் ஐந்தாம் ஜார்ஜு சக்கிரவர்த்திக்கு புராதனப் புனிதம் வாய்ந்த டில்லிமாநகரில் தான் முடிசூட்டுவிழா வைபவம் இனிது நடைபெற்றது. அதுமுதல் அழிந்து போன டில்லியின் சிறப்பு மீண்டும் வியாபிக்க ஆரம்பித்தது. ராஜதானி கல்கத்தாவை விட்டு டில்லிக்கு மாற்றப்பட்டு அஃது ராஜதானிபட்டணமாய் ஆய்விட்டது.

முன்னைய முகலாய மன்னர்கள் தங்கள் ராஜ்ஜிய ஞாபகார்த்தமாய் டில்லியின் ஒவ்வொரு பகுதியை சிறந்த நகராக்கி வனப்புப் படுத்திவைப்பதுபோன்று, இந்திய பிரிட்டிஷ் சர்க்காரும் "புதிய டில்லி" யை நிர்மானித்து முடித்துவிட்டனர். இப்புதிய டில்லி நிர்மாணத்துக்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் தாராளமாய் செலவிடப்பட்டுள்ளன. இந்தப்புதியடில்லி நிர்மாணக் கட்டிட வேலையானது இந்தியத் தலைநகரை கல்கத்தாவினின்று டில்லிக்கு மாற்றிய சமயமான 1911-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு 1931-ம் வருடம்தான் இனிது பூர்த்தியடைந்தது. புதிய டில்லி நிர்மாண வேலைபூர்த்தி யடைவதற்குள் நான்கு வைஸிராய் (இராஜப்பிரதிநிதி) கள் வந்து தம் கடனுற்றிச் சென்றுவிட்டார்கள். ஆனுல் புதிய டில்லி விழாவை நடத்திவைக்கும் சிறப்பும், பாக்கியமும் லார்டு இர்வின் துரைக்குத் தான் கிடைத்தது. இதனுல் அவர் அதிருஷ்டசாலி யென்பதில் ஐயமில்லை

மேற்கூறிவந்த விஷயங்களிலிருந்து டில்லி மாநகரின் கீர்த்தியும், பண்டைப்பிரதாபமும், தற்கால வனப்பும், உயர்வும் நன்கு விளங்குகின்றது. இந்தியாவில் பிரிட்டிஷார் காலடி வைப்பதற்கு முன் இஸ்லாமிய முகலாயமன்னர்கள் திறம்பட இராஜ்ஜியபாரம் நடத்தி சகல துறையிலும் டில்லிமா நகரை சிறப்பித்து வைத்துச் சென்றதைப் பின்பற்றித் தான் பிரிட்டிஷாரும் அதை தலைநகராகக் கொண்டு உயர்வுபடுத்தினர். டில்லி நகரானது முகலாய ராஜ்ஜிய காலத்திலிருந்தே முஸ்லிம்கள் மயமான நன்னகரமாயிருந்து வருகின்றது. மேலும் டில்லியில் முஸ்லிம்களுக்கு நல்ல செல்வாக்கும், முஸ்களது உர்தூ, பார்ஸி, அரபி ஆகியபாஷைகட்கு நல்ல மதிப்பும் அபிவிருத்தியும் இருந்து வருகின்றன. புராதன முஸ்லிம் இராஜ்ஜிய நீதியின் கீர்த்திப்பிரதாபத்தை விளக்குவதற்கு ஆங்குள்ள "ஜாமிஃ மஸ்ஜித்" ஒன்றே போதுமானதாகும். இதல்லாது பழைய அரண்மனை, கோட்டை மதில்களும், அழகிய வனங்களும் அமைந்திருப்பது டில்லியின் கீர்த்தியை சர்வத்துறையிலும் மேன்மைப்படுத்திக் காட்டுங்காக்ஷிகளாகும்.

காயற் பட்டணம்.

பஞ்சாயத்துக் கோர்ட்டுத் தலைவர் நியமனம் :—சதா பொதுஜன சேவையில் ஈடுபட்டு உழைப்பவராய ஜனுப் M. K. A. மூஸா ஸாஹிப் அவர்கள் பஞ்சாயத்துக்கோர்ட்டுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அநேக பொதுநல காரியங்களில் ஈடுபட்டு வருவதுமன்றி நம் பெண்மணிகள் தாய்ப்பாஷையின்றி தவித்துக்கொண்டிருந்த குறையை நிவர்த்தித்து பெண் கல்லூரியை ஸ்தாபிதஞ்செய்தும், ஆஸ்பத்திரியில் பெண் டாக்டரை நியமிக்கும் விஷயமாக பல அரும்பெரும் காரியங்கள் புரிந்தும், பாழடைந்து பாசி படர்ந்திருந்த பல துறவுகளைச் செப்பனிட யூனியன் போர்டாரைத் தூண்டி அதற்கானவற்றைச் செய்தும், தேவையான இடத்தில் புதியன உண்டாக்கியும், முஸ்லிம் சிறுர்கள் கல்வியின்றித் திரிவதையுணர்ந்து மார்க்கக் கல்வியோடு இலௌகிகக் கல்வியும் கற்பிக்க தக்க ஸ்தாபனத்தை ஏற்படுத்த முயற்சித்தும் இன்னம் பற்பல நன்மைகளையும் செய்திருக்கின்றுர். இத்தன்மைப்போலவே பொதுநல காரியங்களில் மென்மேலும் சேவை புரிவாரென்று எதிர்பார்க்கின்றோம் என ஜனு M. K. K. முஹையத்தீன் எழுதுகிறுர்.

உலக முஸ்லிம்களும், 'யவ்முந்நபீ' விழாவும்.

முஸ்லிம் சோதரர்காள்! நெடுங்காலமாய் இத்தரணியில் நம் தீனுல் இஸ்லாத்தின் ஆசாரம், ராஜீய அபிவிருத்தி ஆகியவைக ளின்மீது நானாவிதத்திலும் எதிரிகளால் எதிர்ப்புப் புரியப்பட்டு வருகின்றனவென் பதை நீங்களெல்லீரும் நன்கறிவீர்கள். ஒரு பால் இஸ்லாமல்லாத புறநாடுகளிலுள்ளார் ஆங்கு இஸ்லாமையும், இஸ்லாத்தின் நந்திரு நபியையும் மிகமிக இழிய தோரணையில் எடுத்துக்காட்டி, பொய்ப்பிரசாரஞ் செய்து மக்களுள்ளத்தில் அழுக்காறும், குரோதமும் உண்டாகுமாறு செய்கின்றனர். இன்ன மும் தீய சூழ்ச்சியினல், உலகமக்களது உள் ளங்களின்று நபிகள் நாயகம் ரஸுல் (ஸல்.) அவர்கடம் கண்ணியமும் பிரதாபமும் சத் தியமும் ஒழிந்துப்போக வேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் புரிகின்றனர். மற் ருெருபாலோ நம்இஸ்லாமிய நாடுகளிலேயே வழிகெட்ட நம்மவர் சிலரால் விபரீதமும் அசத்தியமும் தீமையுமான கொள்கைகளும் எண்ணங்களும் பரப்பப்பட்டு வருகின்றன. இத்தீங்குபுரியுங் கோஷ்டியார் எவ்வாற்ரு லேனும் இஸ்லாமிய மக்களின் உள்ளங்களில் சமுசயத்தையும், வழிகேட்டுக்குரிய அவநம் பிக்கையையும் வேரூன்றச் செய்துவிட வேண்டுமென எண்ணங் கொண்டுள்ளனர். இன்னமும், இத்தரணியின் கண்ணுள்ள உண்மை முஸ்லிம்களெல்லாம் ஏகதெய்வக் கொள்கை, சகோதரதுத்வம், சமரஸம் ஆகிய நல்லாசாரங்களின் பாக்கியத்தால் சிறந்து அன்பூபூண்டு விளங்கும் கட்டுப்பாட் டையும் அருஞ்சக்தியையும் குலைத்துப்போட வேண்டுமென எண்ணுகின்றனர்.

எதிர்ப்பிரசாரமும், சத்திய இஸ்லாமும்

இஸ்லாமிய விரோதிகள் ஏகதெய்வ நம்பிக் கையையும், நஞ்சமூகத்தினரின் ஐக்கிய சக்தி யையுங்குலைந்து விடுவதற்காகவும், தங்கள் தவறுன மார்க்கத்தினை முன்னுக்குக்கொண்டு வருவதற்காகவும் மட்டிலடங்காப் பிரயத் தனங்களையும் சூழ்ச்சிகளையும் புரிகின்றன ரென்பதை ஈண்டு கவனிப்போமாக.

கிறிஸ்துவ மார்க்கம், பிரசாரத்திற்கியந்த மதமல்ல வாயினும் அக்கோஷ்டியார் தம் மார்க்கத்தை பரப்புவான் வேண்டி உலகில் வழங்கும் 900 பாஷைகளுள் 853 பாஷை களில் இதுவரைதங்கள் "பைபிள்" கிரந்தத் தை மொழிப் பெயர்த்துப் பரத்தியுள்ளனர். உதாரணமாய் இங்கிலாந்தில் நிறுவப்பெற்று ள்ள "பிரிட்டிஷ் அண்ட் பாரின் பைபிள் சொஸைட்டி" க்கோஷ்டியார் இதுகாறும் 83 கோடி பைபிள் கிரந்தப்பிரதிகளை உலகின் நானுத்திசையும் வியாபிக்கச் செய்துள்ளனர்.

நம் சுத்த சத்திய உண்மை இஸ்லாமிய மக்களின் ஊக்கம் எங்ஙனமிருக்கிற தென் பதை சிறிது கவனிப்போம்:—நமது தூய்மை யான இஸ்லாம் மார்க்கமானது குர்ஆன், ஹதீது இவைகளின் அஸ்த்திவாரத்தின் மீது இனிது நிறுவப்பெற்ற சன்மார்க்கமாகும். "நிச்சயமாக குர்ஆனானது சர்வலோகத் தார்க்கும் இன்னுபதேசமாகும்" என்று இறைவனே அறிவித்துள்ளான். அவ்வா றுள்ள கண்ணியம் மிகுந்த உயர்திரு குர் ஆன் இதுகாறும் சுமார் 21 பாஷைகளில் மட்டுந்தான் மொழி பெயர்க்கப் பெற்றிருக் கின்றது. இவ்விருப்த்தொரு பாஷை யிலும் சுமார் 16பாஷைகளிலுள்ள குர்ஆன் மொழிப் பெயர்ப்புகள் மிஷனரிகிரிஸ்த்து வர்களால் தப்புந்தவறுமாய் உண்மையைத் திரித்து எதிர்ப் பிரசாரத்துக்காகவென்று எழுதப்பட்டனவைகளாகும். இது போக சொற்பத்தொகை பாஷைகளில்தான் நம் முஸ்லிம்களால் நம்சத்திய திருமறை மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தின் மூல கிரந்தமான குர்ஆன் பிரசாரமே இவ்வித நிலையிலிருக்க, ஹதீது ஷரீபை எங்ஙனம் நஞ்சமூகத்தினர் கவனிக் கப்போகின்றனர்? இந்நிலைகளை நோக்கு மிடத்து, பரிசுத்த இஸ்லாம் மதம் ஆதியில் இத்தரணியின்கண் தனது அருந்திரு ஜோதியை நிலவச்செய்து ஓங்கி மிளிர்ந்ததன் பின், இதுகாலை இஸ்லாம் மதம் அவநம்பிக்

கையாலும் எதிர்ப்பிரசாரக் குரோதங்களி ஞலும், அஞ்ஞானிகளின் அந்தகாரத்திஞலும் ஆழ்த்தப்பட்டுப் போயிருக்கின்றது.

மதப்பிரசாரத்தின் அவசியம்

முஸ்லிம் சோதரர்காள்! இஸ்லாம், உலக மனைத்தையும் சூழ்ந்துகொண்டிருக்கும் மார்க்கமாகும். ஏனெனின் எம் பெருமானுர் நபிகள் திலகம் உலக தயாளர் முஹம்மத் (ஸல்.) அவர்கள் ஒரு கூட்டத்தார்க் கென்ருே, ஒரு நாட்டார்க் கென்ருே, இத்தரணியில் இறுதி நபியாய் அவதரித்தார்களில்லை. சர்வலோகத்தாரையும் சன்மார்க்க சத்திய வழியிலாக்கி வைப்பதற்கென்றே நபிகளுதர் (ஸல்.) அவர்கள் தோன்றி, அவ்வாறே தொண்டாற்றி இஸ்லாத்தைப் பரத்தினர்கள். ஆகவே இதுகாலை அவர்களது உம்மத்துகளாகிய நாமும் அப்பெருமானரது அடிச்சுவட்டினைப் பின்பற்றி இக்காலதேச வர்த்தமானத்துக் கொப்ப, சீரிய சிறந்த வழிகளில் மதப் பிரசாரஞ் செய்து 'என்னிடம் கேட்டவைகளை மானிடர்கட்கு அறிவித்துவிடுங்கள்' என்னும் நாயகக் கட்டளையைச் சிரமேற்ருங்கி நடக்கவேண்டும்.

இந் நவீன நாகரீகக் காலத்தில், சமாச்சாரச் சாதனம் அச்சுச் சாதனம் பிரசார வசதி ஆகியவைகளினல் இவ்வுலகமானது ஏகத் பிரசங்க மண்டபமாய் அமைந்திருக்கிறதெனச் சொல்வது தகும். (ஏனெனின் ஒரு விஷயத்தை சொற்பகாலத்துள் இத்தரணி எங்கும் பரவச் செய்தற்குரிய சகல சாதனமும் இக் காலை அமைந்துள்ளன.)

நிற்க, இவ் வகிலத்தின்கண் இக்காலை ஜனத்தொகையில் சுமார் நான்கிலொரு பாகத்தினர் முஸ்லிம்களா யுள்ளனர். அங்ஙனம் உலகெங்கும் முஸ்லிம்கள் பரவியிருந்துங் கூட இஸ்லாமிய சிறப்பும் மான்மியமும், நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் மகிமையும் சத்தியமும் உலகமக்கள் யாவரும் உணர்ந்து கொள்ள வழியின்றி, யாண்டும் இஸ்லாத்தைப்பற்றியும் நந் திருநபியைப் பற்றியும் பிறவர்க்கத்தினர் உள்ளங்களில் தப்பபிப்பிராயமும், இழி வெண்ணமும் குடிகொண்டிருப்பது நமக்கே இழிவானதாமன்ருே? ஆகவே உலக முஸ்லிம்களாகிய நாமெல்லோரும் ஏகமாய்ச் சேர்ந்து எல்லோரின் சக்திப்பிரயத்தனங்களைக் கொண்டு சர்வலோகப் பிரசாரஞ் செய்யவேண்டிய சந்தர்ப்பம் இதுவே யாகும்.

'யவ்முன்னபீ' (ஸல்.) விழா.

அத்தகைய அரும்பெரும் பிரசாரம் புரிதற்கு எல்லா நாட்டாரும் வருடத்தில் ஒரே நாளை ஏற்படுத்திக்கொள்ளல் சிறந்ததாகும். அதுவே நபிகள்நாயகம் (ஸல்.) திருஜனனம் புரிந்த புண்ணியதினமாம் அந்நந்நாளை எங்கும் "யவ்முன்னபீ" என்ற பெயரால் அழைக்கப்படல் வேண்டும். அத் திருநாளுக்காக வென்று நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களின் திருச்சரித சம்பவங்கள் அமைந்துள்ள ஒரு பிரசங்கம் எழுதப்படல்வேண்டும். அவ்வாறு ஒரேவிதமாக எழுதப்பெற்ற பிரசங்கத்தை எல்லா இஸ்லாமிய நாடுகளிலும் பரத்திவைப்பான் வேண்டி, ஆங்காங்குள்ள மதாபிமானமுள்ள முஸ்லிம்கனவான்கள் தங்கள் தனம், பிரயாசை இவைகளின் சகாயத்தைக் கொண்டு உலகத்தில் வழங்கிவரும் சர்வபாஷைகளிலும் மொழிபெயர்த்து பரத்தவேண்டும். இதனை இஸ்லாமிய பத்திரிகைகளிலும் பிரசுரித்து உலக மனைத்திலும் பரவும்படி செய்யவேண்டும்.

மேலும் இவை உலகத்தின்கண் எத்திசையிலும் பரவி ஆங்காங்கு வசிக்கும் முஸ்லிம்கள் இந்த "யவ்முன்னபீ" தினத்தன்று திரு நபி சரிதப் பிரசுரத்தை தம் தம் ஊர் மக்களுக்குப் பரத்தவும், மகா ஜனங்களை அன்று ஏகமாய் ஓரிடத்தில் கூட்டிப் பிரசங்கம் செய்யவும் பெரும் முயற்சி புரிதல்வேண்டும். அங்ஙனம் கூட்டப்படும் மகாசபைகளில் முஸ்லிம்கள், முஸ்லிமல்லாத இதர சமூகத்தினர்கள் யாவரும் பேதமின்றி கூடிக்கலந்து எம் பெருமானுர் (ஸல்.) அவர்களுடைய மான்மிய தத்துவ சத்திய வாழ்க்கையை உணர்ந்து படிப்பினை பெற வசதி யேற்படுத்தல் வேண்டும். ஆங்காங்கு நபி சரித்திரப் பிரசுரங்களை ஏராளமாக இலவசமாய் விநியோகித்தல் வேண்டும். இங்ஙனம் இனிது புரியப்படுமாயின் உலக தயாளர்-ரஸூலே கரீம்-முஹம்மத் (ஸல்.) அவர்களுடைய வாணுள் நிகழ்ச்சிகள் உலகமக்களுக்கு நன்கு தெரிந்துவிடுவதோடு இஸ்லாத்தின்மீதும் திருநபியின்மீதும் ஒரு சில கோஷ்டியார்க் கிருந்துவரும் தப்

பபிப்பிராயங்களும் ஒழிவதற்கு தக்க அனு கூலமாகும்.

யவ்முன்னபீ இயக்கத்தின் பயன்

இந்த இயக்கம் முஸ்லிம்கட்கு மட்டுமின்றி இதர சமுகத்தினர்கட்கும் அபரிமிதமான பிரயோஜனந் தருமென்பது திண்ணம். இதனுல் முஸ்லிம்களுக்குள் சத்திய பரிசுத்த தீனுல் இஸ்லாம் வியாபித்தோழுகும் மேலும் நஞ்சமூகத்தின் அந்தரங்க ஒழுங்கீனங்களெல்லாம் சீர்திருத்தமடைவதற்கு தகுந்த உதவியாக யிருப்பதுடன், இஸ்லாமிய ஐக்கியத்துக்கு அதிதீவிர பிரயோஜனங்களும் ஏற்படும். இன்னமும் இதனுல் உலகின்கண் இஸ்லாத்தின் ஏகதெய்வத்துவமும், சர்வதேச ஜனஐக்கியமும் இனிது தோன்றும்.

இவ்வியக்கத்தின் பயனுல் இஸ்லாத்தின் உண்மையும், நேர்மையுமான நற்போதனையும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய சரித்திரத்தின் உண்மை வரலாறுகளும் உலக மக்களுக்கு தெள்ளன விளங்கிவிடும். இப்போதனையையும், நபி சரிதையுண்மையும் இன்னும் பதின்மடங்கு ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவாவும், இஸ்லாத்தை ஆராய்ந்துணர வேண்டுமென்ற பிரீதியும் உலக மக்களுக்கு உதிக்கும்.

இதுகாலே இவ்வுலகின்கண் இஸ்லாத்தைப்பற்றியும், இஸ்லாயமித் தூதர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பற்றியும் பரவிப் போயிருக்கும் தப்பபிப்பிராயங்களெல்லாம் தூர விலகியொழியும். இன்னும் இஸ்லாமியப் பிரசாரத்திற்கு உதவியும் அனுகூலமுங் கிடைக்கும். லோக மக்களுக்குள் ஏகமான ஒற்றுமையும் சமத்துவ சமரஸமும், நற்குண நல்லொழுக்கமும், ஆன்மார்க்க பரிபக்குவ சாதனமும் இனிது ஏற்படும். சமூகச் சண்டைகள், மதப்போராட்டங்கள் யாவும் இல்லாதொழிந்துபோய் சாந்தமும் சமாதானமும் ஏற்படும். தவிர இப்பூ உகத்தின்கண் ஒவ்வொரு திசையிலும் மனிதவாழ்வில் சுதேச சுதந்திரம், சர்வதேச ஐக்கியம் ஆகிய நல்லெண்ணமும் ஏற்படுவதற்குள்ள வாயல் திறக்கப்பட்டுப்போய் விடும்.

இதற்கு எந்நாள் ஏற்றது?

இவ்வளவு அரும் பிரயோஜனங்களைத் தரும் இயக்கத்தை நடத்திவைப்பதற்கு எந்தநாள் ஏற்றது? என்ற கேள்வி யொன்றிருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வோர் புதுப்புது தினத்தை ஏற்படுத்தி உலக மக்களெல்லாம் அதனை ஏற்றுக்கொள்ளுமாறு செய்யுங்காரியம் மிகச் சிரமமானதாகும். ஆகவே இதற்கென்று குறிக்கப்படும் நாள் சர்வதேச மக்களெல்லோராலும் மிக முக்கியமானதாகவும், சிரேஷ்டமானதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்ட நாளாகவும் ஆயிருத்தல் வேண்டும். இன்னமும் அந்நாளின் தேதியை கவனிக்கும் முறையிலும், அதனை உலகத்தின் முஸ்லிமல்லாதார்களுங் கூட ஒப்புக்கொண்டு கொண்டாடுவதற்கு விசேஷ காரணங்களிருத்தல் வேண்டும். இத்தியாதி சிறப்புகளும் அம்சங்களும் பொருந்தியிருப்பது ரபீஉல் அவ்வல் மாதம் 12-ந் தேதியேயாகும். இந்த 12-ந் தேதியானது, நபிகள் நாயகம் உலக சிரேஷ்டர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது ஜனனதினமாக யிருப்பதல்லாமல் இவ்வுலகின்கண் நபியாக அனுப்பப்பெற்ற தினமாகவு மிருக்கின்றது. மற்றொரு வகையில் இத்தேதியானது இஸ்லாமிய பிரசாரத்தின் முதல் நாளாகவு மிருக்கின்றது. இஸ்லாமிய உம்மத்துகள் இத்தரணியில் தோன்றிய தினமும் அதுவாகவே யிருக்கின்றது. ஏனெனின் இந்தத் தேதியில்தான் ஆண்டவன் கட்டளைப்படி இத்தரணியில் இஸ்லாத்தின் அடிப்படைப் போடப்பட்டது. இதே தினத்தில்தான் நமது நபிகள் திலகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் தங்களது புனித மதப்பிரசாரம் புரிய ஆரம்பித்தார்கள். ஆகவே இந்த தினத்தைத்தான் முஸ்லிம்கள் சர்வ தேசத்துக்குமுரிய பிரசாரத்திற்கேற்ற தினமாகக் கொண்டாடவேண்டும். இந்த திருநாளின் விழாவானது இஸ்லாமிய உம்மத்தும் அவ்வும்மத்தின் எஜமானராகிய நபி பெருமானும் ஜனனமான தினத்தின் ஞாபகார்த்த மென்றுமட்டுங் கருதிவிட வேண்டாம். உண்மையில் இது அல்லாஹ்வுடையவும், அவனது புனித ரஸூலுடையவும் ஏகமான சன்மார்க்கத்தைப் பின்பற்றி நடந்துய்யத்தக்க புனித தினமுமாகும்.

உலக முஸ்லிம்களிடம் ஓர் வேண்டுகோள்.

இவ்வுலக மனைத்திலுமுள்ள இஸ்லாமிய பத்திரிகைகளும், இஸ்லாமிய சங்கங்களும் அவை தத்தம் நாடுகளில் மேற்கூறப்பெற்றுள்ள முறைப்படி "யவ்முன்னபீ" விழாவை நடத்திப் பூர்த்திப்படுத்த வேண்டுமென கோருகின்றோம். குறைந்த பக்ஷம் இருமுஸ்லிம்களிருக்கும் சிற்றூர்களிலுங்கூட "யவ்முன்னபீ" தினத்தில் கூட்டங்கூடி அந்தந்த ஊர் தாய்பாஷைகளில் நபீ அவர்கள் சரிதப்பிரசங்கம் மொழிபெயர்க்கப்பெற்றதை இலவசமாக விநியோகிக்கவேண்டும்.

இந்திய முஸ்லிம்களிடம் ஓர் கோரிக்கை

உலகமனைத்திலும் குறிப்பிட்ட தினமொன்றை ஏற்படுத்தி, அன்று நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களுடைய முன்மாதிரியை உலக மக்களிடம் பிரசாரம் செய்வதற்காகவென்றே அத்தினத்தை நியமனஞ் செய்தல் வேண்டும். அந்த தினத்தில் முஸ்லிம்கள், உலகத்தோர்க்கு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் நற்குணங்களைப் போதித்தல், பிரசங்க நூற்களை இலவசமாக விநியோகித்தல் ஆகிய புனித சேவைகளைத் தவிர்த்து வேறெவ் வேலைகளுஞ் செய்தலாகா.

நிகழும் ஹிஜ்ரீ, 1350-ம் வருடத்து ரபீஉல் அவ்வல் மாதம் 12-ந் தேதி (28-7-31) காலையிற் பொழுது புலர்ந்ததும் ஒவ்வொரு ஊரின் முஸ்லிம் மக்களையும் நபிகள் நாயகத்தின் "உஸ்வயெஹஸனா" (அழகியமுன்மாதிரி) வைப் பிரசாரம் செய்வதில் கண்ணுங்கருத்துடன் உழைப்பவராய்க்காணப்படல் வேண்டும். முஸ்லிம் இளவாலிபர்கள் அன்றையத் தினம் தங்கள் கரங்களில் திரு நபி சரித்திரப் பிரசங்கப் பிரதிகளை ஏராளமாய் எடுத்துக் கொண்டு மத்ரஸாக்கள், கலாசாலைகள், பாடசாலைகள், மஸ்ஜிதுகள், சத்திரங்கள், கடைவீதிகள், ரயில் வண்டி நிலையங்கள், காரியாலயங்கள், கப்பல் துறைகள் ஆகிய பொது இடங்கட்கெல்லாம் சென்று இலவசமாய் தாராளமாய் விநியோகிக்க வேண்டும். இங்ஙனஞ் செய்யப்படுமாயின் இவ்வுலகமெங்கும் நந் திரு நபி நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களுடைய அருங்குணங்களும், சீரிய ஒழுக்கங்களும் ஜோதி மயமாய் இலங்கி வியாபிக்கும்.

'யவ் முன்னபீ' தினத்திற்காகவுள்ள சகல ஏற்பாடுகளையும் செய்து முடிப்பதற்கு இன்னுஞ் சின்னாட்களே தான் பாக்கியாக யிருக்கின்றன. இதற்குள் நாம் இரு காரியங்களை இனிது செய்து முடிக்க வேண்டும். (1) யவ்முன்னபீ யன்று படிக்க வேண்டிய "ஸீரத்" புத்தகத்தை அந்தந்த மாகாணங்களில் வழங்கப்பெறும் பாஷைகளில் மொழிபெயர்த்து ஏராளமாய் அச்சிட்டு இலவசமாய் விநியோகிப்பதற்குரிய ஏற்பாடு செய்து விடல் வேண்டும். (2) 'யவ்முன்னபீ' தினத்தை விமரிசையாய்க் கொண்டாட வேண்டுமென்று ஒவ்வொரு இலாக்காகளிலும் பெரிய அறிக்கை விளம்பரங்களும், துண்டுப்பிரசுரங்களும் ஒட்டியும் விநியோகித்து, கூட்டங்கள் கூடவும் பிரசங்கங்கள் புரியவும் முன்னேற்பாடுகள் செய்து முடித்தல் வேண்டும். எனவே ஒவ்வொரு ஊரிலுமுள்ளவர்கள் முன்னெச்சரிக்கையாகவே தம்மூர் ஜனங்களுடைய அளவுக்கேற்ப இத்தனை பிரதிகள் வேண்டுமென 'ஸீரத்துன்னபீ, பிரசாரக் கமிட்டிக்கு எழுதி வேண்டிய பிரதிகளை வரவழைத்துக் கொள்ள வேண்டும். இவ்வித முன்னேற்பாடு செய்து கொண்டால் தான் கூட்டங்கள் கூடவும் பிரசங்கங்கள் புரியவும், புத்தகங்களை விநியோகிக்கவும் சவுகரியமும் மன நிம்மதியும் ஏற்படும்.

மதிப்புரை.

மஹா ஜீவாமிர்த தைலம் :—இப்பெயருள்ள தைலப்புட்டி ஒன்று வரப்பெற்று அதனை உபயோகித்ததில், அது பற்பல அருமையான மூலிகைகளால் செய்யப்பெற்றுள்ளதென தெரிகின்றது. அது மூளையிலுண்டாய சகல உஷ்ணங்களை நீக்கி மூளையை நன்றாகக் குளிரச்செய்யும் சக்திவாய்ந்தது. சகல கண் நோய்களைப் போக்கி நேற்திரப்பிரகாசத்தைக் கொடுக்கின்றது ; பித்தத்தை சாந்தி செய்வதில் ஒப்பற்றதென்றே கூறலாம். நல்ல தூக்கத்தை உண்டுபண்ணுகின்றது ; தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தருகின்றது. 4 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை 1—0—0. கிடைக்குமிடம் : 'ஸூல்த்தான் மருந்துசாலை' No. 66, மலைப்பெருமாள் தெரு, சென்னபட்டணம். (ப—ர்)

"யவ்முந் நபீ" கொண்டாட்டம்

'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்க அறிக்கை.

முஸ்லிம் அன்பர்காள் !

சென்ற ஆண்டு நம்" ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரின் அரியமுயற்சியால், லாஹுர்ஸீரத் கமிட்டியாரால் இயற்றப்பெற்றஉர்து பிரசுரமானது நங் தமிழ் தேசத்தாருக்கென செந்தமிழில் மொழி பெயர்க்கப்பெற்று 10 ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு,தென்னாட்டிலுள்ள அநேக ஊர்களுக்கென்ன? ரங்கூன் ஸைகோன், பினங் சிங்கப்பூர், மலாயா, சிலோன், ஆகிய வெளிநாடுகட்குங் கூட அனுப்பிவைக்கப்பட்டு எங்கும் நந்திருநபி நாயகத்தின் (ஸல்.) ஜனனதினம் வெகு சிறப்பாய் கொண்டாடப் பெற்றதென்பதை தாங்களெல்லீரும் நன்குணர்வீர்கள். ஆனல் போதிய காலமின்மையால் அவைகளில் சில இடங்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் போய்ச் சேர இயலாமலாய் விட்டது.

அடுத்துவரும் ரபீஉல் அவ்வல் "யவ்முந் நபீ" யிற்காகவும், சென்ற ஆண்டைவிட சிறந்த விதத்தில் நம் சங்க சார்பாக "நபி சரித்திர" நூலைத் தமிழிப் பாஷையில் மொழிப் பெயர்த்து பிரசுரித்து எல்லா ஊர்கட்கும், வெளிநாடுகட்கும் அனுப்ப சகல ஏற்பாடுகளும் இனிது புரியப்பட்டு வருகின்றன. இவ்வருடம் முன்னிலும் சிறந்த நூல் அச்சிடப்படும்.

நிற்க இவ்வருடம் யவ்முந்நபீவிழாவானது அநேகமாய் 1931-ம்வூ ஜுலை மீ 28ந் தேதி செவ்வாய்க் கிழமைதினம் வருமெனத் தெரிகிறது. அதற்குள் ஆங்காங்குள்ள முஸ்லிம்கள் செய்யவேண்டிய முன்னேற்பாடுகள் பலவுள. சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் யவ்முன்னபீ தினவிழாவை சகலதுறையிலும் சிறந்த விதத்தில் கொண்டாட இந்தியாவிலும்,இதரநாடுகளிலும்,குறிப்பாக நந்தென்னாட்டிலுமுள்ள முஸ்லிம் அன்பர்கள் ஒவ்வொருவரும் முழு ஊக்கத்துடன் உழைக்க வேண்டும். அதற்காக முற்கூடியே செய்யவேண்டிய வேலைகளும், அன்று நடத்த வேண்டிய காரியாதிகளும் "உலக முஸ்லிம்களும் யவ்முந் நபீ விழாவும்" என்னும் தலயங்கத்தின் கீழ் விபரமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளை அனுஷ்டானம் புரிவதற்கு ஆங்காங்குள்ளோர் தக்க முயற்சி புரிதல் அத்தியா வசியமாகும்.

மேலும் அன்றையதினம் ஒவ்வொரு இடங்களிலும் கூட்டங் கூட்டி, தக்க ஆற்றலுள்ள அறிஞர்களை கொண்டு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடையஉயரிய வாழ்க்கை சரிதை,சீரிய குணாதிசயங்கள், அப்பெருமானாரின் போதனைகள் ஆகியவைகளைப் பற்றி இனிய பிரசங்கஞ் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அன்று வினியோகிப் பதற்கென்றே நம் சங்கத்தாரால் மொழி பெயர்த்துஅச்சிடப்பெற்ற பிரதிகள் இத்தனை தேவை என்பதை முற் கூட்டியே தெரிவித்து விடல்வேண்டும். அவைகளைக் கவனித்து மிகுதமான பிரதிகள் பிரசுரிப்பதற்கு ஹேதுவாகயிருக்கும். சென்ற ஆண்டில் மிகவும் குறுகிய காலத்தில் அநேகர் அதிகமான பிரதிகளுக்கு ஆர்டர் செய்தும் கிடைக்காமல் வருந்தும்படி நேரிட்டது. ஆதலால் தங்களுக்கு இத்தனை பிரதிகள் தேவை என்பதை நம் சங்கத்துக்கு தெரிவித்து விடவேண்டும். அதிலும் இந்தியாவிற்கு வெளிதேசங்களில் வதியும் கனவான்கள் அவ்வுத்தம கைங்கரியத்திற்காக முற்கூட்டியே முற்படல் வேண்டும். அவ்வாறு செய்தால் தான் அவர்கள் கோரிய காரியம் கைகூடி வரும். பிரதிகள்வேண்டிய கனவான்கள் முன்பாகவே தேவையான வற்றிற்கு ஆர்டர்களை பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர் இதற்குள்ள மற்ற விபரங்கள் இன்ஷா அல்லாஹ் அடுத்த ஜுலை மாத இதழில் பிரசுரிக்கப்படும்.

இங்ஙனம்
காரியதரிசிகள்
ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்
48, அங்கப்பன் தெருவு, மதராஸ்.

சுகாதாரம்—தலைநோய்

தலைநோயின் தொல்லை இது காலை அநேகருக்கு சாதாரணமாய் பரவி இருந்து வருகின்றது. எனவே தலைநோயானது சிரசுக்குள் ஏற்படுகின்ற அந்தரங்க கோளாறுகளினால் உண்டாவதில்லை யென்பதையும், இதர இராஜ கருவிகள் கேடுறுவதனுல் ஏற்படுகின்றதென்பதையும் எப்போதும் பிரதானமாய் கருதவேண்டும். தலைவலி உண்டாதற்குறிய சில காரணங்களை ஈண்டு கூறுவாம்:

தலைநோயிற்குறிய காரணங்கள்.

ஹிருதயக் கமலத்தில் ஏதேனும் இடர் ஏற்படினும், ஜீரணசக்தி பாதிக்கப்படினும், இரத்த ஓட்டத்தில் எவ்வாற்றேனும் பேதகம் ஏற்படினும், உடனே தலைநோய் ஏற்பட்டுவிடுகிறது. சிற்சில சமயங்களில் தலைநோய் கடுமையாகுங்கால் தலை அதிக உஷ்ணமுடையதாகவும் ஆய்விடுகின்றது; பாதங்கள் குளிர்ந்துவிடுகின்றன. இத்தகைய தலைநோயானது எக்காலும் வேதனையளித்துக்கொண்டேயிருக்கும். இவ்வாருள்ள தலைநோய், அளவுக்கதிகமாய் வெய்யிலில் அலைவதினுலும், சாதாரணமான ஜுரம் கடுமையாய் விடுவதினுலும், அமிதமான உணவு புசித்து விடுவதினுலும் ஏற்படுகின்றது.

இன்னமும் குண்டிக்காய் (கிட்னி) களின் செயன்முறை ஒழுங்கற்று விடுவதனுலுங்கூட தலைநோய் கடுமையாகி வாதனையுண்டாகின்றது. தொண்டைக்குள் வீக்கம், கரகரப்பு இவைகள் உண்டாவதாலும் தலைநோய் ஏற்படுகின்றது.

தலைநோய் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போமாயின் அது "டாய்பாயிட்" என்னுஞ் சுரம் வருவதற்குறிய அடையாளமாகும். கடுமையான தலைநோயோடு தேகத்தில் குளிச்சியும் காணப்படுமாயின் இது "நிமோனியா" என்னுஞ் சுரம் ஏற்படுமென்னும் அச்சம் உண்டாயிருக்கின்றது.

வைசூரி நோய் ஏற்படுவதற்குமுன் உண்டாகும் தலைநோயானது பெரும்பாலும் மிகக் கடுமையானதாவும் வேதனையைத் தரத்தக்கதாகவுமிருக்கும். பொதுவாகக் கூறுமிடத்து ஆண்பாலரைவிட பெண்மணிகட்கே தலைநோய் அதிகமாய் ஏற்படுவதுண்டு.

தவிர தேக உழைப்புடையோர்களைக் காட்டினும் மூளைஉழைப்புடையோர்கட்கே அதிகமாக தலைநோய் ஏற்படுவதுண்டு. இதற்குரியக் காரணம் யாதெனின், அவர்களுடைய தேக உழைப்பானது அவர்களது தேக சுகத்திற்கு பெரும் உதவியாகயிருக்கின்றது. மேலும் இத்தகையோர் நரம்பு சம்பந்தமான வியாதிகளில் பீடிக்கப் படுவதுமில்லை.

இன்னும், அதிகமாக புகையிலையை (பீடியாகவோ, சுருட்டாகவோ, சிகரெட்டாகவோ) மிதமிஞ்சி உபயோகிப்பதும், இராக்காலத்தில் அதிகமாக கண் விழிப்பதும் தலைவலி உண்டாவற்குரிய காரணங்களாகும். சமயங்களில், ஏதேனும்மொரு விஷயத்தைப் பற்றி அதிகமாக சந்தோஷப் படுவதைக் கொண்டும் சிலசமயங்களில் தலையில் நோய் ஏற்படுகின்றது.

மானிடர்கள் அற்ப விஷயங்களைப் பற்றி கோபங்கொண்டோ சந்தோஷப் பட்டோ தன் நிலைமையை இழந்துவிடும் சமயங்களிலும் தலைநோய் ஏற்படுவதுண்டு. தம்முடைய விருப்பத்திற்கு மாறுன யாதொரு விஷயம் நிகழ்ந்து அதைப்பற்றி தன்னுடைய வெறுப்பை வெளியிடாமல் அடக்கிக்கொண் டிருந்தாலும் தலைநோய் ஏற்பட்டுவிடுகின்றது.

பெரும்பாலும் பெண்மணிகள் யௌவனப் பருவ மடையுஞ் சமயம் அவர்கட்குதலைநோய் ஏற்படுவதுண்டு. ஆனல் ஆண்கட்கு அவ்வாறன்று. மேலும் மோட்டார் வாகனங்களில் அதிகமாய் சுற்றித் திரிபவர்கட்கு மற்றோர்களைக் காட்டினும் தலைநோய் மிகவும் குறைவாக ஏற்படுகிறதென அனுபவத்தில் தெரியவருகின்றது.

பரிகாரம்.

தலைநோய் ஏற்பட்டவர்கள் அது உண்டானதற்குரிய காரணம்யாதாகுமென கண்டுபிடித்து அக்காரணத்தை நீக்க முயற்சிக்கவேண்டியது. அக் காரணம் நீங்குவது கொண்டு தலைநோயும் அநேகமாக நீங்கிவிடுவ

துண்டு. பின்னும் நோய் இருந்தால் மற்றும் சிகிச்சா முறைகளை கைகொள்ளலாம்.

அவைகளாவன:—சரீரப்பியாசம் செய்தல், கவலையற்று மனோ நிம்மதியா யிருத்தல், தீமைதரும் ஆகாரத்தை நீக்கிவிடல், ஆழ்ந்து நித்திரைக் கொள்ளல், தேனீர்-காபி புகையிலை முதலியன உபயோகிப்பதை விட்டொழித்தல் ஆகியவைகள் தலைநோயை நீக்குவதில் மிக்க பிரயோசன முடையவைகள். பின்னும் தலைநோய் கடுமையா யிருக்குமாயின் உடலில் இறுக்கமாய் அணிந்துள்ள ஆடைகளை தளர்த்தி விட்டுவிடவேண்டும். நித்திரை தான் தலைநோய்க்கு மேலான மருந்தென சில டாக்டர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். ஆகவே தலைநோய் ஏற்பட்டவர்கள் நன்கு துயில்கொண்டு விழித்தால் தலைநோய் தானாகவே நீங்கிவிடும்.

மேலும், தலையையும் பிடரியையும் நல்ல விதமாய் பிசைந்து தேய்ப்பதும் தலைநோய்க் குறிய நல்ல சிகிச்சைதான். ஜுரத்தின் கடுமையினால் தலையில் நோய்தோன்றி தலை அதிக உஷ்ணமாகவு மிருந்தால் குளிர்ந்த ஜலத்தில் சுத்தமான துணியைநனைத்து தலைமீது வைப்பதும் தலைவலியைநீக்கும். இதனால் தலைநோய் ஆரோக்கிய முண்டாவதுடன் சிரசின்உஷ்ணமும்குறைந்துவிடுகின்றது. சிலர் இத்தகைய சந்தர்ப்பங்களில் நெற்றியில் மட்டும் ஈரத் துணியைப் போடுவதுண்டு. இதனால் அவ்வளவாகப்பிரயோசன மேற்படுவதில்லை. ஆதலால் தலைமுழுதுமே ஈரத்துணியைப் போடவேண்டும். தலையில் போட்ட துணிகள் ஈரம் சாய்ந்துவிடின் அதை எடுத்துவிட்டுமற்றொரு ஈரத்துணியைப்போடவேண்டும். ஐஸ்(பனிக் கட்டியை உடைத்து ஓர் பையில் போட்டு அதைத் தலைமேல் வைத்தலும் மிக்க சிலாக்கியமானதே. இதற்கெனவே தொப்பி போன்ற பைகள் தயாரிக்கப் பெற்று கடைகளில் விற்கப்படுகின்றது. அதற்கு ஐஸ் தொப்பி என்று பெயர் கூறப்படும்.

தலைநோய் ஏற்படுங்கால் பெரும்பாலும் பாதம் குளிர்ந்திருக்கும். இத்தகைய சந்தர்ப்பங்களில் வெந்நீர் ஜலத்தொட்டியில் காலை வைத்திருப்பதுநலம். பாதங்களை உஷ்ணமாக வைத்திருப்பது தலைநோய் வராமல் தடை செய்வதற்குச் சாதனமாகும். சுடு தண்ணீரில் சில முடர் குடிப்பதும் தலைநோய்க்கு மிக்கபலனளிக்கும். ஆயினும்ஆகாரம் புசிப்பது கூடாது.

என்றும் மலச்சிக்கல் ஏற்படாமல் திரேகத்தைப் பேணிக்கொள்பவர்கட்கு தலைநோய் ஏற்படுவதில்லை. குறித்த நேரத்தில் மலவிர்த் செய்யும் அப்பியாசத்தைக் கைகொண்டவர்கட்கு மலச்சிக்கல் ஏற்படுவதில்லை.

விஞ்ஞான விகசிதங்கள்.

தேகத்திற்குள் கிருமிகள் யுத்தம்.:— உலகத்தின் யாவற்று பொருட்களையும் நுண்ணிய கிருமிகள் சூழ்ந்துகொண் டிருக்கின்றன வென்பது வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயம். அவ்வாறே நம் மனிததேகத்திலுங் கூட அக் கிருமிகள் ஏராளமாய்நிரம்பி யிருக்கின்றனவாம். இக் கிருமிகள் பார்வைக்குப் புலனாகாத அத்துணை நுண்ணியவைகளா யிருக்கின்றனவாம். நாம் அசுத்தமான காற்றை சுவாசிப்போமாயின் அவை ஆயிரக் கணக்காயும் லக்ஷக்கணக்காயும் நம் தேகத்தினுட் பிரவேசித்து விடுகின்றனவாம். இஃது இவ்வாறிருக்க நமது சரீரத்தினுள் பல பாகங்களிலும் பரவியுள்ள இரத்தத்திலுங் கூட கணக்கிலடங்காக் கிருமிகள் நிரம்பியிருக்கின்றன வென்பது மருத்துவ நிபுணர்களின் ஆராய்ச்சியில் தென்பட்டதாகும். இங்ஙனம் இரத்தத்திலுள்ள கிருமிகட்கும், சுவாசத்தின் மூலமாய் வெளியிலிருந்து சரீரத்துட் பிரவேசித்த கிருமிகட்கும் தேகத்தினுள் பெரும்போர்மூண்டு ஒன்றை யொன்றுகொன்றுபோடுகிறதாம். எக் கிருமிக் கூட்டம் பெரும்பான்மையா யிருக்குமோ அவற்றிற்கு வெற்றி யேற்படுகிறதாம். வெற்றி வெளிக் கிருமிகளுக்கு யேற்படுமாயின் மனிதனுடைய நல்ல இரத்தம்கெட்டு நோயும் வியாதிகளும்

உண்டாகித் துன்பங்கள் ஏற்படுகின்றன. பொதுவாக மனிதனுக்கு நோய்ஏற்படுவதின் காரணம் அசுத்தக்காற்றில்நிரம்பியுள்ள கிருமிகள் சுவாசவாயிலாய் சரீரத்தினுட் சென்று இரத்தத்தை கெடுத்து விடுவதினுலேயாம். ஆகவே ஒவ்வொருவரும் தம் தேகாரோக்கியத்தை பாதுகாத்துக்கொள்ள சுத்தமான காற்றையே சுவாசிக்கவேண்டும். துர்கந்தம் வசிக்குமிடங்களில் இருத்தல் கூடாது கிருமிகள் யுத்தத்தால் மனிதனின் சுகம் கெடுகிறது.

டெலிபோனில் கலியாணம் :— டெலிபோன் காரியாலயங்களில் வேலைசெய்யும் பெண்கள் நிரம்ப அழகு பொருந்தியவர்களாக யிருப்பதுடன் சுகபோக மனுபவிப்பதற்கும் ஏற்றவர்களாக யிருக்கின்றன ரென்பது மேனுட்டினரின் எண்ணமாகும். உதாஹரணமாக லண்டன் டெலிபோன் காரியாலயத்தினின்றும்ஒவ்வொருவருஷமும் எழுநூறு (700) பெண்கள்வரை விவாகஞ் செய்துகொள்ளும் எண்ணத்தோடு வேலையை ராஜிநாமாச் செய்துவிடுகின்றனர். இவ்வாறு விவாகசம்மந்த மேற்படுவதற்குக் காரணம், 'போனில்' பேசும் வார்த்தைகளைக் கேட்டு அவர்களது இனிய குரலினுல் ஆடவர்கள் மயங்கிப் போவதேயாகும். ஆதலின் காரியாலயத்திலிருந்தே கலியாணம் முடித்துக் கொள்ள விரும்பும் கன்னிகைகட்கு விவாகச் செலவு முழுவதையும் காரியாலயத்தார் கொடுக்கக் கடமைப் பட்டுள்ளார்களாம். இதனுல் அக்காரியாலயத்தினர்க்கு வருஷந் தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவாகின்றனவாம்.

உருளைக்கிழங்கில் ரப்பர்:— ஹாலெண்டின் பொருளாராய்ச்சி சாஸ்திரி யொருவர் உருளைக்கிழங்கிலிருந்து பசையெடுத்து அதனுல் நேர்த்தியான ரப்ப செய்யும் முறையைக் கண்டுபிடித்து விட்டார். எனவே இதுபோழ்து ஹாலெண்டில் உருளைக்கிழங்கின் மாவு அரைக்கும் யந்திரக் காரியாலயங்கள் அநேகம் ஏற்பட்டுவிட்டது. இவ்வாறு தயாராகும் ரப்பர் உறுதியாகவும் நேர்த்தியாகவும் விலை மிக சகாயமாகவுமிருக்கிறதாம். எனவே மரப்பாலினின்று தயாரிக்கப்படும் ரப்பரின் அவசியம் தற்போது குறைந்து வருகின்றது.

அகில உலக இராணுவச் செலவு:— உலகத்திலுண்டாய சகல தேச அரசாங்கங்களும் 1930-ம் வருடம் மட்டும் தத்தம் இராணுவப்படைகளின் நிர்வாகத்துக்காக வென்று 89 கோடி பவுன்கள் செலவு செய்துள்ளன ரென்று, உலகத்தின் பற்பல தேச அரசாங்கவரவு செலவு கணக்கினின்று ஒரு அமெரிக்க அறிஞர் கணக்கெடுத்துள்ளார். இப்பெருந்தொகையில் மேனுட்டார் மட்டும் தம்பெரும் இராணுவங்கட்காக 52 கோடி பவுன் செலவு செய்திருக்கின்றனராம். சென்ற 1929-ம் வருடத்தில் துருக்கி யொன்று தவிர மற்ற கீழ்நாட்டரசாங்கங்கள் தம்இராணுவங்கட்காக அதிகப் பணஞ் செலவளிக்க வில்லை.

நோயாளிகட்கு தலையணைப்பாட்டு. :— மேனுட்டில் கெமிடன் கம்பனியார் தலையணையில் ரேடியோசக்தியை இணைத்து, உலகத்தின் நாஞபகுதியிலும் ஆங்காங்கு நடைபெறும் பாட்டுக்கச்சேரிகளை அத்தலையணை மூலமாய்க் கேட்டு இன்புறும் வழியை யேற்படுத்தி விட்டார்கள். இப்புதிய ஆராய்ச்சியானது ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளுக்காக வென்றே கண்டு பிடிக்கப்பட்டதாம். உலகமத்திய ரேடியோ ரிஸீவருடன் இத்தலையணை இயந்திரம் இணைக்கப்பட்டிருப்பதால் உலகத்தில் ரேடியோவில் நடைபெறும் எவ்விதப் பாட்டுகளையும் அதன் வாயிலாகவே கேட்டுக் கொள்ளலாமாம்.

உலகில் உயர்ந்த மலைச்சிகரம் :— உலக மனைத்திலும் ஹிமாலியா மலைச்சிகரங்களே மிக உயர்ந்தவை யென யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. அதிலும் அம்மலைச்சிகரங்களில் 'அயூரிஸ்டு' என்ற சிகரமே எல்லாவற்றினும் உயர்ந்த தென்று முடிவு செய்யப்பட்டிருந்தது. அது தவிர்த்து மற்ற சிகரங்களின்உச்சியினளவை ஆராய்ந்து பார்த்து அதன் உயரத்தைக் கண்டுபிடிக்க இயலாத காரியமாகவே யிருந்து வந்தது. ஆனுல் இது போழ்து, அமெரிக்காவிலுள்ள பூகோள-தேச ஆராய்ச்சி சங்கத்தினர் 'அயூரிஸ்டு' மலைச்சிகரத்தைவிட மிகமிக உயர்ந்த வேறென்றைக் கண்டு பிடித்துவிட்டனர். இதனை இந்தியாவிலிருந்து பார்த்தால்தெரிய வராது திப்பத் பிரதேசத்திலிருந்து பார்த்தால் மிக உயர்ந்த இருசிகரங்கள் தெரிகின்றனவாம். இவ்வாராய்ச்சி இன்னும் பலரால் நடைபெற்றே வருகின்றது.

ஆசிரியர் குறிப்புகள்

பர்மாக் கலகம் :— நீர்வளம், நிலவளம் முதலிய சகல வனப்புக்களும் ஒருங்கே அமையப் பெற்ற நாடுகளில் பர்மா நாடும் ஒன்றென்பது உலகம் நன்குணர்ந்த விஷயம். இதனை யுத்தேசித்தே பல்லாண்டுகட்டு முன் நம் இந்தியரில் சிலர் ஆங்குச் சென்று வசித்தனர். பிறகு நாளடைவில் ஆயிரக்கணக்காய மக்கள் விஜயஞ் செய்யவும் வியாபாரம், தொழில் முதலியன அபிவிருத்திப் புரியவும் முனைந்தனர். இன்னும் பல்லாயிரக் கணக்காய பூமிகளுக்குச் சொந்தக்காரர்களாயினர். எனவே, இவர்கட்கு கூலியாட்கள் தேவைப்பட்டமையால் லட்சக் கணக்காய இந்திய மக்கள் கூலி வேலை செய்வதற்கென ஆங்குச் சென்றனர். இவ்வாறு இந்தியர்கள் பர்மா நாட்டிற்குச் சென்று வாசஞ் செய்து மேலோங்கித்தழைத்து உயர் நிலைக்கு வருவதைக் கண்ணுற்ற பர்மியர் குரோதங்கொண்டு இந்தியர்கட்கு விரோதமாய்ப் போர்த் தொடுத்து, பர்மாவின் பலபாகங்களில், கொள்ளை கொலை முதலிய கொடுஞ் செயன் முறைகளைக் கையாடினர். இற்றைக்கு அந்நாட்டின்கண் புருஷரையிழந்த பெண்டிரும், பெற்றோர்களைப் பிரிந்த மக்களும் பரிதபித்துழலும் பயங்கரக் காக்ஷி உன்னற் பாலதாகும். இத்தகைய கொடுங் கலகத்தை அடக்கிவிட கவர்ன்மெண்டார் முயற்சி எடுத்தும் கலகக் காரர்களின் அட்டகாசங்களே அளவுக்கு மிஞ்சி தாண்டவமாடுவதால், எவ்விதத்தும் அக்கலகத்தை அடக்குவான்வேண்டி இந்தியாவிலிருந்து பஞ்சாப் ரிஜிமெண்டின் 4-வது துருப்பும், மான்செஸ்டர் ரிஜிமெண்டின் 2-வது துருப்பும், பலூஜி ரிஜிமெண்டின் 3-வது துருப்பும் பர்மாவிற்கு அனுப்ப உத்தரவு பிறப்பிக்கப் பெற்றிருப்பதாய்த் தெரிகிறது. எனவே, இம்மூன்று துருப்புகளும், கடிதில் பர்மா சென்று ஆங்கு நடைபெறும் அகோரக் காட்சியை அடக்கப் போதிய முயற்சி எடுத்துக்கொள்ளுமென எதிர்பார்க்கின்றோம்.

சென்னை மாகாண முஸ்லிம் மகாநாடு —நம் மத் தலைவர் உயர்திரு மவ்லானா ஹஸரத் மோஹானி அவர்கள் தலைமையின் கீழ், நம் சென்னை மகாண முஸ்லிம் 2-வது மகாநாடு, கடந்த திங்கள் 18-ம் தேதி இனிது நடைபெற்ற விவரங்கள் இவ்விதழின் கண் வேறு சில பக்கங்களில் பொறிக்கப் பட்டுள்ளன. அவற்றினை ஊன்றிக் கவனிக்கும் நேயர்கட்கு மவ்லானாப் பெரியாரின் ருசிகரமான சொற்பொழிவின் கருத்துகள் இனிது புலனாவதுடன், மகாண முஸ்லிம்களின் சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்த மகாநாடென்பதும் நன்கு விளங்கக் கிடக்கின்றது. நம் மாகாணத்திலுள்ள பல சங்கங்கள் தத்தம் பிரதிநிதிகளை அனுப்பியும், கடிதங்கள், தந்திமூலமாகவும் நந் தென் இந்தியாவின் கண் வதியும் பெரும்பாலான முஸ்லிம்கள் தனித் தொகுதியை ஆதரித்திருப்பதிலிருந்து, நம் மாகாண முஸ்லிம்களில் 100-க்கு 98-பேர்கள் தனித் தொகுதியையே ஆதரிக்கின்றனரென்பது வெள்ளிடை விலங்கலேயாம். உண்மை இங்ஙனமிருக்க, வடநாட்டுத் தலைவர்களில் ஒரு சிலர் இதற்கு மாறுய்க் கிளர்ச்சிகள் பல புரிந்துவருவது வியப்புக் குறியதே! எனினும் ஹிஸ்ஹைனஸ் போபால் நவாப் அவர்களின் நன் முயற்சியால் ஆங்கு இருகக்ஷி முஸ்லிம் தலைவர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்று, இக்காலை நந்தேயத்தில் நிகழ்வுற்று வரும் கிளர்ச்சி சம்பந்தமாக பல விஷயங்கள் விவாதிக்கப் பெற்று, இறுதியாக இரு தரப்பினரும் தத்தம் சார்பினருடன் கலந்தாலோசித்துச் செய்த முடிவை பல முக்கிய தலைவர்களுடன் விவாதித்து ஒரு நல்ல முடிபுக்கு வரவேண்டுமென தீர்மானித் திருக்கின்றனர். எனவே, மீண்டும் போபாலில் முஸ்லிம்களின் கூட்டம் கூடி நம்மனோர் கோரும் கோரிக்கைகள் இனிது ஈடேறுமென எதிர்பார்க்கின்றோம்.

சந்தா நண்பர்களுக்கு

1931 ஜனவரி முதல் V. P. முதலியன தபாலாபீஸில் 3 நாளைக்கு மேல் வைத்துக் கொள்ளப் படமாட்டாதென போஸ்ட் ஆபீஸார் அறிக்கை வெளியிட்டிருப்பதால் நண்பர்கள் V. P. க்கு ஆர்டர் செய்யாமல் சந்தாவை முன்பணமாக அனுப்பி பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளும்படி விரும்புகின்றோம்.

கடந்தஆண்டில் சந்தாதாரராயிருந்து நமது மாசிகையை அன்போடு பாராட்டி வந்த கனவான்கள் நடைபெறும் 1931-ம் வருஷத்திற்குரிய சந்தாத் துகையை முன்பணமாக அனுப்பி வைத்து இஸ்லாம் மார்க்கத்திற்கும், சமுகத்திற்கும் இணையிலா தொண்டாற்றி வரும் நமது 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' மாசிகைக் கென்றும் குன்ரு ஊக்கத்துடன் போதிய ஆதர வளித்து தினே தினே அபிவிருத்திக்குக் கொண்டு வருவார்களென எதிர் பார்க்கின்ளேம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்துகை மிகவும் சொற்பமா யிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது நண்பர்களுக்கு சிரமமாக யிருக்கும் ; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு 77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு & Co அவர்களிடமும்,

பெடரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் கிள்ளானி லுள்ள ஜனப் K. A. பக்கீர் முஹம்மத் ஸாஹிப் அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் 385, மங்கமாரி ஸ்ட்ரீட் சுகரசம் & Co. தர்கா மஸ்ஜித் பேஷ் இமாம் மௌல்வி முஹம்மது யாகூப் சாஹிப் அவர்களிடமும்,

கொளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் க்ராஸ் ஸ்ட்ரீட் டிலுள்ள நம் சங்கக் காரியதரிசி ஜனப் A. M. K. ஹாஜி முஹம்மது ஷரீப் மரைக்காயர் அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத் துகையை செலுத்துமாறு கோருகின்றோம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர் பார்க்கின்றோம்.

"மானேஜர்"

ஹிபாஜத்துல் இஸ்லாம்

48, அங்கப்பன் தெரு, மதருஸ் G T.

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள் :—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் **A. M.** அப்துல்லாஹ் சாஹிப் & Co,
77, மார்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

ஜனுப் ஹாஜீ **K. O.** முஹம்மது இப்ருஹீம் சாஹிப்,
31, ரப்பா ஸ்டிரீட்.

மெஸர்ஸ் **K. A.** பக்கீர் முஹம்மத் & Co,
P. O. Box. 52.

பினங்

ஜனுப் **V. O.** ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டா ரோடு.

ரங்கூன்

ஜனுப் மல்லவீ முஹம்மத் யாக்கூப் சாஹிப்
சுகரசம் & Co, 385, மங்மரி வீதி.

கொழும்பு

ஜனுப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,
220, **2nd** கராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் **A. M. K.** ஹாஜி முஹம்மது ஷரீப்,
மரைக்காயர் & பிரதர்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு.

ஜனுப் மல்லவீ **M.** ஸுல்த்தான் அஹ்மத் ஸாஹிப்,
1/222 அங்கப்ப நாய்க்கன் தெரு.

மெஸர்ஸ் ஹாஜி **M. M.** காதர்பகீர்ருவுத்தர் & கம்பெனி,
21, சைனுபஜார் ரோடு.

மெஸர்ஸ் **M. A.** காதர்பாவா & பிரதர்ஸ்,
206, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works, & Edited & Published by Moulvi A.R Abdur Rahim Saheb
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.